பக்கங்கள்: 15

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 27 ஞாயிற்றுக்கிழமை 12.03.2023 கதிர் 123

## வெளிநாடு சென்ற படை அதிகாரிகள் 13 பேர் இதுவரையில் நாடு திரும்பவில்லை

கொழும்பு, ஏப்ரல் 12 பிரிகேடியர் உட்பட 13 இலங்கை இராணுவ அதிகாரிகள் தனிப்பட்ட பயணமாக வெளிநாடு சென்ற பின்னர் நாடு திரும்பவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

படைகளைவிட்டு அதிகாரிகளே தப்பியோடும் இத்தகைய சம்பவங்கள் பாதுகாப்பு அமைச்சுக்குப் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன. ☞2

## மொட்டுவின் தவிசாளராக சிவில் சமூகப் பிரதிநிதி

### யோசனை முன்வைப்பு

கட்சியின் தவிசாளர் பதவிக்குஅரசியல்சாா்பற்றசிவில் சமூக பிரதிநிதி ஒருவரை நியமிப்பது தொடர்பில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன ஆராய்ந்துவருகின்றது.

இதுதொடர்பில்மொட்டுக் கட்சியின் பொதுச்செயலாளர் சட்டத்தரணிசாகரகாரியவசத்திடம் வினவிய போது, இவ்வாறான ஒருவரை நியமிக்குமாறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன என்று குறிப்பிட்டார்.

அத்துடன், தவிசாளர் பதவிக்கு மேலும் பல வேட்புமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன எனவும், விரைவில் புதிய தவிசாளர் நியமிக்கப்படுவார் எனவும் அவர் கூறினார்.

மொட்டுக் கட்சியின் தவிசாளர் பதவியிலிருந்து பேராசிரியர்ஜி.எல்.பீரிஸ்கடந்த வாரம்நீக்கப்பட்டிருந்தார்என்பது குறிப்பிடத்தக்கது.

## இன்றும் நாளையும் தேசிய சட்ட மாநாடு

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தால் நடத்தப்படும் தேசிய சட்ட மாநாடு இன்று ஆரம்பமாகின்றது.

'நெருக்கடியின் ஊடாக வழிசெலுத்தல் - சட்டத்தின் பங்கு' என்ற தலைப்பில் கொழும்பில் இன்றும் நாளையும் இந்த மாநாடு நடைபெறவுள்ளது.

இதன் பிரதம அதிதியாக பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரியவும், கௌரவ அதிதியாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்கும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த மாநாடு பல அமர்வுகளாகப் பிரிக்கப்பட்டு இடம் பெறவுள்ளது.

அவை ஒவ்வொன்றின் போதும் நெருக்கடியின் ஊடாக வழிநடத்துதல் மற்றும் அதில் சட்டத்தின் பங்கு என்பன குறித்து கவனம் செலுத்தப்படும்எனத்தெரிவிக்கப்படுகின்றது.

## இனி இது ரகசியம் அல்ல!

என்னுடைய செய்தியாளர் கொழும்பிலிருந்து நேற்று மாலை அனுப்பிய செய்தியைப் பார்த்ததும் எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. அது ரெலோ கட்சியின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையைப் பற்றிய செய்தி அது. அவர் தனது உரையில் பல்வேறு விடயங்கள் பற்றியும் பேசியிருந்தார். நேற்றைய காலைப் பதிப்பிலே அவரது உரையில் பாகிஸ்தான் வழங்கும் புலமைப்பரிசில் தொடர்பான விவரங்கள் வந்திருந்தன. இது அவரது உரையின் மீதிப் பகுதியில் இருந்து எழுதப்பட்ட செய்தி. அந்த உரையில் அவர் தலைப்புப் போடுவதற்காக முன்னால் எடுத்திருந்த விடயம்தான் என்னுடைய கண்களை அகல விரிய வைத்தன.

சந்திரமுகி படத்தில் பிரபு சொல்லும் "என்ன கொடுமை சரவணா இது" என்கிற வாக்கியம்தான் என் வாயிலிருந்து முணு முணுப்பாக வந்தது. விடயம் இதுதான் அடைக்கலநாதன் தனது உரையில் பின் வருமாறும் சொல்லியிருந்தார்.

"நாடு பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைய வேண்டுமானால் முதலில் ஊழல், மோசடி நிறுத்தப்படவேண்டும்.

## தேர்தல் நிதியை விடுவிக்க ரணிலிடம் நேரடி கோரிக்கை


### ஆணைக்குழு எழுத்து மூலம் அனுப்பியது

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்தத் தேவையானநிதியைவிடுவிக்குமாறுதேர்தல்கள் ஆணைக்குழு அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் நேரடியாகக் கோரியுள்ளது. தமது கோரிக்கை எழுத்து மூலம் அரச தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது என்று தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சி ஹேவா தெரிவித்தார்.

நிதி விடுவிப்பு விவகாரத்தில் நிதி அமைச்சரின் அனுமதி அவசியம் என திறைசேரியின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவித்ததைத் ☞2

## இளம் குடும்பப் பெண் வயலில் சடலமாக மீட்பு

### கொலை எனச் சந்தேகம்



கண்டி, அலவத்துகொட பகுதியில் வயல் வெளியிலிருந்து இளம் குடும்பப் பெண்ணொருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

26 வயதுடைய தனுகா மதுமந்தி என்ற பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த பெண்ணின் கணவர் நேற்றுமுன்தினம் இரவு மரண வீடொன்றுக்குச் சென்றுள்ளார். வீடு திரும்பியபோது மனைவி காணாமல்போயுள்ளார்.

இது தொடர்பில் அவர் பொலிஸாருக்கு அறிவித்துள்ளார். அதன் பின்னர் தேடுதல் முன்னெடுக்கப்பட்டது. இந் நிலையில் நேற்று ☞2

## நிகழ்விலிருந்து அமைச்சரை வெளியேற்றிய பொதுமக்கள்

### வாலியப்பொலவில் நேற்றுச் சம்பவம்

வாரியபொலவில் கலாசார மத்திய நிலையமொன்றை ஒன்றை திறந்து வைப்பதற்காகச் சென்றிருந்த அமைச்சர் விதுர விக்ரமாநாயக்க மற்றும் இராஜாங்க அமைச்சர் டி.பி.ஹேரத் ஆகியோருக்கு அங்கு பொதுமக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். இதனால் அமைச்சர்கள் இருவரும் நிகழ்விடத்தைவிட்டு வெளியேற வேண்டி ஏற்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

வாரியபொலவில் கலாசார மத்திய நிலையமானது இண்டு வருடங்களுக்கு முன்னதாகவே சம்பிரதாயபூர்வமாகத் திறக்கப்பட்டுவிட்டது. எனினும் அதனைபொதுமக்களின்பாவனைக்குக் கையளிக்கும் நிகழ்வு சனிக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தலைமை அதிதியாகக் கலந்து கொண்டார். அவர் மத்திய நிலையத்தினை திறந்து வைத்தபோது நிலையத்திற்கு எதிர்ப்பக்கத்தில் ☞2

## ஜே.வி.பி. பங்காளிகளாக மாறியுள்ளார்கள் மக்கள்

### தேர்தல் வெற்றி உறுதி என்று மார்தட்டுகிறார் சந்திரசேகரன்



தற்போது மக்கள் ஜே.வி.பியின் பங்காளிகளாக மாறியுள்ளனர். இதனூடாக தேர்தல் வெற்றி உறுதி செய்யப்பட்டுள்ளது.

- இவ்வாறு ஜே.வி.பியின் அரசியல் குழு உறுப்பினரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் மக்கள் பார்வையாளர்களாக ☞2

## இரு இளைஞர்கள் வடக்கில் ஒரே நாளில் அநியாயச் சாவு

### திடீரெனத் தற்கொலைகள் அதிகரிப்பு

ரே நாளில் வடக்கில் இரு இளைஞர்கள் தவறான முடிவெடுத்து தமது உயிர்களை மாய்த்துக்கொண்டுள்ளனர். வவுனியாவில் மருத்துவபீட இறுதி ஆண்டு மாணவன் ஒருவர் இவ்வாறு உயிரிழந்தார். யாழ்ப்பாணத்தில் 33 வயது இளைஞர்ஒருவரும்உயிரைமாய்த்துக்கொண்டுள்ளார்.

அண்மைக் காலமாக வடக்கில் அதிகரித்துவரும் தற்கொலைச்சம்பவங்களின் வரிசையில் இவை மேலும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன.

கொழும்பு பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீட இறுதி வருட மாணவனான செந்தில்காந்தன் லக்சிகன் (வயது 26) வெள்ளிக்கிழமை மாலை நஞ்சருந்திய நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார். எனினும், அவரைக் காப்பாற்ற முடியவில்லை.

வவுனியா தமிழ் ☞2

## தேர்தலுக்காக ரணிலிடம் நிதி கோருவது திருடனிடமே முறையிடுவதை போன்றது



### நளிந்த ஜயதிஸ்ஸ விளாசல்

(தன்வீன்)

கொழும்பு, ஏப்ரல் 12

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்துவதற்கானநிதியைவிடுவிக்குமாறு நிதி அமைச்சரான ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரப்பட்டுள்ளமையானது, திருடனிடத்திலேயே திருட்டு தொடர்பில் முறைப்பாடு செய்வதற்கு நிகரானது என்று தேசிய மக்கள் சக்தியின் தேசியசெயற்குழுஉறுப்பினா் வைத்தியர்நளிந்தஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

கொழும்பில் சனிக்கிழமை செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலுக்கான நிதியை விடுவிக்குமாறு தற்பொழுது நிதி அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக கூறப்படுகிறது. இந்ததேர்தலை நடத்துவது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எவ்விதமான நிலைப்பாட்டில் இருக்கிறார் என்பது அனைவரும்தெரிந்ததே. அத்தகைய ஒருவர்நிதியைவிடுவிப்பாரா?.

தற்பொழுது ஏற்பட்டுள்ள நிலைமையானது திருடனிடமே திருட்டு சம்பந்தமாக முறையிடுவதற்கு ☞2

## யாழ். நகரில் திங்களன்று புற்றுநோய் விழிப்புணர்வு நடைபவனி

புற்றுநோயை முன் கூட்டியே கண்டறிவதன் அந்த நோயால் ஏற்படும் பாதிப்புக்களைக் குறைக்க முடியும் என்கிற விழிப்புணர்வை சமூகத்திற்கு ஏற்படுத்தும் வகையில் திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபவனி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ். பரியோவான் கல்லூரியும்யாழ். பல்கலைக் கழக மருத்துவபீட பழைய மாணவர் சங்கமும் இணைந்து இந்த நடைபவனியைஏற்பாடுசெய்துள்ளன.

யாழ்ப்பாணம்போதனா வைத்தியசாலையில் சனிக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் இந்த நடை பவனியில் மக்களையும் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டது.

ஊடக சந்திப்பில் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி, யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி அதிபர் வி.எஸ்.டி.துசிதரன், யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மருத்துவ பீடாதிபதி இ.சுரேந்திரகுமாரன், புற்றுநோய் சத்திரசிகிச்சை நிபுணர் கணேசமூர்த்தி சிறீதரன், பெண்களுக்கான புற்றுநோய் சத்திரசிகிச்சை நிபுணர் தனுஜா ஆகியோர் பங்கேற்று நிகழ்வு ☞2

## ரணிலின் செயலால் வாசுதேவ வெறுப்பு

### அவரே செய்தியாளர்களிடம் தெரிவிப்பு



(தன்வீன்)

கொழும்பு, ஏப்ரல் 12

நாடாளுமன்றத்திற்கும் நீதிமன்றத்திற்கும் இடையில் முரண்பாட்டை தோற்றுவிக்கும் வகையில் ஜனாதிபதி செயற்படுவது வெறுக்கத்தக்கது என்று இடதுசாரி ஜனநாயக முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமானவாசுதேவநாணயக்கார தெரிவித்தார்.

இடதுசாரி ஜனநாயக முன்னணியின் காரியாலயத்தில் சனிக்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்த அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் ஏப்ரல் 25ஆம் திகதி நடத்தப்படுமா என்ற சந்தேகம் தற்போது அதிகரித்துள்ளது. தேர்தலை ☞2

## மயிலத்தமடுவிலிருந்து தமிழரை வெளியேற்றச் சதி நடக்கிறது

### குற்றஞ்சாட்டுகிறார் கால்நடை வளர்ப்பாளர் சங்க தலைவர்



மயிலத்த மடுவிலிருந்து ஆயிரக்கணக்கான கால்நடைகளையும் தமிழர்களையும் வெளியேற்ற சதி நடக்கிறது. இது தொடர்பில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஓங்கிக் குரல் கொடுக்கவேண்டும் என்று தெரிவித்தார் மயிலத்தமடு கால் நடை வளர்ப்பாளர்கள் சங்கத்தின் தலைவர் எஸ். தியாகராஜா (நிமலன்).

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மயிலத்தமடு கால்நடை வளர்ப்பாளர்களின்பாரம்பரிய பிரதேசம். சுமார் 8 லட்சம் கால்நடைகளும் 400க்கும் மேற்பட்ட கால்நடைப் பண்ணையாளர்களும் தங்களது சீவியத்திற்காக இங்கே இருக்கிறார்கள். இப்போது இங்கிருந்து கால் நடைகளையும் தமிழர்களையும் வெளியேற்றச் சதி நடக்கிறது.

சமீப காலமாக மேய்ச்சலுக்குச் செல்லும் எமது பசுக்கள் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்படுகின்றன. விவசாயம் என்கிற பெயரில் மாத்தறைப்பகுதியைச்சேர்ந்த சிங்களவர்கள் இந்தப் பகுதியில் அத்துமீறிக் குடியேறி வருகின்றனர். ☞2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வடக்குமாகாணத்தில்காணிப் பதிவு விவகாரத்தில் பெரும் மோசடிகள் இடம்பெறுகின்றன. போர்க் காலத்தில் அரச அதிகாரிகள் முறையாகச் செயற்பட்டார்கள். ஆனால், தற்போது ஒரு சில அதிகாரிகள் முறையற்ற வகையில் செயற்படுவதால் ஒட்டுமொத்த அரச அதிகாரிகள் மீதும் களங்கம்ஏற்பட்டுள்ளது. ஆகவே,காணிஉறுதிப்பத்திரப் பதிவு மோசடியில் ஈடுபடும் அரச அதிகாரிகள் தொடர்பான விவரங்களை வெகுவிரைவில் அம்பலப்படுத்துவோம்" என்று அவரது உரையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இவர் ஏன் சொந்தச் செலவில் சூனியம் வைத்துக்கொள்கிறார் என்கிற யோசனைதான் எனக்கு. அடைக்கலநாதன் இந்த விவகாரத்தில் ஏன் கைவைத்தார் என்று எனக்குத் தெரியவில்லை. இருந்தாலும் எல்லாம் நல்லதுக்கே என்று நினைப்போம். ஏனென்றால் காணி மோசடி தொடர்பில் அவர்வெளிப்படுத்தவேண்டிய பெயர்ப் பட்டியலில் முதலில் இருப்பது வெளியாட்கள் இல்லை. அவரதுகட்சிக்காரர்களே. அவர்கள் மீது ஏற்கனவே மோசடி செய்தார்கள் என்று வழக்குக்கூடத் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது. எனவே அவர் தயங்காமல் வெளிப்படுத்தவேண்டியது தனது கட்சிக்குள் இருந்து காணி மோசடியில் ஈடுபட்டவர்கள் தொடர்பான விவரப் பட்டியலையே!

அந்த விவரங்களை நான் ஏற்கனவே இந்தப் பத்தியில் இரண்டு நாட்களாக விலாவரியாக, விளக்கமாகத் தந்திருந்தேன். இருந்தாலும் மீண்டும் ஒருதடவை சுருக்கமாகத் தந்துவிடுகின்றேன்.

ரெலோவில் இருந்து பிரிந்து சென்று சிறி ரெலோ கட்சியை உருவாக்கி அதன் செயலாளராக இருப்பவர் ப.உதயராசா. கொழும்பில் அவர் வாடகைக்கு ஒரு வீட்டைஎடுக்கிறார். அந்தவீட்டின் உரிமையாளரதுபெயர்வேலு நடேசு ஜெனோசீலன். அவர் வெளிநாடு ஒன்றில் குடியுரிமை பெற்று குடும்பத்தோடு வாழ்பவர். கொழும்பில் வந்து தங்கியிருந்த சமயம் தான் அங்கு வாங்கியிருந்த வீட்டைத்தான் அவர் உதயராசாவிற்கு வாடகைக்கு விடுகின்றார். அதன் பின்னர் அவர் தனது குடும்பத்தினரிடம் திரும்பிச் செல்கிறார். துரதிர்ஷ்டவசமாக அவர் அங்கு இறந்துபோகின்றார். அந்தச் செய்தி இலங்கையில் அவரது வீட்டில் வாடகைக்கு இருப்பவர்களுக்கும் தெரிய வருகின்றது.

சிறிது காலத்தின் பின்னர் இறந்தவீட்டுஉரிமையாளரின் குடும்பத்தினர் இலங்கைக்கு வந்துதமதுவீட்டைத்திரும்பப் பெற முயற்சிக்கின்றார். அப்போதுதான் அவர்களுக்கு அதிர்ச்சி காத்திருக்கிறது. வீடு உதயராசாவிற்கு விற்கப்பட்டுவிட்டது என்று கூறப்படுகின்றது. அப்படித் தங்களுக்கு எதுவும் தெரியாததே என்று அவர்கள் தெரிவிக்க, கூலிப் படைகள் கொண்டு அவர்கள் விரட்டியடிக்கப்படுகிறார்கள். நாடு திரும்பிய அவர்கள் சும்மா இருந்துவிடாமல், இலங்கையில் ஒருவரைப் பிடித்துஅவருக்குஅற்றோணித் தத்துவத்தைக் கொடுத்து பொலிஸிலும் முறைப்பாடு செய்து வழக்கும் தாக்கல் செய்துவிட்டார்கள்.

விசாரிக்கப்புகுந்த பொலிஸார் மோசடி அந்தக் வீடு விற்கப்பட்டிருப்பதைக்கண்டு பிடித்தார்கள். உதயராசாவின் வாகனச் சாரதிக்கு வீட்டு உரிமையாளரான நடேசு ஜெனோசீலனின் பெயரில் ஒருபோலிஅடையாளஅட்டையைத் தயாரித்து, அதை வைத்து சட்டத்தரணியை ஏமாற்றி சாரதியான பொன்னுசாமி கணேசமூர்த்தியே ஜெனோசீலன் என்று பம்மாத்துவிட்டுஒருவாறுவீட்டை எழுதி வாங்கிவிட்டார்கள். விசாரித்தபொலிஸார்எல்லாம் பக்கா மோசடி என்பதைக் கண்டுபிடித்து மோசடி செய்தவர்களையும் கைது செய்து உள்ளே தள்ளினார்கள்.

இந்த மோசடியில் காணியை விற்று வாங்கும் நாடகத்தில் கையெழுத்து வைத்தவர்களையும் பொலிஸார் தேடிவந்தனர். அவர்களில் ஒருவர் வெளிநாட்டுக்கு ஓடித் தலைமறைவாகிவிட்டார். மற்றவர் இன்னும் ரெலோ கட்சியின் உறுப்பினராக இருக்கிறார். அவர் பெயர்சுரேந்திரன்குருசுவாமி. கட்சியின் பேச்சாளரும் அவரே. மவுண்டலவேனியா நீதிமன்றதில் இந்த வழக்கு நடக்கிறது. இந்த வழக்கில் தன்னையும் கைது செய்துவிடுவார்கள் என்று பயந்த குருசுவாமி நீதிமன்றத் தில் முன்பிணையும் வாங்கியிருந்தார்.

ஆக மொத்தத்தில் காணி மோசடி என்றால் தனது கட்சியின் பேச்சாளரில் இருந்துதானே தொடங்கவேண்டும். நேர்மையான அரசியல்வாதியாயின் தனது கட்சியில் இருந்தே அவர் அந்தப்பட்டியலைத்தொடங்குவார் என்று எதிர்பார்ப்போம்.

- இடிமின்னல் -

## வெளிநாடு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கொழும்பு ஊடகம் ஒன்று இந்தச்செய்தியைசனிக்கிழமை வெளியிட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தையடுத்து, கடவுச்சீட்டைப் பெறுவதற்குஅல்லதுபுதுப்பிப்பதற்கு இலங்கைப் படைத்துறை அதிகாரிகள், அவர்களின் படைப்பிரிவுத் தளபதிகளிடம் அனுமதிபெறவேண்டும்எனப் பாதுகாப்புஅமைச்சால்எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சு, குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்துக்கும் விளக்கமளித்துள்ளது.

படைத்துறைச் சேவையை விட்டு வெளியேறி, திறமையான அதிகாரிகள் உட்பட பெரும்பாலான அதிகாரிகள் வெளிநாடு செல்லத் தொடங்கியுள்ள நிலையில் பாதுகாப்பு அமைச்சால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## தேர்தல் நிதி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தொடர்ந்து ஆணைக்குழு அரச தலைவரிடம் எழுத்து மூலமாக கோரிக்கையை முன்வைத்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

தேர்தலுக்கான நடவடிக்கைகளைமேற்கொள்வதற்குத் தேவையானநிதியை வழங்குமாறு வலியுறுத்தி ஏப்ரல் 7ஆம் திகதி திறைச்சேரியின் செயலாளருக்குக் கடிதம் அனுப்பி வைத்தோம், நிதி விடுவிப்பு விவகாரத்தில் நிதி அமைச்சரின் அனுமதி அவசியம்எனஅவர்ஆணைக் குழுவுக்கு அறிவுறுத்தினார்.

அதனால் நிதியை வழங்குமாறு நிதியமைச்சர் என்ற ரீதியில்ஜனாதிபதியிடம்வலியுறுத்தியுள்ளோம். தேவையான நிதிதாமதமின்றிக்கிடைக்கும் என எதிர்பார்க்கிறோம்.

வாக்குச்சீட்டு அச்சிடும் பணிக்குத் தேவையான நிதியை துரிதமாக ஒப்படைக்க தீர்மானித்துள்ளோம். உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பில் எதிர்வரும் வாரம் அரசியல் கட்சி செயலாளர்களுடன் பேச்சு நடத்தவும் தீர்மானித்துள்ளோம் - என்றார்.

## நிகழ்விலிரு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஒன்றுகூடிய பிரதேசவாசிகள் அமைச்சருக்கு எதிராகக் கூச்சலிட்டு ஆர்ப்பாட்டம் செய்தனர்.

தமது பிரதேசத்துக்கான உரிய போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தும் வகையில் சீரமைக்குமாறு வலியுறுத்தினர்.

அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க நிகழ்விடத்திலிருந்து உடனடியாக வெளியேறவேண்டும் என்று கூச்சலிட்டனர். அமைச்சர் வெளியேறிச் செல்லும் வரையில் அவர்களின் கூச்சல் ஓயவில்லை.

## தேர்தலுக்காக ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஒப்பானதாக இருக்கிறது.

அதேநேரம் ஜனநாயக உரிமையான தேர்தலை ஜனநாயகவாதியாகதன்னை சித்தரித்துக் கொள்கின்ற ரணில் விக்ரமசிங்கவே பிற்போடுவதற்கு முழுக்காரண கர்த்தாவாக இருக்கிறார் என்பதை ஒட்டுமொத்த உலகமும் அறியும் - என்றார்.

## மயிலத்தமடு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இவர்களாலேயே மாடுகள் கொல்லப்படுகின்றன. இதற்குப் பின்னால் சிங்கள அரசியல்வாதிகள் செயல்படுகிறார்கள் குடியேறியுள்ள சிங்களவர்களுக்கு மகாவலி அபிலிருத்திச் சபை நிலங்கள் இலவசமாக உழுது கொடுக்கப்பட்டு, கௌபியும் விதைத்துக் கொடுக்கப்படுகிறது.

குடியேறியவர்கள் எமது கால்நடைகள் நீரருந்தும் நீரோடைகளை வெட்டிச் சரித்து மண் வியாபாரம் செய்கிறார்கள். இதனால் கால்நடைகள் குடிக்க நீரின்றி அவதியுறுகின்றன. எம்மையும்கால்நடைகளையும்வெளியேற்றுவதே அவர்களது. நோக்கமாகும்.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதன் பின்னணியைப் புரிந்த கொண்டுஇதற்குஎதிராகநாடாளுமன்றத்தில்குரல்கொடுக்க வேண்டும் - என்றார்.

## இளம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) முற்பகல் குறித்த பெண் வயல் ஒன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

## இரு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மத்திய மகா வித்தியாலயத்திலிருந்து 2016 ஆம் ஆண்டு உயர்தர விஞ்ஞானப் பிரிவில் 3 ஏ எடுத்து மாவட்ட மட்டத்தில் முதல் நிலை பெற்று மருத்துவபீடத்துக்குத் தெரிவாகியிருந்தார்.

உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் பின்னர் இவர் தாய் மண்ணில் இருதய சிகிச்சை நிபுணராக வர விரும்புவதாக ஊடகங்களுக்குப் பேட்டி கொடுத்திருந்தார். ஆனால், திடீரென உயிரைமாய்த்துக்கொண்டார்.

யாழ்ப்பாணம், மல்லாகம் - குளமங்காலில் லீயோரட்ணம் கெவின் பீற்றர் (வயது 33) என்ற இளைஞர் வெள்ளிக்கிழமை உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார்.

மேற்கு நாடு ஒன்றுக்குச் செல்வதற்காக இரண்டரை லட்சம்ரூபாய்கொடுத்துரஷ்ய நாட்டுவிசாவும்பெற்றுவைத்திருந்தார் இவர். எனினும் வெளிநாடு செல்வதற்கான ஏற்பாடுகளை உறவினர்கள் செய்யவில்லை என்கிற விரக்தியில்இருந்தார்என்றும் சொல்லப்படுகின்றது.

கடந்த ஒரு மாத காலத்திற்குள் வடக்கில் தற்கொலைகளின் எண்ணிக்கை திடீரென அதிகரித்துள்ளது. இதற்கான காரணங்கள் குறித்து எந்தவொரு ஆய்வுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

## ரணிலின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) நடத்துவதற்காக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு மேற்கொள்ளும்நடவடிக்கைகளுக்கு அரசு திட்டமிட்ட வகையில்பெரும்தடைகளை ஏற்படுத்துகிறது.

தடைகளை உயர் நீதிமன்றம்நீக்கும்போது ஆளும் தரப்பினர்நாடாளுமன்றசிறப்புரிமையைக் குறிப்பிட்டுக் கொண்டுஉயர்நீதிமன்றத்தின் இடைக்காலதடையுத்தரவை தற்போது சவாலுக்கு உட்படுத்தியுள்ளார்கள்.

நாடாளுமன்ற சிறப்புரிமை குழு இந்த விவகாரம் தொடர்பில் தீர்மானத்தை எடுக்கும் வரை இடைக்கால தடையுத்தரவைஅடிப்படையாகக்கொண்டுமுன்னெடுக்கும் நடவடிக்கைகளைஇடைநிறுத்தும்அறிவித்தல்ஒன்றைபிறப்பிக்குமாறு ஆளும் தரப்பின் உறுப்பினர், நிதி இராஜாங்க அமைச்சர்ஷெஹான்சேமசிங்க நாடாளுமன்ற சிறப்புரிமைகள் தொடர்பான குழுவிடம் வலியுறுத்தியுள்ளார்.

ஏப்ரல் 25ஆம்திகதி இடம் பெறவுள்ள உள்ளூராட்சிமன்றத் தேர்தல் வாக்கெடுப்பை தடுக்கும்வகையில்தான்இந்த சிறப்புரிமைமீறல்பிரச்சினை முன்வைக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர்களின்சிறப்புரிமைமீறப்பட்டுள்ளதாகக் குறிப்பிடும் ஆளும் தரப்பினர் நாட்டு மக்களின் வாக்குரிமைஎன்றசிறப்புரிமை மீறப்பட்டுள்ளதை ஏன் கவனத்தில் கொள்ளவில்லை.

நாடாளுமன்ற சிறப்புரிமை என்பதை குறிப்பிட்டுக் கொண்டுசட்டவாக்கத்துக்கும், நீதித்துறைக்கும் இடையில் முரண்பாட்டை தோற்றுவிக்கும் வகையில் நிறைவேற்றுத்துறை தற்போது செயற்படுகிறது - என்றார்.

## யாழ். நகரில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) குறித்து விளக்கமளித்தனர்.

புற்றுநோயை வெல்லும் யுகத்தை நோக்கி என்ற தொனிப்பொருளில் இந்த நடைபவனி இடம் பெறவுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

பரியோவான் கல்லூரி 200ஆவது ஆண்டை பூர்த்தி செய்யும் நிலையில் கல்லூரி அயல்பகுதியைத் தாண்டியும் சமூகத்திற்கு சேவையாற்றும் வகையில் புற்றுநோய் விழிப்புணர்வு கருத்தையும்எமதுபவனியில் சேர்த்துக்கொண்டுள்ளோம் என்று கல்லூரி அதிபர் தெரிவித்தார்.

உலகில் புற்றுநோய் அதிகரித்து வருகின்றது. வளர்முக நாடுகளில் புற்றுநோய் தொடக்கத்திலேயே கண்டுபிடிக்கப்படாமையினால் பல உயிர்களை நாம் இழக்கவேண்டியிருக்கிறது. மக்கள்மத்தியில்இதுதொடர்பில் விழிப்புணர்வு இன்மையும் இதற்கான முக்கிய காரணம்.

புற்றுநோயை வளரவிட்டால் அது இறப்பில் கொண்டு சென்று நிறுத்தும், தொடக்கத்திலேயே கண்டு பிடித்தால் நோயை முழுமையாகக் குணப்படுத்த முடியும். மருத்துவ நிபுணர்கள் விளக்கமளித்தனர்.

நடைபவனியானது யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரியில் இருந்து காலை 7.30 மணிக்கு தொடங்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஜே.வி.பி. .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இருந்ததன் காரணமாகவே ஜே.வி.பியால் தேர்தல்களில் பெரும் வெற்றியைப் பதிவு செய்யமுடியவில்லைஎன்றும் அவர் குறிப்பிட்டார்.

அதேநேரம், கடந்தஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பி. வெற்றியடைய முடியாது என்பதைத் தாங்கள் அறிந்திருந்தோம் என்றும் அவர் மேலும் கூறினார்.

தனியார் வானொலி ஒன்றில் சனிக்கிழமை ஒலி பரப்பான அரசியல் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு - தொலைபேசி இலக்கம் 076 443 8622

# பெருக்கல் வாய்ப்பாடு போன்று கட்சிகளை உருவாக்குகிறார்கள்

### வெதுப்பக உரிமையாளர் சங்க தலைவர் விளாசல்

தேசியத் தலைவர் ஒரு அமைப்பை உருவாக்கினார். அதை நான்காக்கி இன்று 12 ஆக்கி வாய்ப்பாடு பெருக்குவது போல் கட்சிகளை உருவாக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

இவ்வாறுகாட்டமாகக்கருத்துத்தெரிவித்தார் யாழ். மாவட்ட கூட்டுறவு வெதுப்பக உரிமையாளர் சங்க தலைவர் கந்தசாமி குணரட்னம். சமகால அரசியல் போக்குக் குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

இங்கே ஒரு கட்சி இருக்கிறது என சொல்ல முடியாது. எல்லோரும் ஒரு கட்சியில் இருக்கிறார்கள் என்று இல்லை. அரசியல் ஓட்டத்தில் கட்சி தாவும் நிலைதான் காணப்படுகின்றது.

தமிழ் அரசுக் கட்சி எங்கே இருக்கின்றது? ஏன் தமிழ் அரசுக் கட்சியைக் கொலை செய்கிறீர்கள். சைக்கிளோடி திரிந்த குமார் பொன்னம்பலம் எங்கே? நீங்கள் இன்று காரில் பிரச்சாரம் செய்கிறீர்கள்.

எங்கேயாவதுமக்களுக்காக இந்த அரசியல்வாதிகள் ஒற்றுமைப்பட்டு இருக்கின்றார்களா? அல்லது மக்களின் கஷ்டத்தில் கூட நின்று குரல் கொடுத்திருக்கின்றீர்களா?

கொரோனா காலத்தில் 50 இறாத்தல் பாணை கொடுத்துவிட்டு படங்களை முகப்புத்தகத்தில் போட்டுவிட்டு நாங்கள் மக்களுக்கு உதவி செய்தோம் என்கிறவர்கள்எல்லாம்இன்று பொருளாதார நெருக்கடிகுள் ஒடிஒளித்துவிட்டார்கள். ஐந்து பரப்புக் காணியுடன் அரசியலுக்கு வந்தவர்கள் எல்லாம் இன்று கோடிக்கணக்கான சொத்துடன் இருக்கின்றார்கள்

அந்தக் காலத்தில் மாநகர சபை என்பது புனிதமானதாகக் கருதப்பட்டது. ஆலாலசுந்தரம், ஆனந்த சங்கரி ஆகியோரது காலத்தில் மாநகர சபைக்கு என்று ஒரு மரியாதை இருந்தது. இப்போது கெட்ட வார்த்தைகள்கூட அழகாக அறுத்துறுத்து மாநகர சபையில் பேசப்படுகின்றன.

மாநகர சபையை பற்றி பேசி பிரயோசனமில்லை. மக்கள் அதற்கு கட்டாயமாக பதிலடி கொடுப்பார்கள்.

மாநகர சபை முதல்வர் பதவிக்கு மிகவும் அனுபவமானவர், மூத்தவர், முதல்வராகதெரிவு செய்யப்பட வேண்டியவர் என்ற வகையில் சூ.சிறிலைத் தெரிந்திருக்கலாம். ஆனால் அவரை விடுத்து வேறொருவரை முதல்வர் வேட்பாளராக நிறுத்த தீர்மானித்தார்கள். இப்போது பிரச்சினைகளை எதிர்கொள்கிறார்கள். மூத்தவர்களை அனுபவசாலிகளை மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியவர்களை முதலில் பதவிகளுக்கு நியமியுங்கள் - என்றார்.

அனைத்துவித கணினிகள் மற்றும் கணினிசார் பொருட்கள் விற்பனை மற்றும் பழுதுபார்த்தல்
NALIN EXCLUSIVE
- Install Windows OS for Macbook
- Apple Mac Software Solution
- Laptop Motherboard Chip Level Repair
- Laptop Repair
- Desktop Repair
- UPS Repair and Battery Replacement
- Fingerprint Machine Installation & Repairing



NALIN Information Technologies (Pvt) Ltd Computers of the North
No.51, Stanley Road, Jaffna. (Infront of BOC)
076 359 4359 | 021 221 0404

English Classes



K.Ganash (BA.Pera)
Spoken English With Grammar
யாழ் நகரில் தனி வகுப்பு
G.C.E O/L, A/L, பட்டதாரிகள்
தொழில் புரிபவர்,
ஆர்வமுள்ளவர்களுக்கு
G.C.E.O/L Literature
077 766 8725



070 330 5500
076 235 4367
075 330 5500
நல்லூர் யாழ்ப்பாணம் கைதடி
ஆவரங்கால் நெல்லியடி கிளிநொச்சி
கிளிநொச்சி வவுனியா கொழும்பு



Mr.Sivarajah Thumilan
ACA, ACCA, ACMA (UK), CGMA (UK), CPA (AUS), MCSI (UK), FMAAT (SL), ACS
Chairman
Blue Ocean Group Of Companies

Blue Ocean GROUP OF COMPANIES

9A, De Fonseka Place, Bambalapitiya,
Colombo 04, Sri Lanka.
Email : info@blueocean.lk
Web : www.blueocean.lk | www.kelsey.lk

LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA

KELSEY HOMES
40 Years Housing Excellence

20+ LOCATED CITIES | 3500+ CONDO UNITS | 235+ CONDO PROJECTS

# இலங்கையில் தொடர்மாடி வீட்டுமனை அமைப்பதில் சாதனை படைத்து கொண்டு இருக்கிறது புளூ ஓசன் குழுமம்




CONTACT US
HOTLINE : +94 777 546 546
+94 77 712 1926 | +94 77 292 3242
+94 77 002 2040 | +94 772 348 989
+94 777 121 914 | +94 774 873 893
+94 777 121 916 | +94 77 712 1924
+94 774 126 131 | +44 79 6096 9684

சர்வதேச ரீதியில் புகழ்படைத்த புளூ ஓசன் குழுமம் தனது வணிகப் பயணத்தில் 40 வருடங்களுக்கு மேலாக அனுபவம் பெற்ற பலமாக கொண்டு இலங்கையில் தொடர் மாடி வீடு மனை அமைப்பதில் புதுமையான கட்டுமான செயல் முறையை பாவித்து கட்டுமான துறையில் ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்கிக் கொண்டிருப்பது தெரிந்தது இவர்களின் இவர்களின் தூர நோக்கு தொடர்மாடி அமைக்கும் REAL (ESTATE AND CONSTRUCTION)துறையில் பல்வகை பட்ட தொடர்பான வீடு மனை அமைப்பதில் வெற்றி அடைந்த குடும்பம் என்ற இலக்கு அடைந்த பன்னாட்டு நிறுவனம் ஆக்குதலாகும் கிடைக்கும் சந்தர்ப்பங்களை சரியான முறையில் பயன்படுத்தி பொறுப்புடன் சமுதாய சேவையில் ஈடுபடுகின்றது இன்று இந்நிறுவனம் நிலையான லாப வளர்ச்சி வலுவான இருப்பு நிலை மற்றும் பலம் பொருந்திய தலைமைத்துவத்தை கொண்ட ஒரு வெற்றியடைந்த நிறுவனமாக திகழ்கின்றது அதன் ஒரு அங்கமாக கெல்சிஹோம் (KELSEY HOMES) வீட்டுமனை அமைப்பதில் 40 வருடங்கள் அனுபவம் பெற்றது இந்நிறுவனம் இலங்கையின் மிகப்பெரிய சொத்து அபிவிருத்தியாளராக திகழ்கின்றது சிறப்பம்சமாகும்

ஏன் ஒருவர் தொடர் மாடி வீடு மனை கொள்ளளவு செய்ய புளூ ஓசன் குழுமத்தை நாடி முதலீடு செய்ய வேண்டும் என்ற கேள்வி எழுவது நியாயமானது இந்நிறுவனத்தின் பெறுமதியை நிறுவனத்தின் வெளிப்படைத்தன்மை தரமான கட்டிட நிர்மாணம், வெற்றியில் இறுதிப் பாதைக்கான ஒழுக்க நெறியை கடைப்பிடிப்பது, சகல எதிர்பாராத நிகழ்வுகளுக்கு முகம் கொடுக்கக்கூடிய நெகிழ்வு தன்மை நவீன தொழில்நுட்ப கருவிகள் உடனான பாதுகாப்பு மற்றும் சிறப்பிற்கு முக்கியத்துவம் வழங்கும் தொடர் சேவைகள் என அடுக்கிக் கொண்டே போகிறார் மேலும் ஒரு குடியிருப்பு தொகுதியில் அமைக்கப்படும் தொடர்புடைய வீடுகளில் வடிவமைப்பு கட்டுமானம் மற்றும் திட்ட மேலாண்மை முகாமைத்துவம் வேறு எந்த குடியிருப்பு தொகுதியிலும் இலங்கையில் காண முடியாது அத்துடன் சிறந்த வடிவமைப்புடன் கட்டப்படும் குடியுரி தொகுதிகளுக்கான தொடர் மாடி வீடு மனை சர்வதேச தர நிர்ணயங்களுக்கு அமைவாக கட்டப்படுகின்றது அத்துடன் உயரக கட்டிட பொருட்களை பாவித்து சிறந்த நடைமுறை கட்டுமான முறைகளை பின்பற்றி தகுதி வாய்ந்த அனுபவமிக்க இத்துறையில் தேர்ச்சி பெற்ற தொழில் முறை சார் நிபுணத்துவம் கொண்ட ஒரு குழுவினால் கட்டிட நிர்மாண பணி மேற்கொள்ளப்படுவது ஒரு புறம் இருக்க புளூ ஓசன் குக்குலமம் குடியிருப்பு தொகுதிக்கான தொடர்மாடி வீடு மனை அமைக்க சுற்றுலா மண்டலங்களாக கருதப்படும் நெடிசன் அற்ற வீடுகள் கொண்ட மதிப்புமிக்க நில அடையாளங்கள் காணப்படும் மிகவும் நடுவில் அமைந்த இடங்கள் தெரிவு செய்யப்படுவது அமைதியான வாழ்க்கை வாழ சூழல் தருகின்றது இவற்றுக்கு மேலாக ஓசன் குழுமத்திலும் உள்ள ஒரு சிறப்பு அம்சம் என்னவெனில் கட்டிட நிர்மாணத்திற்கான ஆகு செலவை முடிந்த அளவு குறைத்து அதனால் கிடைக்கப்பெறும் நன்மையை வாடிக்கையாளர்க்கு வழங்குவதாகும் அட்டுடன் நிர்வாண துறையில் லிங்க் இன்ஜினியரிங் (LINK ENGINEERING) சேவை பெற்றுக் கொள்ளப்படுகிறது இவர்களின் சாதனையை பறைசாற்றும் வகையில் கொழும்பில் நுரையாவில் அமைந்துள்ள வானுயர் மாடி கட்டிடத் தொகுதிகள் பறைசாற்றி கொண்டிருக்கின்றன

தொடர்ச்சி மறுபக்கம்

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## உண்மையைக் கண்டறியும் பொதுக் குழுவின் தேவை

கிழக்கில் மூவின சமூகங்களுக்கு மத்தியிலான முரண்பாடு போருக்குப் பின்னரான காலத்தில் மீண்டும் அதிகரித்துள்ளது. ஆயுதப் போராட்டங்களின் தொடக்கத்திற்கும் கிழக்கில் ஏற்பட்ட இத்தகைய சம்பவங்களும் வலுவான காரணங்கள் என்கிற வரலாற்றுப் பாடத்தை மறந்துவிடமுடியாது.

மட்டக்களப்பு மாவட்டம் மயிலத்தமடுவில் தமிழர்களின் மேயச்சல் தரவைகளையொட்டி சிங்களவர்கள் குடியேற்றப்பட்டு மாகாவலி திட்டத்தின் கீழ் அவர்களுக்கு விவசாய நிலங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன என்கிற குற்றச்சாட்டு அண்மைக் காலமாக வளர்ந்து வருகின்றது. அவ்வாறு குடியேற்றப்பட்ட சிங்களவர்களால் தமது கால்நடைகள் கொல்லப்படுகின்றன என்று தமிழர்கள் குற்றஞ்சாட்டுகின்றார்கள்.

அவ்வாறு கால்நடைகள் கொல்லப்படுவது தமிழர்களையும் அவர்களது கால்நடைகளையும் அங்கிருந்து விரட்டியடிப்பதற்கான சதி என்று கால்நடை உரிமையாளர் சங்க தலைவர் எஸ்.தியாகராஜா குற்றஞ்சாட்டியுள்ளார். இது தொடர்பில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஓங்கிக் குரல் கொடுக்கவேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

1980களில் முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களை ஒட்டிய எல்லைப் புறங்களிலும் இதேபோன்று சிங்களக் குடியேற்றவாசிகளால் தமிழர்களின் கால்நடைகளை வெட்டிக் கொல்லப்பட்டதும், தமிழர்கள் திருப்பியடித்தபோது சிங்களவர்களுக்குப் பாதுகாப்பாக படை முகாகம்கள் அங்கு அமைக்கப்பட்டதும் வரலாறு. ஆயுத மோதல்களைத் தீவிரப்படுத்தி, வன்முறையை நோக்கி தமிழ்ச் சமூகத்தை வழிப்படுத்திய செயற்பாடுகளில் இவையும் அடக்கம்.

இப்போது மட்டக்களப்பில் அதேபோன்ற காட்சிகள் மீள விரிகின்றமை கவலையளிக்கிறது. தொடக்கத்திலேயே இத்தகைய பிரச்சினைகள் திறம்படக் கைய–ளாப் பட்டு முடிவுக்குக் கொண்டுவரப்படவேண்டும். குடியேற்றக் கொள்கை தொடர்பில் தீர்க்கமான ஒரு இணக்கப்பாடு அரசுடன் எட்டப்படவேண்டும். சட்டத்துக்குப் புறம்பான, அரசியல் உள்நோக்கம் கருதிய குடியேற்றங்களை அகற்றுவதற்கு உரிய நடவடிக்கைகள் தயவு தாட்சண்யமின்றி எடுக்கப்படவேண்டும்.

இவற்றையெல்லாம் செய்வதற்கு அங்கு நடப் பது என்ன என்கிற உண்மை பக்கச்சார்பற்றுக் கண்டறியப்படவேண்டும். ஆனால் அரசோ அரசியல் கட்சிகளோ அதனைச் செய்யப்போவதில்லை. எனவே பொதுச் சமூகம் (சிவில் சமூகம்) இந்த விடயத்தில் தானாகவே முன்வந்து துறைசார் வல்லுநர்களை உள்ளடக்கிய உண்மையைக் கண்டறியும் குழு ஒன்றை உருவாக்கிக்கொள்ளவேண்டும். அது அனைத்துத் இனக் குழுமங்களைச் சேர்ந்தவர்களையும் உள்ளடக்கியதாக இருப்பதுடன் பக்கச்சார்பின்றி, காய்தல் உதவத்தலின்றி இந்த விடயத்தை ஆராய்ந்து உண்மை என்ன என்பதை வெளிப்படுத்தவேண்டும்.

அதனால் என்ன பயன்? பிரச்சினை உடனடியாகத் தீர்ந்துவிடுமா? என்கிற கேள்விகளுக்கு அப்படி எந்த அதிகாரமும் அதற்குக் கிடையாது என்பதுதான் பதிலாக இருந்தாலும், எதிர்காலத்தில் எடுக்கப்படக்கூடிய எந்தவொரு நடவடிக்கைக்கும் பன்னாட்டு மட்ட அழுத்தங்களுக்கும் அத்தகைய பக்கச்சார்பற்ற ஓர் அறிக்கை, உண்மையை எடுத்துக்கூறும் அறிக்கை பெரிதும் உதவிகரமாக இருக்கும். பேச்சு மேசைகளிலும் பன்னாட்டு அரங்கத்திலும் பயன்படுத்தத்தக்க ஆவணமாகவும் இருக்கும். எனவே உடனடியாக உண்மையைக் கண்டறியும் பொதுக் குழு ஒன்றை உருவாக்குவது அவசியம்.

# வடக்கில் காணிப் பதிவு விவகாரத்தில் அதிகாரிகள் மட்டத்தில் பெரும் மோசடி!

### செல்வம் எம்.பி. பகிரங்க எச்சரிக்கை



காணி உறுதிப்பத்திரப் பதிவு மோசடியில் ஈடுபடும் அரச அதிகாரிகள் தொடர்பான விவரங்களை வெகுவிரைவில் அம்பலப்படுத்துவோம் என ரெலோவின் தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் காணிப் பதிவு விவகாரத்தில் அதிகாரிகள் மட்டத்தில் பாரிய மோசடிகள் இடம்பெறுகின்றன.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற சர்வஜன வாக்குரிமை தொடர்பான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

நாடு பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைய வேண்டுமானால் முதலில் ஊழல், மோசடி நிறுத்தப்பட வேண்டும்.

வடக்கு மாகாணத்தில் காணிப் பதிவு விவகாரத்தில் பாரிய மோசடிகள் இடம் பெறுகின்றன. யுத்த காலத்தில் அரச அதிகாரிகள் முறையாகச் செயற்பட்டார்கள்.

ஆனால் தற்போது ஒருசில அதிகாரிகள் முறையற்ற வகையில் செயற்படுகின்றமையால் ஒட்டுமொத்த அரச அதிகாரிகள் மீதும் களங்கம் ஏற்பட்டுள்ளது.

ஆகவே காணி உறுதிப் பத்திரப் பதிவு மோசடியில் ஈடுபடும் அரச அதிகாரிகள் தொடர்பான விவரங்களை வெகுவிரைவில் அம்பலப்படுத்துவோம்.

2023 ஆம் ஆண்டு தேர்தல் ஆண்டு அல்ல என ஜனாதிபதியும் அரசும் குறிப்பிடுகின்ற நிலையில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்த தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு திகதி நிர்ணயித்துள்ளது.

தேர்தல் விவகாரத்தில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் நிலைப்பாட்டுக்கும், அரசின் நிலைப்பாட்டுக்கும் இடையில் பாரிய முரண்பாடுகள் காணப்படுகின்றன.

மாகாண சபைத் தேர்தல் காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளது.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்துக்கு அமைய மாகாண சபைகளுக்கு முழுமையான அதிகாரங்களை வழங்கி மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்துமாறு நாங்கள் தொடர்ந்து வலியுறுத்துகின்றோம்.

சர்வதேசமும் இதனையே வலியுறுத்துகின்றது.

13 ஆவது திருத்தச் சட்டத்துக்கு அமைய மாகாண சபைகள் ஸ்தாபிக்கப்படும் என அரசு சர்வதேசத்துக்கு வாக்குறுதி வழங்குகின்றது. ஆனால் வாக்குறுதிகளை அரசு நிறைவேற்றுவதில்லை.

பொருளாதார மீட்சிக்காக அரசு எடுத்த ஒரு சில தீர்மானங்களால் நாடு தற்போது இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளது என்பதை ஏற்றுக் கொள்கின்றோம்.

சிறந்த விடயங்களை முழுமையாக வரவேற்போம். நாட்டில் மருந்து உட்படப் பல பிரச்சிகைள் காணப்படுகின்றன. ஆகவே அந்தப் பிரச்சினைகளுக்கு விரைவான தீர்வு காணப்பட வேண்டும்.

அண்மையில் வடக்கு மாகாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நெல்லுக்கான உத்தரவாத விலையை 100 ரூபாவாக நிர்ணயிப்பதாகக் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாண விவசாயிகள் செல்வந்தர்கள் அல்லர். காணி, நகை ஆகியவற்றை அடகு வைத்து கடனாளியாக விவசாய நடவடிக்கையில் ஈடுபடுகின்றார்கள்.

ஆகவே நெல்லுக்கான உத்தரவாத விலையை 120 ரூபா அல்லது 130 ரூபா என நிர்ணயிக்க வேண்டும் என ஜனாதிபதியிடம் வலியுறுத்துகின்றோம் எனத் தெரிவித்துள்ளார்.

# அறுவடை செய்த பூசணிக்காய்களை விற்பனை செய்ய முடியாத அவலம்



கிளிநொச்சியில் அந்தரிக்கும் விவசாயி



கிளிநொச்சி மாவட்டத்தில் தான் அறுவடை செய்த பூசணிக்காய்களை நல்ல விலைக்கு விற்க முடியாமல் அவதிப்படுவதாக விவசாயி ஒருவர் முறையிடுகின்றார்கள். உற்பத்திச் செலவு பல மடங்கு உயர்ந்துவிட்டபோதும் சந்தை விலையைவிட மிகக் குறைவாக அறாவிலைக்கு வியாபாரிகள் கேட்கிறார்கள் என்று விசனப்படும் அவர், அறுவடை செய்யப்பட்ட பூசணிக்காய்களைக் களஞ்சியப் படுத்தி வைத்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கல்மடுநகர் பகுதியில் சுமார் இரண்டு ஏக்கர் நிலத்தில் பூசணி பயிர் செய்தார் சந்திரன். விளைச்சல் கணிசமாக இருந்த போதும் செலவிற்கு ஏற்ற விலை கிடைக்கவில்லை.

பூசணிச் செய்கைக்காக விதைக்கு மட்டும் 25 ஆயிரம் செலவு செய்திருக்கின்றேன். கிருமி நாசினி மற்றும் உரம் எல்லாம் தனியாரிடம் அதிக விலைக்கு பெற்றுத்தான் விவசாயம் செய்தேன். மின்சாரக் கட்டணத்தையும் உயர்த்திவிட்டார்கள். கடந்த மாதம் 2 ஆயிரம் ரூபா வந்திருந்த மின் கட்டணம் இந்த மாதம் 8 ஆயிரம் ரூபாயாகி இருக்கிறது. இப்படி எல்லாப் பக்கத்திலும் விவசாயச் செலவு எகியிருக்கிறது. ஆனால் பூசணிக்காயை விற்கப்போனால் கிலோ 35 ரூபாய் என்று அறா விலை கேட்கிறார்கள். ஆனால் சந்தையில் 1 கிலோ பூசணிக்காயின் விலை 150 ரூபாய்க்கு விற்பனை செய்கிறார்கள் - என்று பொருமினார் சந்திரன்.

யானை, பன்றிகளிடம் இருந்து இரவு பகலாக பயிரைக் காத்து உயிரைப் பயணம் வைத்து விவசாயம் செய் தால் உற்பத்திக் காசு கூடத் திரும்க் கிடைக்காது என்கிற நிலையில் எப்படி விவசாயத்தில் ஈடுபட முடியும் என்று கேட்கிறார் சந்திரன்.

இந்த விடயத்தில் அதிகாரிகள் தலையிட்டு விவசாய உற்பத்திகளுக்கு நியாயமான விலையைப் பெற்றுத் தரவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

நல்ல விலை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் அறுவடை செய்யும் பூசணிக் காய்களை வீட்டில் களஞ்சியப்படுத்தி வைத்திருக்கிறார் சந்திரன். - உரிய அதிகாரிகள் பூசணிக்காயை நல்ல விலைக்கு விற்பனை செய்ய உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். நீண்ட நாட்களுக்குக் களஞ்சியப்படுத்தி வைத்திருக்க முடியாது - என்றார்.

# மன்னிப்புச் சபை அதிருப்தி

அண்மையில் நடைபெற்ற ஜி - 20 நாடுகளின் நிதியமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கி ஆளுநர்களின் கூட்டத்தில், கடன் நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் இலங்கைக்கு உதவுவதற்கான வாய்ப்பு தவறவிடப்பட்டிருப்பதாக சர்வதேச மன்னிப்புச்சபையின் உலகளாவிய ஆய்வாளரும் கொள்கை ஆலோசகருமான சன்ஹிதா அம்பாஸ்ற் அதிருப்தி தெரிவித்துள்ளார்.

இலங்கையின் 22 மில்லியன் மக்களின் உரிமைகள் மீது ஏற்பட் டுள்ள தாக்கத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு இலங்கையை இக்கடன் நெருக்கடியிலிருந்து விடுவிப்பது இன்றியமையாததாகும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

உலகளாவிய பொருளாதாரம் முகங்கொடுத்திருக்கும் சவால்கள் தொடர்பில் பெப்ரவரி மாதம் நடைபெற்ற ஜி - 20 நாடுகளின் நிதியமைச்சர்கள் கூட்டத்தில் ஆராயப்பட்டது. இருப்பினும் கடன் நெருக்கடியினால் பாதிக்கப்பட்டுள்ள நாடொன்றுக்கு உதவுவதற்கான வாய்ப்பு தவறவிடப்பட்டுள்ளது.

குறிப்பாக அக்கூட்டத்தின் இறுதி அறிக்கையில் இலங்கை மக்கள் முகங்கொடுத்திருக்கும் சவால்களுக்குத் தீர்வு காண்பது குறித்து வெறுமனே மேம்போக்காக மாத்திரமே அவதானம் செலுத்தப்பட்டுள்ளமை மிகுந்த அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

அவ்வறிக்கையானது உலகளாவிய ரீதியில் நாடுகள் முகங்கொடுத்திருக்கும் கடன் நெருக்கடிக்குத் தீர்வுகாண்பதுடன், இலங்கையின் கடன் நிலைவரம் தொடர்பில் உடனடித் தீர்வொன்றைக் கண்டறிவதற்கான அவசியத்தை ஏற்றுக்கொண்டிருப்பினும், அதனை முன்னிறுத்தி செயற்திறன்மிக்க திட்டங்களையோ நடவடிக்கைகளையோ முன்வைக்கத் தவறிவிட்டது.

ஜி - 20 அமைப்பானது சீனா, இந்தியா, ஜப்பான் மற்றும் தென்கொரியா உள்ளிட்ட இலங்கையின் முக்கிய இருதரப்புக் கடன்வழங்குனர்களையும், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் உள்ளிட்ட பல்தரப்புக் கடன்வழங்கல் கட்டமைப்புக்களில் அங்கம்வகிக்கும் ஆதிக்கம் மிகுந்த நாடுகளையும் உள்ளடக்கியுள்ளது.

எனவே இவ்வமைப்பானது செயற்திறன்மிக்கவகையில் ஒருங்கிணையுமேயானால், அதனூடாக இலங்கைக்கு அவசியமான கடன்சலுகையை வழங்கவும், நெருக்கடிக்கு மத்தியில் மக்களின் பொருளாதார மற்றும் சமூக உரிமைகளை பாதுகாத்து வலுப்படுத்தவும் முடியும்.

ஏனெனில் இலங்கையின் பொருளாதார நெருக்கடியானது நாட்டுமக்கள்மீது இன்னமும் மிகமோசமான தாக்கங்களை ஏற்படுத்திவருகின்றது. உயர்வான பணவீக்கம், மட்டுப்படுத்தப்பட்டளவிலான சமூகப்பாதுகாப்பு, உணவு மற் றும் சுகாதாரம் போன்ற அத்தியாவசியப் பொருட்கள், சேவைகளைப் பெற்றுக் கொள்வதில் காணப்படும் சிக்கல்கள் என்பன மக்களின் வாழ்க்கைத்தரத்திலும், அவர்களின் உரிமைகளிலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

குறிப்பாக இலங்கையின் கடன் நெருக்கடியானது மனித உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கான அரசாங்கத்தின் இயலுமையைப் பாதித்துள்ளது.

எனவே 22 மில்லியன் மக்களின் உரிமைகளில் ஏற்படும் தாக்கத்தை முடி வுக்குக்கொண்டுவருவதற்கு இலங்கையை இக்கடன் நெருக்கடியிலிருந்து விடுவிப்பது இன்றியமையாததாகும்.

அதேவேளை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்சியடைவதை முன்னிறுத்தி சர்வதேச நாணய நிதியம் உள்ளடங்கலாக வெவ்வேறு தரப்புக்களுடன் முன்னெடுக்கப்பட்டுவரும் பேச்சுவார்த்தைகள்வெளிப்படைத்தன்மை வாய்ந்தவையாகவும், பொறுப்புக் கூறத்தக்கவையாகவும் அமைவதென்பது இவ்வாறானதொரு நெருக்கடி மீண்டும் உருவாவதைத் தவிர்ப்பதற்கு இன்றியமையாததாகும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

# கடன் அட்டைகளின் பயன்பாடு 2022 ஆம் ஆண்டில் அதிகரிப்பு!

2021ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2022 ஆம் ஆண்டில் வங்கி கடன் அட்டைகளின் பயன்பாடு அதிகரித்துள்ளது.

2021 டிசெம்பரில், 19 லட்சத்து 2 ஆயிரத்து 719 அட்டைகள் செயற்பாட்டில் இருந்தன எனவும், 2022 டிசெம்பரில் 19 லட்சத்து 52 ஆயிரத்து 991 ஆக அதிகரித்துள்ளது என்றும் மத்திய வங்கி அறிக்கைகள் காட்டுகின்றன.

அவற்றில், 13 ஆயிரத்து 445 உள்ளூர் வங்கிகடன்அட்டைகள்மற்றும்19,040,720 உலகளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கடன் அட்டைகள் உள்ளன.

மேலும் 2021ஆம் ஆண்டில் நிலுவைத் தொகை 133,285 ஆகும், இது 2022 ஆம் ஆண்டில் 143,098 ஆக அதிகரித்துள்ளது என மத்திய வங்கி அறிக்கைகள் மேலும் சுட்டிக்காட்டுகின்றன.










# நாடு கடந்த வணிக நிறுவனங்களின் வலையமைப்பை கட்டியெழுப்ப முடிவு!

## அமைச்சர் அலி சப்ரி வியூகம்




நாடுகடந்த வணிக நிறுவனங்களின் வலையமைப்பைக் கட்டியெழுப்புவதற்கான முழுமையான ஆதரவை, பிம்ஸ் டெக் அமைச்சர்கள் மட்ட கூட்டத்தில் இலங்கை வெளிப்படுத்தியுள்ளது.

இணையவழி ஊடாக நடைபெற்ற பிம்ஸ்டெக் மாநாட்டின் 19 ஆவது அமைச்சர்கள் கூட்டத்தில், உரையாற்றிய போதே வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி இதனைத் தெரிவித்துள்ளார்.

உலகப் பொருளாதார வளர்ச்சியின் பாதை ஆசியாவை நோக்கி நகர்வதால், பிம்ஸ்டெக் நாடுகளின் வர்த்தகம் மற்றும் முதலீட்டுக் கூறுகள் தொடர்புடையதாக இருப்பதற்காக புத்துயிர் பெற வேண்டும்.

அத்துடன், வர்த்தகம் மற்றும் முதலீட்டுத் துறைகளில் முன்னெச்சரிக்கையுடன் பணியாற்றுவதற்கான இலங்கையின் உறுதிப்பாட்டை அமைச்சர் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

அனைவருக்கும் உருமாறும் பொருளாதார வளர்ச்சியை உருவாக்கு-வதற்காக, உள்ளகப் பிராந்திய முதலீடுகளை ஊக்குவிக்கும் வகையில், நாடுகடந்த வணிக நிறுவனங்களின் வலையமைப்பைக் கட்டியெழுப்புவதற்கான இலங்கையின் முழுமையான ஆதரவையும் வெளி விவகார அமைச்சர் வெளிப்படுத்தியுள்ளார்.

தாய்லாந்தின் தலைமைத்துவத்தின் கீழ், பிம்ஸ்டெக் உறுப்பு நாடுகளான பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, நேபாளம், மியன்மார் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் பங்கேற்ற கூட்டம், தாய்லாந்தின் துணைப் பிரதமர் மற்றும் வெளிவிவகார அமைச்சரின் தலைமையில் நடைபெற்றுள்ளது.

# கொரோனாத் தொற்றின் பின்னர் ஷங்காய் நகரில் இருந்து வந்த முதல் சீன பயணிகள்!



கொரோனா தொற்று பரவலின் பின்னர் சீனாவின் ஷங்காய் நகரில் இருந்து, முதலாவது சுற்றுலா குழுவினர் வெள்ளிக்கிழமை இரவு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

181 பேர் கொண்ட மேற்படி சீன சுற்றுலா குழுவினர், 7 நாள்கள் இலங்கையில் சுற்றுலாவில் ஈடுபட உள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஷங்காய் நகரிலிருந்து சைனா ஈஸ்டன் விமான சேவைக்கு சொந்தமான, எம் யூ 231 என்ற விமானத்தில் இவர்கள் இலங்கையை வந்தடைந்தனர்.

வெள்ளிக்கிழமை முதல், வாரம் தோறும் ஷங்காய் மற் றும் குன்மிங் விமான நிலையங்களில் இருந்து, இலங்கைக்கு 6 விமான சேவைகளை சைனா ஈஸ்டன் விமான சேவை முன்னெடுத்துள்ளது.

## தொடர்ச்சி

இவர்களின் சாதனையை பறைசாற்றும் வகையில் கொழும்பில் நுவரெலியாவில் அமைந்துள்ள வானுயர் மாடி கட்டிடத் தொகுதிகள் பறைசாற்றி கொண்டிருக்கின்றன கட்டிட வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு தொடர்மாடி வீடு மனை விற்பனை செய்யப்பட்டதன் பின் நிறுவனத்தின் சேவைகள் முடிவுக்கு கொண்டு வரப்படாது வாங்கிய தொடர் மாடி வீடு மறுகை மீள் கொள்வரவு செய்வதற்கான ஏற்பாடு ரியல் எஸ்டேட் ஆலோசனை முகாமைத்துவம் ஆகிய பல விற்பனைக்கு பிந்திய சேவைகளை இந்நிறுவனம் வழங்குகின்றது இதன் முக்கிய நோக்கம் என்னவெனில் இச்சொத்தில் மூலதனம் இடுவோர் இச்சொத்தை விற்க முற்படும் போதெல்லாம் அதை ஒரு அசையும் சொத்தாக கருதி சந்தையில் விட்டு விலையில் விற்றுக் கொடுப்பதாகும். புளூ ஓசன் ரியல் எஸ்டேட் இட் கம்பெனி இன் இன்னொரு அங்கமாக இலங்கையில் வெளிநாட்டவர்கள் காணி வாங்குவதில் இருந்த கட்டுப்பாடுகள் விலக்கப்பட்டு இப்போது இலங்கை வெளிநாட்டவர்களுக்கு சினேக சினேகபூர்வமான உறவை ஏற்படுத்தி கூடுதலான வெளிநாட்டவர்கள் ஆதரவுடன் அரவணைத்து வருவதால் வெளிநாட்டவர்கள் இலங்கையில் காணிகளில் முதலீடு செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர் இவர்களுக்கு உதவுவதற்கு புளூ ஓசன் ரியல் எஸ்டேட் நிறுவனம் வீடு மற்றும் வர்த்தக சொத்துக்கள் மற்றும் காலியாக வைத்து கையகப்படுத்தி விற்பனை செய்தல் இலங்கை அல்லாதோர் இலங்கையில் முதலீடு செய்வதை ஊக்குவித்து உதவி அளித்தல் நிலையான மூலதன வளர்ச்சி உடையவற்றை அடையாளம் கண்டு அங்கு சொத்தை கொள்வரவு செய்ய ஊக்குவித்தல் உங்கள் பங்கு எப்படி வெற்றிகரமான முறையில் மூன்று தடவை விடுதல் மற்றும் சொத்து புராளலை எவ்வாறு வாசித்து அறிவது போன்ற சேவைகளை வழங்குகின்றது ப்ளூவேஷன் குடும்பத்தின் வெற்றிக்கு பின்னால் அக்குமத்தின் தலைவரும் பிரதான நிறைவேற்று அதிகாரியான திரு சிவராஜா துமிலன் அவரது பணிப்பாளர் சபையும் அயராது உழைத்து நிறுவனத்தை மேலும் மேலும் லாபம் அடையும் வெற்றி அடையவும் நிறுவனமாக மாற்றி வருகின்றார்கள்.

ஒரு நிறுவனத்தின் முதலீடு செய்ய விரும்பும் எவரும் நிறுவனத்தின் பின்புறம் மற்றும் பிறத்தன்மை ஆகியவற்றை அறிந்து கொள்ள முற்படுவது இயற்கையே நிறுவனத்தின் கொண்டு நடத்துபவர்கள் தாழ்மை தராதரம் அனுபவம் மற்றும் அவர்களின் முன்னைய சாதனைகள் ஆகியவற்றையும் அறிந்து கொள்ளல் அவசியம் ப்ளூா ஓசன் குழுமத்தின் தலைவரும் பிரதம நிறைவேற்றி அதிகாரமான சிவராஜா துமிலன் தனது ஆற்றலால் பல நிறுவனங்களை புதிது புதிதாக கையகப்படுத்தி ப்ளூா ஓஷன் குடும்பத்தை விரிவு படுத்தி வருகின்றார் இதற்கு உதாரணமாக இலங்கையில் 41 வருடங்கள் பழமை வாய்ந்ததும் பங்குச் சந்தையின் பிரதான அங்க அங்க தவறுமான கெள்சி டெவலப்மெண்ட் நிறுவனத்தை கையகப்படுத்தி அதன் தலைவராகவும் பிரதம நிறைவேற்றி அதிகாரியாகவும் விளங்குகின்றார் இவர் பல மேல்நிலைப் பட்டங்களை பெற்றுக்கொண்ட சாதனையாளர் அதேவேளை கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு ப்ளூாவேஷன் நிறுவனங்களின் குழும சேவைகளை விஸ்தரித்து வர்த்தகத் துறையில் கட்டட கலையின் மூலம் பல வடிவங்களை அறிமுகப்படுத்தி இலங்கைக்கும் அந்நிய செலாவணியை கொண்டு வந்தவர் ஆவார் இவரின் வெற்றி பயணத்தில் வரும் முக்கிய அங்கத்துவ உறுப்பினரான லிங்க் இன்ஜினியரிங் நிறுவனம் சுமார் 49 வருடங்களுக்கு மேலாக அரசு மற்றும் தனியார் துறை கட்டிடங்களை அமைத்து சாதனை படைத்துள்ளது. இந்நிலையில் ப்ளூாவேஷன் நிறுவனங்களின் குழுமம் ப்ளூாவேஷன் பிரசிடென்ஸ் லிங்க் இன்ஜினியரியுடன் சேர்ந்து பின்னர் சேர்த்துக்கொள்ளப்பட்ட கேள்வி நிறுவனம் ஆகிய நிறுவனங்கள் ஒன்றிணைந்து இருப்பதால் கட்டுமானம் மற்றும் தொடர்பாடி வீடு மனை அமைப்பதில் சாதனை புரிந்த வலுவான நம்பிக்கையுடைய நிறுவனங்களாக வெற்றி நடை போடுகின்றது. எனவே இவற்றை அறிந்து கொண்ட புதிய முதலீட்டாளர்கள் இத்துறையில் முதலீடு செய்வது முன் வருவது இயற்கையே.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# RADIANT DAWN

**A Sunday Supplement in English to Kalaikkathir**

**Page I** English for all **Sunday the 12th of March 2023**


We welcome students' articles in word for publication

-Editor-


kalaikkathiredu@gmail.com


## *Read the following passage and Answer: the question that follows.*

Educating boys and girls together has always been an important and stressful issue. Many parents believe that the educational process can be more effective if the classes are divided according to the gender of the students. Although same-sex schools are considered too conservative and strict in today's times. Nevertheless, there are still supporters of this manner of education. Some parents are not in favor of a co-educational system as they feel that the presence of the opposite gender distracts the attention of students and prevents them from concentrating on studies.

On the other hand, supporters of co-education feel that as boys and girls are different, it is a valuable experience for both genders to communicate with each other. Moreover, the earlier boys and girls begin to communicate, the sooner they acquire social skills, which are crucial to communicating freely in the world. Further, if there are girls in the class, boys may well possibly try to behave better in order not to lose face in front of the girls.

Apart from all that has been mentioned above, educating boys and girls together helps them understand and mutually respect each other from an early stage in life. This can possibly help in building a generation that doesn't suffer from gender bias and is open to a healthy competition even between the two genders.



1. Why according to the writer are some parents not in favor of the co-education system?

---------------------------------------------------------------------------------------

2. Why are socializing skills important?

---------------------------------------------------------------------------------------

3. Same-sex schools are considered

---------------------------------------------------------------------------------------

4. What according to the writer helps girls and boys develop mutual respect for each other?

---------------------------------------------------------------------------------------

5. Find words from the passage that mean

a. traditional - ---------------------------------------------------------------------

b. paying attention ------------------------------------------------------------------

c. vital ----------------------------------------------------------------------------------

d. unfairness - ---------------------------------------------------------------------

### Answer

1. Some parents are not in favour of the co-education system as they feel that the presence of the opposite gender distracts the attention of students and prevents them from concentrating on studies.
2. They are is essential for acquiring socialising skills and they are required to communicate freely in the surrounding world.
3. Conservative and strict in today's times.
4. According to the writer, educating boys and girls together helps them to understand and mutually respect each other from an early stage in life.
5. a. conservative b. concentration
   c. crucial d. bias





Nippon Paint Lanka receives Eco-Labelling Certification for their full range of Water Based Paints, becoming a member of the Global Eco Labelling Network. Nippon Paint Lanka General Manager, Mr. Nemantha Abeysinghe, states that the certification confirms Nippon Paint's commitment to sustainability and provides confidence to consumers and procurement teams that their products have been independently assessed as environmentally friendly and ethical.




"Empowering Women, Empowering Society" - Celebrating International Women's Day 2023 at Nippon Paint Lanka, initiated by Nippon Paint Lanka General Manager Mr. Nemantha Abeysinghe. inspiring event was successfully held on 8 th march, recognizing and honouring the achievements of women and promoting gender equality and inclusivity in the workplace and beyond.


**"konwledge isn't free. You have to pay attention"**

# Read the following passage and Answer: the question that follows.



In response to the increasing environmental damage wrought by poachers, authorities placed a ban on ivory in the 1980s. Although the ban resulted in an initial decrease in the sale and trade of illegal ivory and a concurrent increase in the elephant population, more pressing needs caused most Western nations to withdraw funding for poaching prevention programs. Without significant financial support, poorer countries were unable to effectively combat poachers. The resulting explosion in the ivory trade has seen prices increase to nearly 10 times the $45 per pound price at the beginning of the decade.

Unfortunately, the countries with the worst poaching problems have also tended to be the ones least able to combat the problem due to unstable political systems, corruption, lack of comprehensive enforcement programs, or some combination of all these factors. One primary hindrance to better enforcement of the ivory ban came from an inability to definitively identify the country of origin of illegal ivory. Countries used this uncertainty to avoid responsibility for curbing illegal poaching in their territories by attempting to blame other countries for the oversights in enforcement.

Now, though, zoologists have perfected a new DNA identification system. First, scientists gathered genetic data from the population of African elephants, an arduous effort that ultimately resulted in a detailed DNA-based map of the distribution of African elephants. Then, the researchers developed a method to extract DNA evidence from ivory, allowing them to match the ivory with elephant populations on the map. Zoologists hope this new method will pinpoint the exact origin of poached ivory and force countries to accept their responsibility in enforcing the ban.

**1. The passage suggests which of the following about the ivory ban?**
(a) It will be successful now that the DNA-based map has been developed.
(b) It has been mostly unsuccessful in reducing the trade of illegal ivory.
(c) It will continue to be ineffective unless the problems of political corruption are solved.
(d) Western monetary support was a major factor in its success.

**2. The response of the countries with the worst poaching problems to the situation was most analogous to:**
(a) a tax evader who uses deceptive accounting practices to hide her income from auditors
(b) an embezzler who steals from her company by pilfering small amounts of money over a long period of time
(c) a criminal who argues that it is not he but one of his accomplices who is guilty of a crime
(d) a con artist who convinces his victim that it is in the victim's best interest to help him

**3. The passage suggests which of the following about the DNA-based map created by zoologists?**
(a) Its assemblage involved a great deal of work on the part of the researchers.
(b) Its creation will force countries to accept responsibility for the ivory poached from within their
borders. (c) The map is able to pinpoint the exact elephant from which poached ivory was obtained.
(d) It must be updated constantly to account for changes in elephant populations.

**4. The passage is chiefly concerned with:**
(a) advocating a course of action for countries with poaching problems
(b) exposing the weaknesses of the ivory ban
(c) pleading with Western countries to re-institute financing for the ivory ban
(d) detailing a way to overcome a problem that has lessened the effectiveness of the ivory ban

## Answer

1. (d) Western monetary support was a major factor in its success.
2. (c) a criminal who argues that it is not he but one of his accomplices who is guilty of a crime
3. (a) Its assemblage involved a great deal of work on the part of the researchers.
4. (d) detailing a way to overcome a problem that has lessened the effectiveness of the ivory ban



Andrew Fang is a legend in bowling. He was voted Sportsman of the Year in 2000. Andrew is only 23. He started bowling when he was nine, picking up the sport from his parents.. "When I was just starting out, my family supported me by paying for my training and equipment," says the Arts undergraduate whose major is economics. Competition or not, Andrew has no problem keeping fit. "I like biking. Rain or shine, you'll find me on my mountain bike cycling for at least two hours at Bukit Timah, four times a week. It takes my mind off problems and troubles," says Andrew. Rest and recreation are as important as exercise.

"I love sleeping," Andrew says. "When I'm preparing for tournaments, I usually sleep eight to nine hours a day." He also likes playing pool, reading a good novel or watching a show with his friends. When it comes to food, Andrew says he takes everything in moderation and stays away from fried and fatty food. He takes in more protein than the average person and tries to drink as much water as he can to prevent dehydration since he cycles so much. Because of his discipline, Andrew's working relationship with his coach has been very smooth. Andrew's priority, however, is education. "Getting my degree is my biggest wish now. After that, I can concen trate fully on professional bowling," Andrew states firmly.

1. Andrew Fang is introduced to bowling by his _
(a) parents - -----------------------------------------------
(b) friends -------------------------------------------
(c) coach ---------------------------------------------
(d) teacher --------------------------------------------

2. What does Andrew do when he is stressed?
(a) He goes bowling.
(b) He climbs up Bukit Timah Hill.
(c) He eats fried and fatty food.
(d) He goes cycling on his mountain bike.


3. How does Andrew prepare himself for tournaments?
(a) He cycles for two hours every day.
(b) He sleeps at least eight hours a day.
(c) He plays pool and reads a good novel.
(d) He takes in less protein and drinks more water.

4. Which one of the following is most important to Andrew now? It is to
(a) be a professional bowler
(b) graduate from university
(c) be voted as Sportsman of the Year
(d) pay his parents for his training and the equipment

5. "Andrew Fang is a legend in bowling" means that
(a) He has written a book on bowling
(b) He is very disciplined and co-operates with his coach.
(c) His achievements in sports must be remarkable.
(d) His interest in bowling lasted for fourteen years.

## Answer

1. (a) parents
2. He goes cycling on his mountain bike.
3. (b) He sleeps at least eight hours a day.
4. (b) graduate from university
5. (c) His achievements in sports must be remarkable.




***Author: Beatrix Potter***

This is the story of a little mischievous rabbit, named Peter who disobeys his mother's advice of not visiting the garden of their neighbor Mr. MacGregor. Instead, he decides to go to the place and gets himself into big trouble when Mr. MacGregor spots him and tried to catch him. Poor Peter Rabbit had to run for this life and somehow manages to get back to his house and mother.




***Edited by Watty Piper***

The fairytale is about a young beautiful princess is sent away to marry a prince by her mother along with a maid. When maid forces the princess to switch places with her, the poor princess starts looking after the geese in the prince's farm. Finally the king finds out the whole truth and the maid has to pay the price for her deeds.



Probably the most popular English story for kids ever, Cinderella narrates the story of a beautiful orphaned girl. She lives with her step mother and step sisters who make her do all household chores. Till one day, there is a ballroom party to which Cinderella manages to go with little help from her fairy godmother. Host of the party, a prince, is smitten by her beauty and uses the glass shoe that she leaves behind to track her down and makes her his queen.

# Can we recover from Sri Lanka's deep economic crisis: Choose to fail or succeed



### Resource constraints for a fast forward journey

Sri Lanka is one of the very smaller island economies in the world. Yet, we have more than 22 million people with a very high population density of 341 people per sq. km. Our economy is outgrowing the capacity of the resource base to support it. Carrying capacity of this small island economy surpassed decades back. Shrinking forests, rising human/wildlife conflicts, eroding soil, fast-growing inequality in access to resources, and mounting natural disasters are alarming consequences of over-consuming our finite natural resources to meet infinite economic demands. The country's reputation as a resource-rich small island is fading away. We are moving from the notion 'small is beautiful' to a threat 'small is vulnerable' as our capacity to satisfy fast-growing demands of the current economy and our human enterprise is swiftly declining. We increasingly depend on external sources to meet our excess demand for consumptions.

### Living beyond our means

Expenditure of our economy is rising much faster than our revenue generation. As depicted in Figure 1, Public Expenditure/Revenue Gap continued to grow steadily over the last two decades and widening of the gap accelerated since 2016. In 2020, COVID-19 made the situation worse. Public revenues declined much faster against sharply rising expenditure, making it nearly impossible to bridge the gap without radical and painful measures to cut down the cost and increase revenues.

We rely heavily on borrowed funds, both foreign and domestic, to fill the ever-increasing deficit.

Our post-pandemic economic recovery is rather weak. We are confronted with absolute lack of resilience and incapacity to recover from the economic downfall due mainly to policy oscillation with limitations and weaknesses of our linear economic path.

We recently entered a self-created gloomy world with deepening economic, fiscal and human crises while other countries in South Asia are making steady progress in recovering their economies. All South Asian countries were able to bounce back in 2021 from the downfall of their economies in 2020. Now, they are moving ahead to sustain positive GDP growth levels in 2022 and 2023. But, Sri Lanka is predicted to remain with a negative GDP growth as shown in Figure 2.

Our economy is shrinking and we are getting marginalised in the South Asian region with unprecedented pressure on our already limited fiscal capacity not only to tackle urgent livelihood problems and social needs but also to make mandatory debts servicing payments. Hence, we are on an unsustainable fiscal path.

Spending is rising and revenues are falling short, requiring the Government to borrow huge sums each year to make up the difference. We face staggering deficits. Our public debts have increased dramatically, rising from 69% of GDP in 2010 to 99.5% in 2021, equalling the total value of all goods and services produced in the economy. This means that nothing is left in our economy for us to claim as our own debts-free goods and services. The escalation was driven in large by a slew of fiscally irresponsible policies and undisciplined revenue/expenditure management practices, along with a deep economic downturn. After decades of distorting the picture of living on borrowed funds and misinterpretations of economic declines for the populism driven political survival, we have arrived at a critical juncture of reality and truth. Every political party and bureaucratic subservience is to blame.

### Lack of potentials to grow

Recovery of our economy depends very much on the potential to grow compared to other South Asian economies. Growth potential of our economy is far below that of other South Asia economies with the predicted lowest negative GDP growth of -3.0% and highest inflation of 18.6 for 2023. As forecasted, Maldives will reach the highest GDP growth of 10.4% and the lowest inflation of 2.8% in 2023. All other South Asian economies except Pakistan will have 4% and above GDP growth with single digit inflations. Our country is falling behind in the steadily growing South Asian region, making it extremely difficult for us to maintain a competitive position in the market and to retain the market share of exports and tourism. Upgrading the country rating of South Asian economies will be continued in contrast to downgrading of our economy. If we fail to unite, act fast and work hard collectively to regain our position, most of foreign companies and investors will leave us, making our country an abandoned island in South Asia.

Comparatively, the slowest growth performance expected from our small island economy for 2023 and after will not be sufficient to improve the deficit situation in the short run because recurrent expenditure of the Government will remain very high to pay essential services and spend money for the welfare of a large number of poor households. Once the entire revenue is used to pay the essential recurrent expenditure, nothing is left for other mandatory expenses related to debt servicing and infrastructure maintenance. As a result, we are getting squeezed further without funds for all other priorities to expedite the GDP growth performance. Revenue generation, on the other hand, will remain quite low as the majority of economic enterprises are forced to stay behind without their economic activities. Implementing the most stringent austerity measures of cutting down cost and increasing tax revenues at this juncture of deepening economic crisis will be a difficult exercise.

### Choose to fail or succeed

If all income-earning citizens are not prepared to unite rather than divide, sacrifice instead of resist and participate instead of disrupt to raise revenues and cut expenses, we together with our next generation will move onto a nowhere-to-turn path of decline and collapse. Government, on the other hand, will fail to reach cost cutting/revenue collection targets and public debts will outstrip the entire island economy, growing to above 100% of GDP for the rest of this decade. Interest rates will remain at unaffordable high levels for business enterprises and individual borrowers. Private investment will be discouraged and foreign investment will be diverted to other stable and progressive South Asian countries around us.

Accelerated spending on rising political populism and politically divided competition for power, will not generate urgently needed financial resources to overcome the on-going fiscal crisis. Ineffective bureaucratic service units and emerging political cost centres will speedup cost escalation, bringing unprecedented pressure on the fiscal capacity. If we fail to cut down rapidly escalating cost drastically to facilitate stable revenue growth, our next generation will have to face an extreme version of the current crisis we are confronting today.

We all have a prime responsibility to contribute in numerous ways to rebuild our economy and regain the reputation of our beautiful island – Pearl of the Indian Ocean. We have to change our mindset to pull together, not to pull apart, to put politics aside and to do the right thing to bring the economy back to a sustainable path of growth. We cannot miss this most consequential moment in our history to change cost-escalating, divided, faulty, fragile and inefficient political-economic structures and to form completely a new solidarity-based sustainable pathway to growth and prosperity, driven by truth, trust, inclusive collaboration, collective actions and mutuality.

Every citizen of our small island must understand the magnitude of the crisis without prejudice. Although it is difficult to live at this juncture of human suffering and rising cost of living, our prime responsibility and commitment must be to contribute as much as possible for rebuilding the economy before it collapses. If not, human suffering will continue with social unrest, triggered economic dislocation and escalated structural violence making it extremely difficult for the next generation to live.



பாலசிங்கம் நிர்மலா

# அருகி வரும் சலவைக் கைத்தொழில்

இலாபத்தை பெற்றுக் கொடுத்த சலவைக் கைத்தொழிலானது தற்காலத்தில் காணாமல் போகின்ற நிலைமையை காண முடிகின்றது. இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சி அதிக ரித்த காலகட்டத்தில் கைத்தொழில்கள் கொஞ்சம் கொஞ்சமாக அழிந்து வருகின்றன. அந்த வகையில் தொழில்நுட்பத்தின் அதீத வளர்ச்சியால் மறைந்து போன தொழில்களில் ஒன்றுதான் இந்த சலவைக் கைத்தொழில்.

ஆரம்ப காலத்தில் நம் முன்னோர்கள் அழுக்குப் படிந்த துணிகளை மூட்டைகளாகக் கட்டிக்கொண்டு ஆற்றங்கரைக்கும், குளக்கரைக்கும் சென்று துணிகளை துவைத்து வந்தனர். பின்னர் இதிலிருந்து மாறி ஒவ்வொரு பகுதிகளிலும் இருக்கும் சலவைத் தொழிலாளர்களிடம் துணிகளைக் கொடுத்து சலவை செய்து வந்தனர். ஆனால் விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாக இந் நிலைமை மாறிக்கொண்டே வருகின்றது. ஐந்தாறு தலை முறைகளாக தொடர்ந்து சலவைத் தொழில் மட்டுமே வாழ்க்கை என்று அங்கேயே பிறந்து, அங்கேயே வளர்ந்து, வாழ்ந்து வரும் குறிப்பிட்ட சமுதாய மக்களுக்கு இந்நிலைமை ஏமாற்றத்தைத் தந்துள்ளது.

ஒரு கிராமத்தில் சலவைத் தொழிலாளர்கள் ஒன்றிரண்டு பேரையே காண முடிகின்றது. வெயிலோ, மழையோ இரண்டுமே இவர்களுக்குத் தேவை. ஆனால் இரண்டுமே எல்லை மீறினால் இவர்களது வாழ்க்கை திண்டாட்டமாகிவிடும். கடந்த காலங்களில் துணிகள் சலவை செய்பவர்கள், சாயம் போடுபவர்கள், வெளுப்பவர்கள் அதிக அளவில் இருந்தனர். தற்காலத்தில் இளம் தலைமுறையினர் இவற்றினை விரும்பாததால் சலவைத் தொழிலானது தனது இறுதிக் கட்டத்தில் தவித்துக் கொண்டிருக்கின்றது.

சலவைக்குத் துணிகள் இன்றி சலவைத் தொழி லாளிகள் பிற தொழில்களிற்குச் செல்லும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இந் நிலையில் சலவைத் தொழி லாளி ஒருவர் தங்கள் தொழில் நலிவடைந்த காரணம் பற்றி இவ்வாறு குறிப்பிடுகின்றார்.

சலவைத் தொழில் எங்களுடைய குலதொழில். நான் படிக்கிற காலத்துல என்னுடைய அப்பா காலை 5:00 மணிக்கு எல்லாம் எழும்பி ஒவ்வொரு வீட்டுக்கும் சென்று சலவைத் துணிகளை வாங்கிட்டு வருவாரு. வெயில் எறிக்கிறதுக்கு முன்னாடி அந்த துணிகளைச் சலவை செய்வார். நானும் அப்பாக்கு தண்ணி அள்ளி கொடுத்து உதவி செய்வேன். அப்புறம் வெயில் வந்தவுடன் காய வச்சு எடுத்து வெளுத்துக் கொடுப்பாரு. ஒரு துணிக்கு 20 ரூபாய் அப்படித் தான் கூலி. அதுல வார காசுகளை வச்சுத் தான் அன்றைய நாள் சாப்பாட்டுச் செலவு போகும். இந்த நிலைமையில என்னால படிக்க முடியல. என்னுடைய 12 வயசுலயே நான் படிப்ப விட்டுட்டேன். அப்பாக்கு வயசாகிப் போனதால் நானே சலவைத் தொழில எடுத்து நடாத்தினேன். எனக்கு கீழ இரண்டு தங்கச்சிகள் நான்தான் இரண்டு பேரை யும் படிப்பிக்கணும். இப்போ எல்லாப் பொறுப்பும் என் மேல திணிக்கப்பட்டது. 12 வயசு சிறுவன் என்னால என்ன செய்ய முடியும். இருந்தும் நான் ஒவ்வொரு வீடா போய் சலவைத் துணிகளைச் சேகரித்து வந்து துவைத்துக் கொடுக்க அப்பா வெளுப்பதற்கு உதவி செய்து வந்தாரு. சிறுவன் என்பதால் என்னவோ எனக்கு துணிகள் நிறை யவே வரும். ஒரு நாளைக்கு 20 தொடக்கம் 25 துணிகள் வரை கிடைக்கும். அப்படியே எங்கட வாழ்க்கை போயிட்டு இருந்துச்சு.



இப்ப எனக்கு 50 வயசு ஆகிட்டு. பிள்ளைகளும் மூன்று பேர் இருக்கினம். நான் பட்ட கஷ்டம் பிள்ளைகள் படக் கூடா என்று அவர்களைக் கஷ்டப்பட்டு படிக்க வச்சேன். அவர்களும் படிச்சு நல்ல நிலை மைக்கு வந்து விட்டார்கள். இனிமேல் அவர்கள் இந்தச் சலவைத் தொழிலை எட்டிக் கூடப் பார்க்க மாட்டார்கள். நானும் எனது பிள்ளைகள் நல்ல வேலையில் இருக்க வேண்டும் என்று தான் விரும்புகின்றேன்.



எனக்கு இப்போ எல்லாம் சலவைக்குத்துணிகள்வாரதில்லை. வருகின்ற துணிகளை மாத்திரம் சலவை செய்து வெளுத்துக் கொடுக்கிறன். வீட்டிற்கு வீடு சலவை இயந்திரப் பாவனையும் எமது தொழில் பாதிப்படையக் காரணமாக இருக்கின்றது. அதைவிட இப்பொழுது ஆங்காங்கே சலவைக் கடைகளின் வருகையினால் எமக்கு தொழில் இல்லாமல் போய் விட்டது. சலவைத் தொழிலானது இன்னும் ஐந்து வருடங்களில் இல்லாமல் போய்விடும். எங்களது தலைமுறையினர் படித்து நல்ல வேலைகளில் இருப்பதால் இந்தப் பக்கம் எட்டிப் பார்க்க மாட்டார்கள் என்று கூறினார்.

நமது பிள்ளைகள் நல்ல வேலையில் இருக்க வேண்டும்என்றே தானும் விரும்புவதாக கூறி னார். தற்போது சலவைத் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் மூத்தவர்களுடன் சலவைத் தொழிலும் முடிவுக்கு வருவதைப் பொறுத்திருந்து காண முடியும்.



காலைக்கதிர் Kalaikkathir

# மக்களின் அசமந்தப் போக்கும் பாதிக்கப்படும் துப்பரவுப் பணியும்



நா.சாருமதி

> திண்மக் கழிவு முகாமைத்துவம் என்பது உடனடியாகக் கட்டமைத்துவிடக் கூடிய திட்டமல்ல, எனினும் மக்கள் குப்பைகளை அப்புறப்படுத்துவதற்கு பொறுப்புணர்வுடன் செயற்படுவதன் மூலம் இந்த நெருக்கடி நிலையைத் தடுக்கமுடியும்.

இலங்கையிலுள்ள நகரங்களில் அதிக குப்பை சேரும் பட்டியலில் யாழ்ப்பாணமும் முன்னணி வகிக்கின்றது. முறையான திண்மக்கழிவகற்றல் என்பது சவாலானதொரு விடயமாகும். குறிப்பாக வீடுகளிலோ வீதிகளிலோ குப்பைகள் தேங்கி இருந்தால் துர்நாற்றம் வீசி நடமாட்டத்திற்கு இடையூறாவதோடு சூழல் மாசும் ஏற்படும். குறிப்பாக நகர்ப்புறங்களில் திண்மக் கழிவுகளை வெளியேற்றுவதில் பாரிய சிக்கல் தன்மை காணப்படுகின்றது.

இருப்பினும் மாநகர சபை நிர்வாகத்தினரின் திண்மக் கழிவகற்றல் செயற்பாடோக வாகனங்களில் குப்பைகளை வீடுகள், வியாபார நிலையங்கள், கைத்தொழில் நிறுவனங்கள் போன்றவற்றில் கழிவகற்றல் பணியில் ஈடுபட்டு வருவதனால் மக்களுக்குப் பெரிதும் துணையாக அமைகின்றது. இருப்பினும் வாரத்திற்கு ஒருமுறை மாத்திரமே குப்பை வாகனங்கள் வீதிக்கு வருகின்றமையால் அன்றாடம் சேருகின்ற குப்பைகளை சேர்த்து வைக்கமுடியாது இரவோடு இரவாக குப்பைகளை வீதியோரங்களில் வீசிச்செல்லும் நிலை காணப்படுகின்றது.

பொதுமக்கள் திண்மக்கழிவகற்றலை ஒழுங்கான முறையில் மேற்கொள்ளாத காரணத்தால் சூழல் பாதிக்கப்படுவதுடன் குறித்த துப்புரவு பணியாளர்களும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

சமூகப்பொறுப்பற்ற பலரும் தமது வீட்டைச் சுத்தம் செய்தால் போதும் என்ற எண்ணத்தில் பொறுப்பற்று மக்கள் தமது வீட்டு, அலுவலக, கைத்தொழில் நிறுவனக் கழிவுகளைக் கண்ட கண்ட இடங்களில் போடுவது, குறிப்பாக வீதிகள், பாடசாலை, பல்கலைக்கழகம், ஆலயங்கள், பொதுக் கட்டடங்களுக்கு அருகாமையில் தூர இடங்களில் இருந்து கொண்டுவந்த திண்மக் கழிவுகளை வீசிவிட்டுச் செல்கின்றனர். இது போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்தும் விடயமாக மாறி வருகின்றது. அதுமட்டுமன்றி விலங்குகள் அவற்றை நாலாபுறமும் இழுத்துச் சென்று போடுவதால் வீதிகள் அலங்கோலமாக காட்சியளிக்கின்றன. இவ்வாறான செயற்பாட்டால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவதுடன் விலங்குகளும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றன.

எமது நாட்டைப் பொறுத்தமட்டில் கழிவுப்பொருள் முகாமைத்துவம் பாரிய சவாலாக காணப்படுவது உண்மைதான். இருப்பினும் திண்மக்கழிவகற்றலில் தரம் பிரிப்பு முறையை கையாள்வது மிகக் குறைவு என துப்புரவு பணியாளர்கள் கூறுகின்றனர். அன்றாட பாவனையில் திண்மக்கழிவுகளை மக்கள் தரம்பிரிக்க தவறுகின்றனர் என்ற கருத்துத் தொடர்பில் ஒரு பணியாளரிடம் பேசியபோது

மக்கள் தரம் பிரித்து குப்பைகளைக் கொடுக்காத பட்சத்தில் நாமே தரம் பிரிப்பதுண்டு இதனால் வரும் பின்விளைவுகள் பல நோய்களை உருவாக்குகின்றன. ஒவ்வாமை, சிரங்கு, சுவாசநோய் என நாம் எதிர்நோக்கி வருகின்றோம். இதை மக்கள் சக மனிதர்களாக புரிந்து கொள்ள வேண்டியது அவசியம் என்றார்.

மக்கள் பெரும்பாலும் உக்கும் உக்காத கழிவுகளை ஒன்றாக பைகளில் இட்டு தருவதனால் அதை பிரித்து கட்டி ஏற்றுவதில் நேரம் வீணாக்கப்படுவதுடன் துர்நாற்றம் வீசும் போது பணி மிகவும் கடினமாக இருப்பதாகக் குறிப்பிடுகின்றனர். இது தொடர்பில் மக்கள் தாமே உணர்ந்து குப்பைகளை தரப் பிரிப்புச் செய்து கொடுப்பதன் ஊடாக தமக்கு பெரும் உதவியாக இருக்கும் என குறிப்பிடுகின்றனர்.

வீட்டுக் கழிவுகளை அப்புறப்படுத்த முன்வரும் இந்த துப்புரவு பணியாளர்கள் பற்றியும் சிந்திப்பது பொதுமக்களின் கடமையாகும். குப்பைகளை வகைவாரியாகப் பிரித்தெடுப்பதற்கு நேரமும் பணமும் செலவாகும் காரணத்தால் மக்கள் அசமந்தமாகவே இருக்கின்றனர். குப்பைகளில் உலோகம், பொலித்தீன், பிளாஸ்டிக், கண்ணாடி என உக்காத பொருட்களும் தாவரக்கழிவு போன்ற உக்கும் கழிவுகளும் உண்டு. இவற்றை வகைப்பிரிப்புச் செய்வதன்மூலம் மீள் சுழற்சி, கூட்டுப்பசளை போன்றன மேற்கொள்ளமுடியும்.

தினமும் வெளியேற்றும் வீட்டுக்கழிவுகளை உக்கும் உட்காத கழிவுகள் என வகை பிரித்து உக்கக்கூடிய காய்கறி இலை கழிவுகளை சேதன பசளை தயாரிப்பில் ஈடுபடுத்த முடியும். அது தவிர உட்காத பொலித்தீன், பிளாஸ்டிக் கழிவுகளை வெவ்வேறாக பிரித்து மாநகர சபை வாகனங்களில் கொடுப்பதன் ஊடாக அவை மீள் சுழற்சிக்கு உட்படுத்தப்படுவதோடு துப்புரவு பணியாளர்களுக்கு மிகவும் உதவியாக இருப்பது மட்டுமன்றி சூழல் பாதுகாப்பும் பேணப்படும். இது தொடர்பில் ஒரு துப்புரவு பணியாளர் ஒருவருடன் உரையாடிய போது அவா முக்கியமான சழலவியங்களைக் குறிப்பிட்டார்;

பலரும் குப்பை கூழங்களை வேறு வேறாகப் பிரித்து தருவது குறைவாகவே காணப்படுகிறது. நாங்கள் தினமும் ஒவ்வொரு பிரதேசமாக வாகனங்களில் சென்று வீதியை துப்புரவு செய்வதோடு வீட்டு, வியாபார கழிவுகளையும் எடுத்து வருகின்றோம் மக்கள் எம்மைப் பற்றியும் சற்று சிந்திக்க வேண்டும், பல முறை கூறியும் கேட்காத பட்சத்தில் பிரித்து வையுங்கள் என கூறி சென்று விடுவது வழமை எனக் கூறினார்.

காலம் தாழ்த்தியே மீள்சுழற்சி பற்றிய சிந்தனை எழுந்தாலும் சீரான திண்மக் கழிவகற்றலில் இனி அலட்சியம் காட்டுவது சூழலுக்கும் நமக்கும் ஆபத்தையே ஏற்படுத்தும். திண்மக் கழிவுகள் இரு வகையில் கையாளப்படுகின்றன. குறிப்பாக எரித்து அழிக்கும் முறை மற்றும் நிலத்தில் புதைக்கும் முறை என்பனவாகும். இது தவிர ஏரி, கடலில் கொட்டும்






தன்மையும் காணப்படுவதனால் வளி மாசு, நில மாசு, கடல்வாழ் உயிரினங்கள் பாதிப்பு என பல பாதிப்புக்கள் ஏற்படுகின்றன.

மேலும் அதிகளவு இடங்களில் டயர்கள், சிரட் டைகள், பேணிகள் வீசப்பட்டிருக்கும் போது மழைக் காலத்தில் நீர் தேங்கி நுளம்பு பெருக்கத்திற்கு வழிவகுக்கும். இதனால் அண்மை காலத்தில் டெங்கு உள்ளிட்ட நோய்கள் பரவி வருகின்றன. அதுமட்டுமன்றி வீதிகள், வடிகான்களை துப்பரவு செய்தாலும் அவ்விடங்களில் மீண்டும் குப்பைகளை போடும் மக்களின் அசமந்தப்போக்கு கவலைக்குரியதாவதோடு குப்பைகளை தரம் பிரித்து கொடுக்கும் சோம்பலால் காணிகளுக்குள்ளே எரிக்கின்ற செயற்பாடுகளையும் காணமுடிகின்றது. பிளாஸ்டிக் போன்ற பொருட்களை எரிப்பதனால் வளி மாசடையும் சந்தர்ப்பம் அதிகமாகக் காணப்படுகின்றது.

இது தொடர்பில் மக்கள் மத்தியில் அதிகளவு விழிப்புணர்வு அவசியமாகின்றது. குறிப்பாக முறையான திண்மக்கழிவு முகாமைத்துவ நுட்பங்களை பயிற்சிகள் ஊடாக கற்றுக்கொடுக்கப்பட வேண்டும். அதுமட்டுமன்றி வீதிகளில் குப்பைகளை வீசுவோர் மற்றும் சூழலியல் சார் சட்டத்தை மீறுபவோருக்கு எதிராக தண்டனைகள் வழங்கப்படவேண்டும். இருப்பினும் மக்கள் தாமாக உணர்ந்து செயற்படாவிட்டால் நாடு குப்பைகளால் நிறையும் துர்ப்பாக்கிய நிலைக்குள் தள்ளப்படும் என்பதே உண்மை.

திண்மக் கழிவு முகாமைத்துவம் என்பது உடனடியாகக் கட்டமைத்துவிடக் கூடிய திட்டமல்ல, எனினும் மக்கள் குப்பைகளை அப்புறப்படுத்துவதற்கு பொறுப்புணர்வுடன் செயற்படுவதன்மூலம் இந்த நெருக்கடி நிலையைத் தடுக்கமுடியும்.



# இனி காற்றுக்கும் காசு தான்!!!

தர்மபாலன் சஞ்சீவ்

நாளுக்கு நாள் எம் நாட்டில் என்னென்ன மாற்றம் நடக்கப் போகின்றதோ என்ற கேள்வியுடன் தான் நாட்கள் நகருக்கின்றது. ஒவ்வொரு நாளினதும் காலையில் கண் விழிக்கும் போது - நாட்டில் ஏற்பட்டுள்ள புதிய மாற்றம் - என்ற செய்தியுடனேயே அன்றைய நாள் ஆரம்பிக்கின்றது. அதில் முக்கியமான ஒன்று தான் விலையேற்றம். இந்த செய்தி எல்லா பிரஜைகளிலும் ஒரே மாதிரியான தாக்கத்தை ஏற்படுத்துமா?? மாதச் சம்பளம் பெறும் அரச ஊழியனுக்கு ஒரு மாதிரியாகவும் தினக்கூலி வேலைக்குச் செல்பவனுக்கு ஒரு மாதிரியாகவும் கணவனை இழந்த பெண் தலைமைக்கு ஒரு மாதிரியாகவும் அமையும்.

உடலைவருத்திதன்வியர்வையை மண்ணுக்கு உரமாக்கி தினக்கூலி செய்பவனுக்கு ஒரு நாளிற்கு கிடைக்க போவது ஆயிரத்து ஐந்தூறு ரூபாய் தான் அதுகும் சில சமயங்களில் ஆயிரம் ரூபாயோடு நின்றுவிடும். இது ஆணிற்கானது அதுவே பெண் என்றால் அவளின் தினக்கூலி சம்பளம் எண்ணூறு தொடக்கம் தொள்ளாயிரம் ரூபாயோடு நின்றுவிடும். இதற்கும் இன்றைய காலக்கட்ட விலைவாசிக்கும் என்ன சம்மந்தம் இருக்க போகின்றது எனப் பலருக்கு அலட்சியம். தினக்கூலிக்கு செல்லும் ஆணாக இருக்கட்டும் பெண்ணாக இருக்கட்டும் மாதத்தின் 30 நாட்களும் வேலைக்குச் செல்ல முடிவதில்லை. அதற்கு அவர்களின் தேகம் இடம் கொடுக்க வேண்டும். வலியை உணராமல் இருக்க அது ஒன்றும் இரும்பல்ல. இரும்பு கூட அடி அதிகமானால் நெளியத் தான் செய்யும்.

'பிச்சை எடுத்தானாம் பெருமாளு அதை புடுங்கி தின்றானாம் அனுமானு' என்ற மாரி ஆகிவிட்டது இன்றைய நிலை ஒருவன் உழைக்கும் அத்தனை உழைப்பையும் தின்கின்றன அத்தியாவசிய பொருட்கள். இதில் பிச்சை எடுப்பவனுக்கு மிஞ்ச போவது வயிற்றுப் பசி மட்டும் தான். 'விருந்தும் மருந்தும் மூன்று நாள்' என்று கூறுவது இன்றைய விலைவாசிக்கு நன்றாகவே பொருந்துகிறது. நாடு இருக்கும் நிலையில் மூன்று நாள் இல்லை விருந்தும் மருந்தும் வருடத்திற்கு மூன்று நாள் தான் என்ற மாதிரி ஆகிவிட்டது. அதுவும் சாத்தியமாகுமா என்பது சந்தேகம் தான்.

எகிறும் விலைவாசியால் தினக்கூலிக்குச் செல்பவன் மட்டும் தான் பாதிக்கப்படுகின்றன் என்று சொல்லவில்லை. ஆனால் மாதச் சம்பளகாரருடன் ஒப்பிடுகையில் அவனின் நிலை பரிதாபமானது. வேலை நிரந்தரம் என்பதற்கு எதுவித உத்தரவாதமும் இல்லை. மழை காலங்களில் வேலை சில சமயம் இருக்கவே இருக்காது. அவ்வாறான நிலையில் இவர்களின் வயிற்றுப்பாட்டை நினைக்க யார் உள்ளனர்?

கோதுமை மாவு, அரிசி, பருப்பு, சீனி, சீமெந்து என ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பொருளின் விலை எகிறிக்கொண்டே செல்கிறது. கோதுமை மாவையும் பருப்பையும் நம்பியே இன்னமும் எத்தனையோ குடும்பங்கள் வாழ்கின்றன. அதிலும் நெருப்பு போல விலையை வைத்தால் ஒரு நாளில் உழைக்கும் காசிற்கு ஒரு வேளை மட்டும் தான் உணவுண்ண முடியும். ஒவ்வொரு மனிதனும் உடலை வருத்தி அவ்வளவு தூரம் உழைக்க காரணம் என்ன? வயிற்றுப் பிழைப்புக்குத் தானே! ஆனால் அப்படி உழைத்தும் என்ன நிலைஇ அடிப்படை பொருளை கூட அவனால் வாங்க முடியாத நிலை இன்று. இந்நிலை நீடிக்குமாயின் பஞ்சத்திற்கும் வறுமைக்கும் உதாரணமான முதல் நாடாக இலங்கை இருக்க போவது திண்ணம்.

'ஐந்து பிள்ளை பெற்றால் அரசனும் ஆண்டியாவான்' என்பார்கள். ஐந்து பெண் பிள்ளைகளை பெற்ற அரசனுக்கு இந்த நிலை என்றால் நம் நாட்டில் ஐந்து பெண்பிள்ளைகளை கொண்ட குடும்பங்களின் நிலை? போகிற போக்கில் பெண் பிள்ளை என்ன பிள்ளையே வேண்டாம்இ முதலில் நாம் உயிர் வாழ வேண்டும் என்ற எண்ணம் தானாகவே வரும். அபிவிருத்தி என்ற பெயரில் தேவையற்ற பல விடயங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால் இங்கு வாழும் ஒவ்வொரு தனி மனிதனதும் அபிவிருத்தி என்பது கவனத்திற் கொள்ளப்படவேயில்லை.

விலையேற்றம் என்பது ஒவ்வொரு தனி மனிதனையும் எங்கே கொண்டு செல்லப் போகிறது என்று புரியவில்லை. தினக்கூலிக்கு செல்பவனுக்கு அடிப்படை பொருளை வாங்குவதற்கு முடியாத நிலை போலவேநகர்புறங்களில்வசிப்பவர்களிற்குஉணவை சமைப்பதற்கான எரிவாயுவின் விலையேற்றம் எவ்வளவு தூரம் பாதிப்பை ஏற்படுத்தும்? 'யானையை கட்டித் தீனி போட முடியாது' என்பதைப் போல தான் சிலிண்டரை வைத்து சமைக்க முடியாத நிலை. சாதாரண மனிதனால் இவ்வாறான சடுதியான விலையேற்றத்தை எளிதாக கையாளுவது என்பது முள்ளின் மேல் நடப்பதை போல தான் இருக்கும்.

ரூபாய் கணக்கில் எண்ணிக் கொடுத்த பொருட்களிற்கு இப்போது ஆயிரக் கணக்கில் கொடுக்க வேண்டியுள்ளது. கொரோனா பெருந்தொற்று காலத்தில் மக்களிற்கு எதுவித வருமானமும் இல்லை. அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கவில்லை. தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் அதிகரிக்கவில்லை. ஆனால் விலை மட்டும் தாராளமாக அதிகரிக்கிறது. அதனை வாங்கும் மக்களின் நலன் கண்டுகொள்ளப்படாத, கணக்கில் எடுக்கப்படாத ஒன்றாகத்தான் தெரிகிறது.

உணவுப் பொருட்கள் மட்டுமல்ல மருத்துவ பொருட்கள் பெண்களிற்கான அத்தியாவசிய தேவை பொருட்கள் (உதாரணமாக சுகாதார துவாய்) போன்ற அனைத்து வகையுமான பொருட்களின் விலையும் எகிறிக் கொண்டே தான் செல்கிறது. விலையேற்றம் தொடர்பில் மக்கள் அதிருப்தியை வெளிப்படுத்தலாம். பல அரசியல் சூத்திரதாரிகள் மக்களிற்கு ஆதரவாக பேசுவது போல இந்த சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்திக் கொள்ளலாம். விரல் விட்டு எண்ணக்கூடியவர்கள் மக்களிற்கான உண்மையான ஆதங்கத்தை வெளிப்ளடுத்தலாம். இருந்தும் என்ன பயன்? இவற்றையெல்லாம் பார்த்துவிட்டு சடுதியாக பொருட்களின் விலை குறைக்கப்படப் போகிறதா?

ஒரே சமயத்தில் ஒருவன் எத்தனை பிரச்சினைகளிற்கு முகம் கொடுக்க முடியும்? ஒரு புறம் கொரோணா அலையலையாக வருவதும் தொற்றின் என்ணிக்கை அதிகரிப்பதும் மறுபுறம் விலையேற்றம். இந்தியாவில் விவசாயத்திற்கு நீர் இல்லாமலும் விவசாயம் செய்ய முடியாமலும் தற்கொலை செய்து கொண்டது போல எம் நாட்டின் விலையேற்றமும் பொருட்களின் தட்டுப்பாட்டு தன்மையும் அந்நிலையினை இங்கு கொண்டு வந்துவிடுமோ? எனும் அச்சத்தை உண்டு




பண்ணுகிறது.

ஒரு சாதாரண மனிதனாக இருந்து உண்மையை சொன்னால், இந்த நாட்டில் பிறந்தத்திற்கு இன்னும் என்னென்ன அனுபவிக்க வேண்டுமோ? என்று சலிப்புத் தட்டிக் கொள்ளும் நிலைக்குச் சென்று விட்டோம் என்பது தான் நிதர்சனம். சலிப்புத்தன்மை காலப்போக்கில் வெறுப்பாக மாறும் என்பதில் ஐயமில்லை. ஆனால் நாட்டின் பிரஜைகளிற்கு வெறுப்பு மிகும் பட்சத்தில் அது நாட்டின் நலனில் எவ்வளவு பாரதூரமான விளைவை கொண்டுவரும் என்பது நினைத்துப் பார்க்க முடியாத விடயம்.

ஒரு புறம் நகரப்புறம் அபிவிருத்தி எனும் பெயரில் அழகாக்கப்பட்டுக்கொண்டிருக்கும் அதே வேளை இன்னொரு புறம் ஒரு நேர உணவில்லாமல் யாரோ ஒருவன் ஏதோ ஒரு மூலையில் தலையில் கை வைத்துக்கொண்டிருக்கிறான். இவை தான் ஆசியாவின் அதிசயம் கொண்டுள்ள பெருமை. நாட்டின் சாலைகளையும் கட்டடங்களையும் அழகாக்கும் நிதி பொருட்களின் விலையேற்றத்தால் தான் பெறப்படுகிறதா? என்பது ஒரு அடிப்படை மனிதனின் கேள்வி. தன் அறிவிற்கு எட்டியதை அவன் யோசிப்பதில் தவறில்லையே. எது எப்படியோ ஒரு பொருளின் விலையேற்றம் என்பது ஒரு சாதாரண மனிதனையும் கவனத்திற்கொண்டு மேற்கொள்ளப்பட வேண்டிய ஒன்று. அதன்படி தான் நம் நாடு போய்க்கொண்டு இருக்கிறதா என்றால் என்னை பொறுத்தவரை நிச்சயமாக இல்லை! இனிவரும் காலம் என்ன சொல்ல போகிறது என்ன மாதிரி ஒவ்வொரு மனிதனையும் சிந்திக்க வைக்க போகிறது என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.




காலைக்கதிர் Kalaikkathir



றுக்ஷி அருள்நேசன்

# மறக்கப்பட்டு வருகின்றதா விருந்தோம்பல்?





விருந்த என்றவுடன் எமக்கு ஞாபகம் வருவது அறுசுவை உணவுகள் நிறைந்த விழாக்காலங்கள் தான். உறவினரும் நண்பரும் அல்லாதவராய் புதியவராக எம்மிடம் வரும் மக்களை விருந்து என்று அழைத்தனர் நம் முன்னோர்கள். இவ்வாறாக நம்மிடம் வீட்டுக்கு வரும் ஒவ்வொரு உறவினர்களையும் மக்களையும் நண்பர்களையும் இன்முகத்துடன் வரவேற்று இருப்பதைக் கொண்டு அன்புடன் மனதார செய்யும் உபசரிப்புக்கு பெயர் தான் விருந்தோம்பல் ஆனால், இன்று விருந்து, விருந்தோம்பல் என்ற சொல்லுக்கு உண்மையான பொருள் மறைந்து போய் விட்டது. திருவள்ளுவர் இதற்கென விருந்தின் சிறப்பினை எடுத்துரைக்க தனி ஒரு அதிகாரத்தையே படைத்திருக்கிறார். முன்னைய காலங்களில் பண்டிகைகள் வந்தால் அந்த ஊரே கோலாகலமாக காட்சியளிக்கும். ஊர்களில் நடைபெறுகின்ற தேர்த்திருவிழா போன்றவற்றிற்கு உறவினர்கள் புடை சூழ வருகை தந்து விடுவார்கள். அன்றிலிருந்து பத்து நாட்கள் வரை விருந்து உண்டு இனிய நாள் ஞாபகங்களோடு இன்றும் பெரியவர்கள் இருப்பார்கள்.

நாம் காலத்தில் சற்று முன்னோக்கி சென்று திருமண நிகழ்வை ஞாபகப்படுத்திப் பார்த்தால் ஒரு காலத்தில் திருமணம் கூட பல நாள் திருவிழாவாகத் தான் கொண்டாடப்பட்டது. திருமணத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்னரே அனைவரும் கூடி ஒன்றாக விருந்துண்டு இன்புற்று செல்வார்கள் இதையே கவிஞர் வாலி மற்றும் நா.முத்துக்குமார் அழகாக - marriage என்றால் வெறும் பேச்சு அல்ல.......- எழுதிச் சென்றுள்ளார்கள். ஆரம்ப காலங்களில் விவசாயம் செய்வோர் இவ்விழாக்களுக்கு தாங்கள் மட்டும் செல்லாது கூடவே தங்களது கால்நடைகளையும் வளர்ப்பு மிருகங்களையும் விருந்தினராக அழைத்துச் சென்று உணவுகளை தாங்களே தங்களது வீட்டுப் பாத்திரங்களில் ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் சேர்ந்து பரிமாறி தாங்களும் மகிழ்ந்து உறவினர்களையும் விருந்தினர்களையும் மகிழ்வித்து இன்புற்றிருந்த காலம்தான் உண்மையிலேயே விருந்துக்காலம்.

விருந்தோம்பலின் முக்கியத்துவம் பற்றி கூறிய வள்ளுவர்,

'இருந்தோம்பிஇல்வாழ்வதெல்லாம்விருந்தொம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு'

இதன் பொருள் வீட்டிலிருந்து பொருட்களைக் காத்து இல் வாழ்க்கை நடத்துவதெல்லாம் விருந்தினரைப் போற்றி உதவி செய்யும் பொருட்டே ஆகும் என குறிப்பிடுகின்றார்.

வீட்டிற்கு வந்தவர்களிற்கு முதலில் ஒரு செம்பு தண்ணீர் கொடுப்பதை நாம் முன்னர் வழக்கமாகக் கொண்டிருந்தோம். இதற்குகக் காரணம் வந்திருப்பவர்கள் வெயிலில் சிரமமப்பட்டு வந்திருக்கக்கூடும் களைப்பாறுவதற்குதான். ஆனால் இன்று நாம் எத்தனை பேர் இதைச் செய்கின்றோம்? வெளியில் யார் அழைத்தாலும் வீட்டினுள் இருந்து கொண்டு யாருமில்லை எனப்பதில் கூறுகின்றோம். 'உண'ணீர் உண்ணீர் என்று ஊட்டாதார் தம்மனையில் உண்ணாமை கோடி பெறும் என்பார் ஔவைப்பிராட்டி.



நம் பழங்கால விருந்தோம்பல் வாழ்க்கையை பிரதிபலிப்பது சத்திரம் என்றும் காவடி என்றும் பல ஊர்களில் வழக்கில் இருந்து கொண்டு உள்ளன. ஆனால் இன்று இவற்றின் தன்மை அனைத்தும் மாறிப்போய் விட்டன. துல யாத்திரையும் தீர்த்த யாத்திரையும் மேற்கொண்ட பின்னர் அந்த கால மனிதர்களுக்கு சத்திரய்களும் சாவடிகளும் தான் விருந்து வழங்கும் இடமாக இருந்தன். இன்று சுற்றுலா என்ற பெயரில் இவை அனைத்தையும் பணம் கொடுத்து வாங்கும் நிலைக்கு வந்து விட்டோம். இன்று அவசரம் மிகு நிலையில் விருந்தினரை உதிர்பார்த்து காத்திருக்கும் நிலை மாறி விருந்தாளியாக வருபவர்கள் யார் வீட்டிற்கு போகின்றோமோ அவர்களிடம் முன்கூட்டியே அறிவிக்கும் நிலை வந்துவிட்டது. மேலும் இன்று எம் ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கும் ஒரு பயம் விருந்தாளியாக யாராவது வீட்டிற்கு வந்து விடுவார்களோ என்ற நிலை ஒன்று காணப்படுகின்றது. இதற்கு இன்றைய பொருளாதாரச் சூழல் முதன்மையானதாகக் காணப்பட்டாலும் கூட தமிழ்ப்பண்பாடு அருகிக் கொண்டுதான் செல்கின்றது.

மேலும் யாராவது வீட்டிற்கு வருகை தரும் போது சிலர் எதுவும் கொடுக்க தயக்கம்காட்டுவர். மேலும் சிலர் நாம் ஒரு வீட்டிற்கு சென்றால் நாம் சென்றதிலிருந்து பேசிக் கொண்டே இருப்பர். இதையும் மீறி நாம் போய் வருகிறோம் என்றால், போகின்றீர்களா இருந்து சாப்பிட்டு விட்டு செல்லுங்களேன் என்று நாசுக்காகக் கூறுவார்கள்.

இந் நூற்றாண்டில் விருந்தோம்பல் என்பது எம்மிடம் உள்ள செல்வச்செழிப்பைக் காட்டும் ஒரு கருவியாகும். இதனால் உண்மையிலேயே விருந்து படைக்க நினைக்கும் மக்கள் இதிலிருந்து சற்று பின்வாங்குகின்ற போக்கு காணப்படுகின்றது. இவ்வாறாக இல்லாமல் விருந்தோம்பல் என்ற சிறப்பான விடயத்தை உணர்ந்து அதை எம் வாழ்நாள் பழக்கமாக்கிக் கொண்டு எமக்கும் எம் அடுத்த தலைமுறைக்கும் கடத்திச் செல்ல வேண்டும். மேலும் நகர்ந்து அசல்கின்ற வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்புவதைப்போல அலைந்துதிரிகின்ற தங்களின வயிற்றுக்கு சொரிபொருளாக உணவை அள்ளி எறிந்து விட்டு அடுத்த வேலையை அறக்கப்பறக்க செய்யும் மனிதர்களாக இராது பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் நல்லறமாக விருந்தோம்பல் என்ற மனிதப்பண்பை எமது வாழ்வில் ஓர் அங்கமாக்குவோம்.

# சிங்களவருக்கு ஒரு சட்டம் தமிழர்களுக்கு ஒரு சட்டமா?

## காணாமலாக்கப்பட்டோர் சங்க செயலர் ராஜ்குமார் கேள்வி



தமது போராட்டத்தை மழுங்கடிக்க அடுத்த முயற்சி தான் இந்த மின்சார துண்டிப்பு என தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கத்தின் செயலாளர் கோ.ராஜ்குமார் தெரிவித்துள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டம் மேற்கொண்டு வரும் கொட்டகைக்கு சட்டவிரோதமான முறையில் மின்சாரத்தைப் பெற்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் கடந்த வியாழக் கிழமை வவுனியா மாவட்ட தமிழர் தாயக சங்கத்தின் தலைவி காசிப்பிள்ளை ஜெயவனிதா கைதுசெய்யப்பட்டார்.

இது தொடர்பில் வினவியபோதே அவர் இந்த விடயத்தைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கு நீதிகோரி தாய்மாரால் சுழற்சி முறையில் வவுனியா - ஏ9 வீதியில் உள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு முன்பாக போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

குறித்த கொட்டகை அமைந்துள்ள வீதி, மின் கம்பத்தில் பொருந்தப்பட்டிருந்த மின் விளக்கு இணைப்பு மூலம் மின்சாரம் பெறப்பட்டு போராட்ட கொட்டகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் கொழும்பில் இருந்து வந்த மின்சார சபையினர், சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றதாக தெரிவித்து போராட்ட கொட்டகையில் இருந்த தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத் தலைவி காசிப்பிள்ளை ஜெயவனிதாக்கு எதிராக பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து, அவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

2210 ஆவது நாளாக வவுனியாவில் இரவு பகலாக போராட்ட பந்தலில் சுழற்சி முறையில் போராட்டம் மேற்கொண்டு வருகின்றோம்.

வயது முதிர்ந்த தாய்மார் இங்கு போராட்டத்தை மேற்கொண்டு வந்தனர். எனவே அப்போதைய வட மாகாண சபை முதலமைச்சராக இருந்த விக்னேஸ்வரன், வவுனியா நகரசபை தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் கட்டுப்பாட்டுக்குள் இருந்ததால் வவுனியா நகரசபைக்கு அறிவித்து மின்சார சபைக்கு தகவல் வழங்கியே மின்னிணைப்பை ஏற்படுத்தித் தந்தார்கள்.

அதன் பின்னர் இரண்டு முறை மின்பழுது ஏற்பட்ட போது கொழும்பிலிருந்து நேரடியாக மின்சாரசபைக்கும் அறிவித்து உடனடியாக செய்து கொடுக்குமாறு தெரிவிக்கப்பட்டு மின்குமிழ்களையும் வழங்கி மின்னிணைப்பை மீள சரிசெய்து தந்தார்கள்.

சட்டவிரோதமாக மின்னிணைப்பை பெற நாங்கள் முயற்சி செய்யவில்லை.

அவர்களே மின்சாரத்தை தந்துவிட்டு சட்டவிரோதம் என கூறி வவுனியா மாவட்ட தமிழர் தாயக சங்கத்தின் தலைவி காசிப்பிள்ளை ஜெயவனிதாவை கடந்த வியாழக்கிழமை கைது செய்த நிலையில் வெள்ளிக்கிழமை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியபோது சரீர பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில் குறித்த வழக்கு திகதியை மே மாதத்துக்கு ஒத்திவைத்துள்ளனர்.

இலங்கை அரசாங்கத்தோடு சேர்ந்து இயங்குகின்ற பெருந்தொகையான அமைச்சர்களுடைய கோடிக்கணக்கான மின்சார நிலுவைகள் உள்ளன. அவர்களுக்கு மின்துண்டிப்பு ஏற்படுத்தவில்லை.

இங்கே குறைந்தளவிலான மின்குமிழ்களை பாவித்திருந்தோம். அரசாங்கமே மின்சாரத்தைத் தந்துவிட்டு ஏன் நிறுத்தி வைத்திருக்கிறது.

காலிமுகத்திடலில் அதிகமானோர் மின்சாரம் பாவிக்கும் போது அரசாங்கம் எங்கு இருந்தது.

சிங்களவருக்கு ஒரு சட்டம் தமிழருக்கு ஒரு சட்டமா? அதனால்தான் நாங்கள் வெளிநாடுகளை கூப்பிடுகின்றோம்.

அவர்கள் வந்தால் காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகளை கண்டுபிடிக்கலாம், தமிழ் இறையாண்மை ஒன்று இருந்தால் பிள்ளைகளை கண்டுபிடிக்கலாம்.

இங்கே இருக்கின்ற அனைத்து கட்டமைப்புகளும் எந்த நீதியுமே தமிழர்களுக்கு கிடைப்பதில்லை. எல்லாமே அநீதியே கிடைக்கின்றது. மின்சாரம் துண்டிக்கப்பட்டு இருட்டிலே தாய்மார்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

தினமும் இரவுகளில் பல்வேறு இடையூறுகள் ஏற்படுத்தப்படுகின்றன. அவ்வாறான இன்னல்களுக்கு மத்தியிலே போராடி வருகின்றோம்.

ஒவ்வொரு விடயமும் இலங்கை அரசாங்கத்துக்கு தெரியாமல் இல்லை. ஒவ்வொரு விடயமும் தெரியும். எவ்வளவு நெருக்கடிகளைத் தந்துவிட்டார்கள். அப்படி இருந்தும் எமது போராட்டத்தை நாங்கள் கைவிடுவதாக இல்லை. அதை நிறுத்த இவர்களின் அடுத்த முயற்சிதான் இந்த மின்சார துண்டிப்பு.

இலங்கை அரசாங்கம் எந்தவொரு ரீதியிலும் எங்களுக்கான தீர்வைத் தராது என்பதற்கு இது ஒரு நல்ல எடுத்துக்காட்டு.

நீதிக்காகப் போராடுகின்ற ஒரு தாய், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக இருந்த காலத்தில், பிள்ளையின் ஆதாரத்தை காட்டியும் அவருக்கு இதுவரை நீதி கிடைக்கவில்லை.

குற்றவாளிகள் எல்லோரும் சுதந்திரமாக வெளியே இருக்கும் போது மின்சாரத்தை சட்டவிரோதம் எனக் கூறி பிள்ளையைத் தேடிக்கொண்டிருக்கின்ற தாயைக் கொண்டு போய் அடைப்பதிலே உங்களுடைய நீதித்துறை இருக்கிறது.

குற்றம் செய்தவர்களிடம் நீதியை எதிர்பார்க்க முடியாது. மூன்று வருடத்துக்கு முதல் டக்ளஸ் தேவானந்தாவிற்கு எதிராகப் போராட்டம் மேற்கொண்டிருந்தோம்.

அவருடைய ஆதரவாளர்கள் தற்போது நாடாளுமன்ற உறுப்பினராக உள்ளார். அவர்களால் எனக்கு எதிராக கொலைவெறி தாக்குதல் மேற்கொண்டிருந்தார்கள்.

முழு ஆதாரங்களுடன் பொலிஸிடம் ஒப்படைத்திருந்தோம்.

அவ்வாறு இருக்க, கைது செய்ய வேண்டியவர்களை கைது செய்யாமல் வெளியே விடுவித்துவிட்டு பாதிக்கப்பட்டு நீதி கேட்கின்றவர்களை தண்டிக்கிறார்கள்.

மின்சாரத்தை தந்தவர்கள் மின்சார சபையே. அவர்கள் குற்றவாளியாக இருந்து கொண்டு எங்களை கொண்டு சென்று அடைக்கின்றார்கள் என்றால் என்ன நியாயம்.

சமூகத்தின், இனத்தின் ஆதரவோடு இருக்கும் போராட்டங்களுக்கு மின்சாரத்தை நிறுத்துவது சட்டவிரோதமானது. நீங்கள் செய்வதே அநீதியானது.

கடந்த 2017ஆம் ஆண்டு முதல் குறித்த போராட்டம் கொட்டகை அமைத்து இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது எனத் தெரிவித்துள்ளார்.

---

## வியாபார நிலையங்களின் பாதுகாப்பு சம்பந்தமாக விசேட கலந்துரையாடல்

### கல்முனை பொலிஸாரின் ஏற்பாட்டில்



வியாபார நிலையங்களின் பாதுகாப்பு சம்பந்தமாக விசேட கலந்துரையாடல் கல்முனை தலைமையக பொலிஸாரின் ஏற்பாட்டில் இடம்பெற்றுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் நேற்று (சனிக்கிழமை) இருதயநாதர் வரவேற்பு மண்டபத்தில் இடம்பெற்றுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீர் தலைமையில் நடைபெற்றுள்ளது.

இதன்போது அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெயந்த ரட்நாயக்க பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு கல்முனை மாநகர வர்த்தகர்கள் தற்போது முகம் கொடுத்துள்ள பிரச்சினைகள் தொடர்பில் விழிப்பூட்டல் கலந்துரையாடலை மேற்கொண்டார்.

மேலும் இந்தக் கலந்துரையாடலில் எதிர்காலத்தில் வர்த்தக நிலையங்களில் எடுக்கப்பட வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கை தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

அத்துடன் பொதுச்சந்தை வர்த்தகர்கள், நகை கடை உரிமையாளர்கள், கைத்தொலைபேசி கடை உரிமையாளர்கள், பல்பொருள் கடை அங்காடி வியாபாரிகள் உள்ளிட்ட ஏனைய வர்த்தகர்களும் கலந்து கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் வர்த்தகர்கள் பங்கு பற்றி தத்தமது கருத்துக்களை பகிர்ந்து கொண்டதுடன் தமது நலனில் அக்கறை எடுத்து செயற்படவுள்ள கல்முனை தலைமையக பொலிஸாருக்கு நன்றிகளையும் தெரிவித்து கொண்டனர்.

மேலும் வர்த்தகர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளை உடனடியாக தீர்ப்பதற்கு 0718591161 அல்லது 0672229226 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அறியத்தருமாறு பொலிஸார் கேட்டுக்கொண்டனர்.

மேற்படி கலந்துரையாடலில் கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ.எச்.டி. எம்.எல்.புத்திக கல்முனை குற்றப்புலனாய்வு பிரிவு பொறுப்பதிகாரியும் பிரதம பொலிஸ் பரிசோதகருமான அலியார் றபீக் கல்முனை பொலிஸ் நிலையத்தின் பிரதம பொலிஸ் பரிசோதகரும் சமூக பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரியுமான ஏ.எல்.ஏ.வாஹிட் கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஏ.டி.சி.எஸ்.ரத்னாயக்க கல்முனை இராணுவ முகாம் பொறுப்பதிகாரி என பலரும் கலந்து கொண்டனர்.

---

## மாற்றங்கள் இல்லையெனில் இலங்கையின் பொருளாதாரத்தில் முன்னேற்றம் ஏற்படாது!

### சிரேஷ் பொருளாதார நிபுணர் ஸ்டீவ் ஹான்கே கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 12

தேவையான மாற்றங்கள் நிகழாத வரை இலங்கையின் பொருளாதாரத்தில் முன்னேற்றம் ஏற்படாது என சிரேஷ்ட பொருளாதார நிபுணர் ஸ்டீவ் ஹான்கே தெரிவித்துள்ளார்.

ஆகவே இலங்கையில் நிறுவன ரீதியிலான சீர்திருத்தங்கள் அவசியம் என ஜோன் ஹொப்கின்ஸ் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஸ்டீவ் ஹான்கே வலியுறுத்தியுள்ளார்.

இல்லையெனில் கிடைக்கவுள்ள சர்வதேச நாணய நிதியத்தின் உதவி இலங்கையின் பொருளாதாரத்துக்கு உதவுவது சந்தேகமே என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆகவே, நீண்ட கால கடன் நிலைத்தன்மையை அடைவதற்கு நாட்டில் நிறுவன ரீதியிலான சீர்திருத்தங்கள் தேவை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

---

## தடைகளைதாண்டி மீண்டும் பத்மநாபாவுக்குச் சிலை!

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தடையையும் மீறி வவுனியா மணிக்கூண்டு கோபுர சந்திக்கு அருகில் பத்மநாபாக்கு சிலை அமைக்கும் செயற்பாடுகள் நேற்று (சனிக்கிழமை) துரித கதியில் முன்னெடுக்கப்பட்டுள்ளன.



வவுனியா மணிக்கூண்டு கோபுர சந்திக்கு அருகில் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான இடத்தில் தந்தை செல்வாவின் சிலைக்கு அருகில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் பத்மநாபாவுக்கு சிலை அமைக்கும் செயற்பாடு நகர சபையின் அனுமதியுடன் முன்னெடுக்கப்பட்டது.

இந்நிலையில் தமது திணைக்களத்துக்கு சொந்தமான இடத்தில் உரிய அனுமதியைப் பெற்றுக்கொள்ளாமல் சிலை அமைப்பதற்கான நிர்மாணப்பணிகள் இடம்பெற்று வருகின்றமையால் அந்தப் பணிகளை உடனடியாக இடைநிறுத்தி உரிய நடைமுறைகளை பின்பற்றுமாறு வவுனியா மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிறைவேற்று பொறியியலாளரால் வவுனியா நகர சபைக்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து அந்தக் கடிதத்தின் பிரதிகள் வவுனியா பிரதி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மற்றும் வவுனியா பொலிஸ் நிலையம் உட்பட சில திணைக்களங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக சில நாய்களாக சிலை அமைக்கும் பணிகள் இடைநிறுத்தப்பட்டு, நேற்று குறித்த கட்டுமானப் பணிகள் மீண்டும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தக்கட்டுமான பணிகளை நிறுத்துமாறு பல்வேறு தரப்பினரும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

இதேவேளை நாட்டின் அனைத்து உள்ளூராட்சி சபைகளினதும் ஆயுட்காலம் எதிர்வரும் 19 ஆம் திகதியுடன் முடிவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

---

## இராணுவ அதிகாரிகள்மீதான ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை நிராகரித்தது அரசு!




இலங்கை இராணுவ அதிகாரிகள் மீதான ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை அரசாங்கம் நிராகரித்துள்ளது என ஜெனீவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி ஹிமாலி அருணதிலக தெரிவித்துள்ளார்.

மனித உரிமைகளை மீறியதாகக் குற்றம்சாட்டப்பட்ட சில இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக மனித உரிமை மீறல்கள் தொடர்பான உண்மை அல்லது நிரூபிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் எவையும் இல்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையின் ஏற்பாடுகளை எவ்வாறு நடைமுறைப்படுத்துகிறது என்பது தொடர்பாக மீளாய்வுக் கூட்டத்தில் மேற்படி குழு முன்வைத்த குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அத்தோடு அரச அலுவலகத்துக்கு நியமிக்கப்பட்ட இராணுவ அதிகாரிகள் அனுபவம் வாய்ந்தவர்கள் என்றும் அவர்கள் கொண்டிருந்த நிபுணத்துவத்தின் அடிப்படையில் அதற்கு தகுதி பெற்றிருந்தார்கள் என்றும் ஹிமாலி அருணதிலக தெரிவித்துள்ளார்.

மேலும் பாலின சமத்துவம், நல்லிணக்கம் மற்றும் அரசமைப்பின் 21 ஆவது திருத்தம் உள்ளிட்ட பல அபிவிருத்திகள் இலங்கைக்குள் இடம்பெற்றுள்ளன எனவும் அனைத்து மக்களுக்குமான மனித உரிமைகளைப் பாதுகாக்க அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

21ஆவது திருத்தும் அமுல்படுத்தப்பட்டதன் பின்னர் ஜனநாயக ஆட்சி, முக்கிய நிறுவனங்களின் சுயாதீன மேற்பார்வை, அரசமைப்பு பேரவை மற்றும் சுயாதீன ஆணைக்குழுக்களின் அமைப்பு ஆகியவற்றை மேலும் வலுப்படுத்தியது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.03.2023இல் வெளியிடப்பெற்றது.

**நேற்றைய மாலைப்பதிப்பு பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.**

பக்கங்கள்: 06

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 27 சனிக்கிழமை 11.03.2023 கதிர் 374

## கீரிமலையில்

# அழிக்கப்பட்ட ஆலயங்களை மீளக்கட்ட அனுமதிவேண்டும்

### ஆறு திருமுருகன் கோரிக்கை

கீரிமலையில் படையினரால் அழிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் ஆதிசிவன் கோயில் உள்ளிட்ட பழம்பெரும் ஆலயங்களையும் சைவப் புனித இடங்களையும் மீளக்கட்டுவதற்கு இலங்கைய ஆட்சியாளர்கள் அனுமதி வழங்கவேண்டும் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உபதலைவர் அறு. திருமுருகன் வலியுறுத்தியுள்ளார். 2

## தேர்தலை ஒத்திவைத்து

# ஜனநாயகத்தை சீர்குலைக்காதீர்

### அரசிடம் சஜித் வேண்டுகோள்



'தேர்தலை ஒத்திவைத்து ஜனநாயகம் சீர்குலையும் அளவுக்குச் செயற்பட வேண்டாம் என்று அரசிடம் கேட்டுகொள்கின்றோம்.' - இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

எதிர்கட்சித் தலைவர் இன்று காலை வரலாற்றுச் சிறப்புமிக்க கண்டி ஸ்ரீ தலதா மாளிகைக்கு விஜயம் செய்து ஆசிபெற்றுக்கொண்டார். அதன்பின்னர் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித் ததாவது:-

இதற்குமுன்னர்தேர்தலைஒத்திவைக்க அரசு 22 தடவைகளுக்கு மேல் முயற்சித்துள்ளது.ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க தலைமையிலான அரசின் ஒரே நோக்கம் தேர்தலை நடத்தாதிருப்பதே. மக்களுக்குத்தங்களின்ஜனநாயக 2

## போராட்டக்காரர்களை கட்டுப்படுத்த

# காலாவதியான குண்டுகளை பயன்படுத்தியதே இல்லை

### குற்றச்சாட்டுக்குப் பொலிஸ் விளக்கம்





போராட்டக்காரர்களைக் கலைக்கும்போது, தாம் காலாவதியான கண்ணீர்ப்புகைக் குண்டுகளை ஒருபோதும் பயன்படுததியதில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காலாவதியான கண்ணீர்ப்புகைக் குண்டுகளால் உரியபயன்கிடைக்காதுஎன்பதால் அவற்றைப் பயன்படுத்துவதில்லை என்று பொலிஸார் விளக்கமளித்துள்ளனர்.

பொதுவாக, திறந்த கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டு, நிர்ணயிக்கப்பட்ட முறைப்படி கண்ணீர்ப்புகைக்குண்டுகள் பெறப்படுகின்றன என்று பொலிஸ் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

எதிர்ப்பாளர்களைக் கலைக்கப் பொலிஸார் காலாவதியான கண்ணீர்ப் புகைக் குண்டுகளைப் பயன்படுத்துகின்றனர் என்று சிலகுற்றச்சாட்டுகள்எழுந்தன.

"எந்தவொரு கண்ணீர்ப் புகைக் குண்டு காலாவதியானாலும், அது சிறந்த முடிவுகளைத் தராது. காலாவதித் திகதிக்குப் பின்னர் எரிவாயு உரிய வகையில் இயங்காது. எனவே,அதனைப்பயன்படுத்துவதால் பயன் இல்லை" என்று பொலிஸ் 2

## ஹெரோயினுடன் சிக்கிய மூதாட்டி!

பதுளையில் ஹெரோயின் போதைப்பொருளுடன் வயோதிபப் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பதுளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பஹலகம பகுதியில் வீடொன்றில் பெண் ஒருவர் ஹெரோயின் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபடுகின்றார் என்று பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது. இதையடுத்து உடன் சம்பவ இடத்துக்கு விரைந்த பதுளை பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினர், குறித்த வீட்டை சுற்றிவளைத்துச் சோதனைக்கு உட்படுத்திய போது வீட்டில் இருந்து 6 ஆயிரத்து 300 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது.

அத்துடன்வீட்டில் இருந்த அதே பகுதியை சேர்ந்த 60 வயதுடைய பெண் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.



# 16 கோடி ரூபாய் தங்கம் கடத்தும்போது சிக்கியது

### கட்டுநாயக்கா சுங்க அதிகாரிகள் அதிரடி

16 கோடி ரூபா பெறுமதியான கடத்தல் தங்கம் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் பிடிபட்டுள்ளது. இவற்றை இந்தியாவிற்குக் கடத்திச் செல்ல முற்பட்ட நபர்களையும் தாம் கைது செய்திருப்பதாக சுங்கத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானத்தில்வெள்ளிக்கிழமை இந்தியாவின் மும்பைக்கு நகருக்குச்செல்லவிருந்த இந்தியர் உள்ளிட்ட சந்தேகநபர்களிடம்நடத்தப்பட்ட சோதனையில், அவர்களின் பயணப் பொதிகளில் சூட்சுமமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த தங்கம் கைப்பற்றப்பட்டது.

தங்கத் தகடுகள், ஜெல் வடிவில் உள்ள தங்கம் மற்றும் தங்க ஆபரணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் இவற்றின் நிறை 10.5 கிலோ கிராம் என்றும் அதிகாரிகள் கூறினர்.

கைப்பற்றப்பட்ட தங்கத்தின் பெறுமதி 16 கோடி ரூபாய் ன்று மதிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை சுங்கத்தின் போதைப்பொருள் கட்டுப்பாட்டு பிரிவின் அதிகாரிகள் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் இலங்கை சுங்க பிரிவு அறிவித்துள்ளது.

## கோர விபத்தில் 3 பிள்ளைகளின் தந்தை இறப்பு



வாகான விபத்தில் மூன்று பிள்ளைகளின் தந்தை சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளார்.

இந்தச் சம்பவம் புத்தள, பெல்வத்தை சீனி தொழிற்சாலைக்கு செல்லும் வழியில் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சீனிதொழிற்சாலையில் இருந்து தொழிலாளர்களை ஏற்றி வந்த லொறி, முன்னால்சென்றுகொண்டிருந்த மோட்டார் சைக்கிள் மீது மோதி சுமார் 50 மீற்றர் தூரம் வரை லொறியால் மோட்டார்சைக்கிள் இழுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த 40 வயதுடைய3பிள்ளைகளின் தந்தை பலத்த காயங்களுக்குள்ளான நிலையில் புத்தளவைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டபோது அவர் ஏற்கனவே உயிரிழந்துள்ளார்என்றுபுத்தளவைத்தியசாலையின் வைத்தியரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

42 வயதுடைய லொறியின் சாரதி சம்பவ இடத்திலிருந்து தப்பிச் சென்று பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.இருப்பினும் அப்பிரதேசத்தில் உள்ள மக்களினால் குறித்த லொறி தாக்கப்பட்டு சேதமாக்கப்பட்டுள்ளது என்று புத்தள பொலிஸார்தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் புத்தள பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தொடருந்து கழிப்பறையில் பச்சிளங் குழந்தை மீட்பு

### இளைஞனும் பெண்ணும் கைது



கூடையொன்றுக்குள்பச்சிளங் குழந்தையொன்று யாரும் உரிமை கோராத நிலையில் இருந்தமை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

வெள்ளிக்கிழமை மாலை 7 மணியளவில் கொழும்பிலிருந்து மட்டக்களப்பு நோக்கி புறப்படவிருந்த தொடருந்தில் இருந்து அந்தக் குழந்தையை பொலிஸார் மீட்டனர். கொழும்பு சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையில் குழந்தை சேர்ப்பிக்கப்பட்டது. சிசுவை பரிசோதனைக்கு உட்படுத்தி வைத்தியர்கள் சிசு ஆரோக்கியத்துடன்இருக்கின்றது என்று தெரிவித்தனர். பிறந்து ஒரு வாரமாக இருக்கலாம் என்றும் தெரிவித்திருந்தனர்.

தொடருந்து நிலை 2

தமது குழந்தையை தொடருந்தின் கழிவறையில் கைவிட்டுச் சென்றார்கள் என்கிற குற்றச்சாட்டில் இளைஞனும் யுவதியும் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

கொழும்பு கோட்டை புகையிரதநிலையத்தில்நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தொடருந்தின்கழிப்பறையில்பிளாஸ்டிக்

# வளி மாசு அதிகரிப்பு

வளி மாசு அதிகரித்துள்ளதால் மக்கள் முகக் கவசங்களை அணியுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

கொழும்பு, மன்னார், பதுளை, காலி, புத்தளம், பொலன்னறுவை ஆகிய நகரங்களில் காற்று மாசு அதிகரித்திருக்கின்றது என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் காற்று தரக்குறியீடு 712 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இளம்ஊதாநிறத்தில் 2

# படைச் சீருடையில் வருவோர் அவன்கார்ட் இயக்கும் குழுவா?

### ஜேவிபி தலைவர் கேள்வி

ஆர்ப்பாட்டங்களின் போது, கொட்டன் தடிகளுடன் படையினரைப் போன்று சீருடையில் வருபவர்கள் அவன்கார்ட்டால்இயக்கப்படும் குழுவா?

இவ்வாறு சந்தேகம் கிளப்பினார் ஜே.வி.பி. தலைவர் அநுரகுமார திஸநாயக்க. நாடாளுமன்றத்தில்வெள்ளிக் கிழமை நடைபெற்ற அனைவருக்கும் வாக்குரிமை தொடர்பான இரண்டாம் நாள் சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தலை மக்கள் கேட்கவில்லை என்று அரச தரப்பினர் கூறுகின்றனர். மக்கள்அதனைக்கேட்கவேண்டியதுமில்லை. அரசமைப்புக்குக் கட்டுப்பட்டுநடத்தப்பட வேண்டியது தேர்தல். மக்கள் தேர்தலை கேட்கவில்லை என்றுகூறுபவர்கள்தேர்தலை நடத்தபணம்இல்லைஎன்றும் கூறுகின்றனர். இந்தநேரத்தில் இப்படி பணமில்லை என்று கூறுபவர்கள் ஜனாதிபதித் தேர்தலுக்கும் இப்படி கூறிக்கொண்டு திறைசேரியை சீர்குலைத்து தொடர்ந்தும் பதவியில் இருக்கலாம். இவர்கள்பணம்இல்லாதபிரச்சினையால்தேர்தலைநடத்தமுடியாது என்று கூறவில்லை. தேர்தல் முடிவுகளை எதிர்கொள்ள அச்சப்பட்டே அவ்வாறு கூறுகின்றனர். உள்ளூராட்சி சபைகளுக்கு 8 ஆயிரம் உறுப்பினர்கள்அதிகமென்றும், அதனை குறைக்க வேண்டும் என்றும் கூறிக்கொண்டு தேர்தலை ஒத்திவைக்கவும் முயற்சிக்கின்றனர். 8 ஆயிரம் பேருக்கான செலவு அதிகம் என்றால்அவர்களின்கொண்டுப்பனவை அரைவாசியாகக் குறைக்கலாம். அதை விடுத்து தேர்தலை நிறுத்தவேண்டிய அவசியம் இல்லை.

இந்த ஆட்சி சரியான மக்கள்ஆணையுடன்இல்லை. கடந்த பொதுத் தேர்தலில்

நாடாளுமன்றத்துக்குத் தெரிவானவர்கள் ஒவ்வொருபக்கத்தில் 2

# வவுனியா குடும்பத்தின் இறப்பு தொடர்பில் விசாரணை தேவை

### சபையில் செல்வம் எம்.பி. வலியுறுத்து


வவுனியாவில் இருபிள்ளைகளைக் கொண்ட குடும்பமொன்று மர்மமாக மரணித்துள்ளமை தொடர்பில் விசாரணைகள்முன்னெடுக்கப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக்கூட்டமைப்புசபையில் வலியுறுத்தியுள்ளது.

நாடாளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற சர்வஜன வாக்குரிமை தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் இவ்வாறு வலியுறுத்தினார்..

7அவர் தனது உரையில், வவுனியாவில் தந்தை, தாய் உட்பட இரு பிள்ளைகள் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார்கள். இவர்களின் மரணம்தொடர்பில்மாறுப்பட்ட பலகருத்துக்கள் வருகின்றன. ஆகவே இந்த இறப்புகள் தொடர்பில் முறையானவிசாரணைகளை முன்னெடுத்து உண்மையைபகிரங்கப்படுத்துமாறு பொலிஸ்மா அதிபரிடம் கேட்டுக் கொள்கிறோம் – என்றார்.

# நீதிமன்ற உத்தரவைப் புறக்கணிக்கும் அரச அதிகாரிகள் சிறைசெல்லநேரும்!

### எஸ்.எம்.மரிக்கார் எச்சரிக்கை



முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நிலையைக்கருத்திற்கொண்டு அரச அதிகாரிகள் உயர்நீதிமன்றத்தின் கட்டளைக்கு அமையசெயற்படவேண்டும்.

நீதிமன்ற உத்தரவைப் புறக்கணித்து ஜனாதிபதியின் கட்டளைக்கு அமைய செயற்படும்அரச அதிகாரிகள் எதிர் காலத்தில் சிறைசெல்ல நேரிடும் என ஐக்கிய மக்கள் சக்தியின்நாடாளுமன்றஉறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார்தெரிவித்தார். நாடாளுமன்றத்தில்நேற்று (வியாழக்கிழமை) இடம்பெற்ற சர்வஜன வாக்குரிமை தொடர்

## அழிக்கப்பட்ட.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது,

இலங்கை சைவமக்களின் மிகத் தொன்மை வாய்ந்த வரலாற்றிடம் கிரி மலை. இப்பகுதியில் கடல் மட்டத்திலிருந்து மிகவும் உயரமான மலை போன்ற ஒரு பாறைப் பகுதியில் ஆதி சிவன் கோயில் அமைந்திருந்தது. அச்சிவன் கோயில் தற்போது இல்லை என்று அங்கு போய் வந்த அன்பர்கள் பத்திரிகைக்குத் தெரிவித்திருந்தார்கள்.

பெருமைமிக்க பெண் சித்தரான சடையம்மாவின் சமாதி கோயில் மடம், அதற்கருகிலிருந்த சங்கர சுப்பையர் சுவாமிகளின் சமாதி, கதிரைவேலன் கோயில் ஆகியவற்றையும் காணவில்லை என்ற செய்தி சைவ மக்களுக்கு பெரும் அதிர்ச்சியைத் தந்துள்ளது.

33 ஆண்டுகளுக்குப் பின்பு இந்த ஆலயங்களைத் தரிசிக்கலாம் என்று சென்ற மக்களுக்கு பேரதிர்ச்சி ஏற்பட்டுள்ளது. இவ்விடயம் தொடர்பாக ஜனாதிபதி மற்றும் அமைச்சரவை வரை பதிலளிக்கவேண்டும்.

தமிழ்ப் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இவ்வாலயங்கள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். அழிக்கப்பட்ட கோயில்கள் இருந்த இடத்தை சைவ மக்களிடம் உடனடியாக ஒப்படைக்க வேண்டும்.

மீண்டும் அந்த இடங்களில் சைவமக்கள் கோயில்களைக் கட்டுவதற்கான அனுமதியை உடன் வழங்கவேண்டும். தமிழ்ப் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இவ்விடயம் தொடர்பாக உடன் குரல் கொடுக்கவேண்டும்.

வடக்கு மாகாண ஆளுநர் பொதுமக்கள் தங்கள் நிலங்களை பார்வையிடுவதற்கும் அங்கு எஞ்சியுள்ள கோவில்களைத் தரிசிப்பதற்கும் ஒழுங்கு செய்யவேண்டும் – என்றுள்ளது.

## கலாவதியான.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பேச்சாளர் குறிப்பிட்டார். பொலிஸ் கலகத் தடுப்புக் குழு அதிகாரிகளின் கூற்றுப்படி, சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களால் உற்பத்தி செய்யப் படும் கண்ணீர்ப்புகைக் குண்டுகளே போராட்டக்காரர்களைக் கலைக்கப் பயன்படுத்தப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வாரத்தில் கண்ணீர்ப்புகைக் குண்டு தாக்குதல் காரணமாகவே எதிர்ப்பாளர்கள் மூன்று பேர் இறந்தனர் என்று தேசிய மக்கள் சக்தியின் சட்டத்தரணிகள் குற்றம் சுமத்தியிருந்தனர்.

இதற்குப் பதிலளித்த பொலிஸ் பேச்சாளர், அந்த இறப்புக்கள் குறித்த உடற் கூறாய்வு அறிக்கைகள் இன்னும் வரவில்லை என்பதால், இது குறித்து கருத்துத் தெரிவிக்க முடியாது என்று குறிப்பிட்டார்.

## ஜனநாயகத்தை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உரிமையான வாக்களிக்கும் உரிமையைப் பயன்படுத்தச் சந்தர்ப்பம் கிடைக்காவிடின் ஜனநாயகம் சீர்குலைந்து போகும். ஜனநாயகத்தைச் சீர்குலைக் கவா அரசு முயற்சிக்கின்றது?' – என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

போராட்டங்களை அடக்கு வதற்கு அரசு கண்ணீர்ப்புகைக் குண்டுளைப் பிரயோகிப்பது தொடர்பில் கருத்து வெளியிட்ட எதிர்க்கட்சித் தலைவர், 'நச்சுத் தன்மை வாய்ந்ததாக இருந் தாலும், நச்சுத்தன்மையற்றதாக இருந்தாலும் மக்கள் போராட்டத்தின் மீது கண் ணீர்ப்புகைக் குண்டுகளை வீசுவதற்கு அரசுக்கு எத்தகைய உரிமையும் இல்லை' – என்றார்.

## தொடருந்து .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யத்தில் சிசுவைக் கைவிட்டுச் சென்றவர்கள் தொடர்பில் விசாரணை நடத்திய பொலிஸார் இன்று 26 வயது இளைஞர் ஒருவரையும் 25 வயது பெண் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

இவர்களுக்குள் திருமணத்திற்கு முன்பிருந்த உறவு காரணமாகக் கருவுற்ற பெண், அதனை மறைத்து கொழும்பில் வந்திருந்து குழந்தையைப் பெற்ற பின்னர் அதனைத் தொடருந்து நிலையத்தில் கைவிட்டுச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். இளைஞர் பண்டாரவளையையும் பெண் கொஸ்லந்த என்ற இடத்தையும் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

## வளி மாசு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அடையாளப்படுத்தப்படும் இக்குறியீட்டு எண் கடும் சுகாதாரமற்ற நிலையைக் காண்பிக்கின்றது.

மன்னார் மாவட்டத்தில் காற்றின் தரக் குறியீடுகள் 103 ஆகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது சிவப்பு நிறத்தில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. மாசின் தீவிரத் தைக் காண்பிக்கிறது..

பதுளை, காலி , புத்தளம் மற்றும் பொலன்னறுவை ஆகிய நகரங்களிலும் இவ்வாறு வளி மாசடைவு ஏனைய நாட்களுடன் ஒப்பிடும் போது சற்று அதிகமாகக் காணப்படுவதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதையடுத்து வெளியிடங்களுக்குச் செல்பவர்களை முகக் கவசம் அணிந்து செல்லுமாறும் , சுவாச நோய் காணப்படுவர்களை மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறும் சுகாதாரத் தரப்பினர் அறிவுறுத்தியுள்ளனர்

## நீதிமன்ற .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு–

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்து–வதற்கு பணம் இல்லை என அரசாங்கம் குறிப்பிடுகின்றமை. பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களை மேலும் நெருக்கடிக்குள்ளர்கும் வகையில் மின்சார கட்டண அதிகரிக்கப்பட்டு, வரி அதிகரிக்கப்பட்டுள்ளது, இதனால் கிடைக்கப் பெற்ற வருமானம் எங்கே? இப்போது டொலர் இருந்தாலும் ரூபா இல்லாத நிலைமையே காணப்படுகின்றது.

அரசாங்கம் இனி புதிய நாடகமொன்றை அரங்கேற்றும். பொருள்களின் விலைகளைக் குறைப்பர். இதனால் மக்களுக்கு பொருள்களில் சிறிய சேமிப்பு இருந்தாலும் மின்சாரக் கட்டணங்கள் உள்ளிட்ட மற் றையவற்றில் இழப்பே இருக்கும். இப் போது கடனை வாங்கிக்கொண்டு நாங்கள் நிதியில் பலமாக இருக்கின்றோம் என்று கூறும் நிலைமையே உள்ளது. இன்று மக்கள் மருந்து இன்றி அவதிப்படுகின்றனர். சர்வதேச நிறுவனங்கள் மருந்துக்கு உதவி செய்தனவே. எங்கே அந்த மருந்துகள். நீங்கள் வேலைக்காரர்கள் என்றால மருந்தைக் கொண்டு வாருங்கள். ரணில் வழங்கும் உருண்டைகளை சாப்பிட வேண்டாம். அரச ஊழியர்களுக்கும் இதனை கூறுகின்றோம். சிறப்புரிமைகள் இல்லாமல் போனபின்னர் சிறிசேனவுக்கு என்ன நடந்தது. அவருக்கு இப்போது நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை நினைவில் கொள்ளுங்கள்.

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்
076 443 80 22






காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# முடிந்தால் நீதிபதிகளை அழைத்து பாருங்கள் மிகுதியை நாங்கள் பார்த்துக்கொள்கின்றோம்!

## அநுரகுமார சவால்



உயர்நீதிமன்றத்தின் இடைக்காலத் தடை உத்தரவால் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது என ஆளும் தரப்பின் உறுப்பினர் முன்வைத்துள்ள சிறப்புரிமை மீறல் பிரேரணை முற்றிலும் தவறானது, நாடாளுமன்றத்தை உயர்நீதிமன்றம் பலப்படுத்தியுள்ளது, முடிந்தால் நீதிபதிகளை நாடாளுமன்றத்துக்கு அழைத்து பாருங்கள், அடுத்து நிகழ்வதை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க ஆளும் தரப்பினரிடம் சவால் விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சர்வஜன வாக்குரிமை தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

நாட்டு மக்களின் தேர்தல் உரிமை, மக்கள் விடுதலை முன்னணி யின் தேர்தல் பிரசார செயற்பாடுகள் தொடர்பில் ஆளும் தரப்பினர் பல்வேறு கருத்துக்களை முன்வைத்துள்ளார்கள், அவர்களின் கருத்துக்கு பதிலளிக்கப் போவதில்லை, ஏனெனில் அவர்களுக்கு நாடாளுமன்றத்துக்குள் மாத்திரம் தான் கருத்துக்களைக் குறிப்பிட முடியும், மக்கள் மத்தியில் சென்று கருத்துரைக்க முடியாது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தற்போது பல்வேறு மாறுபட்ட கருத்துக்களை ஆளும் தரப்பினர் குறிப்பிடுகிறார்கள், நாட்டு மக்கள் தேர்தலைக் கோரவில்லை எனக் குறிப்பிடுகிறார்கள். தேர்தல் நாட்டு மக்களின் விருப்பத்துக்கு அல்ல, அரசமைப் புக்கு அமைய நடத்த வேண்டும். தேர்தலை மக்கள் கோரவில்லை என ஆளும் தரப்பினரால் மக்கள் மத்தியில் சென்று குறிப்பிட முடியுமா?

நாட்டு மக்கள் தேர்தலைக் கேட்கவில்லை என்றால், மக்கள் தேர்தல் கேட்கும் அனைத்து தருணத்திலும் தேர்தலை நடத்த வேண்டும், அது நடைமுறைக்கு சாத்தியமற்றது என்பதால் தான் அரசமைப்பிற்கு அமைய தேர்தல் நடத்தப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது,

தேர்தலை நடத்த நிதி இல்லை என்று அரசாங்கம் குறிப்பிடுகிறது, நிதி இல்லை என்று உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போட இடமளித்தால், எதிர்வரும் காலங்களில் ஜனாதிபதி மற்றும் பொதுத்தேர்தல் கூட இடம்பெறாது, ஜனாதிபதி தேர்தலை நடத்த நிதி இல்லை.

ஆகவே, நான் ஜனாதிபதியாக இருக்கிறேன் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிடுவார், ஆளும் தரப்பினரும் அதனை ஏற்றுக்கொள்வார்கள், இதற்கு எவ்வாறு இடமளிப்பது?

2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடவடிக்கைகளுக்குத் தேவையான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தேர்தலுக்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வாக்கெடுப்பை நடத்த தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு 140 கோடி ரூபாவை திறைசேரியிடம் கோரியுள்ளது. அரசாங்கத்திடம் நிதி இல்லை என்பது உண்மையல்ல, அரசாங்கத்துக்கு மக்கள் வாக்கு இல்லை அதனால் அரசாங்கம் தேர்தலுக்கு பயம் என்பதே உண்மை.

உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது, ஆகவே உறுப்பினர் எண்ணிக்கை குறைக்க வேண்டும் என அரசாங்கம் குறிப்பிடுகிறது, தற்போதைய நிலையில் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை குறைக்க முடியாது.

ஆனால் அவர்களுக்கு வழங்கப்படும் சம்பளம் மற்றும் வரபிரசாதங்களை குறைக்கலாம், ஆகவே உண்மை நோக்கம் காணப்படுமாயின் அரசாங்கம் நாடாளுமன் றத்துக்கு ஒரு பிரேரணையை கொண்டு வரலாம், அதற்கு நாங்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பில் உயர்நீதிமன்றத்தில் பல மனுக்கல் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் நடவடிக்கைகளுக்கு எதிரான விடயங்களை முன்னிலைப்படுத்தி ஆரவாரமாக செயற்படும் அரசாங்கம், உள்ளூராட்சிமன்றத் தேர்தல் நடவடிக்கைகளுக்கு நிதி விடுவிப்பு தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கிய இடைக்காலத் தடையுத்தரவு தொடர்பில் மாறுபட்ட கருத்துக்களை தற்போது குறிப்பிடுகிறார்கள்.

நிதி விடுவிப்பு விவகாரம் தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள இடைக்காலத் தடையுத்தரவால் தமது நாடாளுமன்ற சிறப்புரிமை மீறப்பட்டுள்ளதாக ஆளும் தரப்பின் உறுப்பினர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ள சிறப்புரிமைமீறல் தொடர்பான பிரேரணை முற்றிலும் தவறானது.

உயர்நீதிமன்றத்தின் தடையுத்தரவால் நாடாளுமன்றத்தில் பலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தால் ஒதுக்கப்பட்ட நிதியை நிறைவேற்றுத்துறை கட்டுப்படுத்தியதை நீதிமன்றம் தடுத்துள்ளது, ஆகவே, நாடாளுமன்றத்தின் விவகாரத்துக்கு நீதிமன்றம் தடையேற்படுத்தவில்லை.

முடிந்தால் நீதிபதிகளை நாடாளுமன்றத்துக்கு அழையுங்கள், அடுத்து நிகழ்வதை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்.

நாடாளுமன்றத்தைக் கடுமையாக விமர்சிக்கும் நாட்டு மக்கள் நீதிமன்ற கட்டமைப்பில் மீதும், சுயாதீனத்தன்மை மீதும் பாரிய நம்பிக்கை வைத்துள்ளார்கள். அரசியல் அதிகாரம் நீதிமன்றத்துக்கு பிரயோகிக்கப்பட்டால் பாரிய விளைவுகள் ஏற்படும்.

வடக்கு மக்கள் கொழும்பில் சிங்கள அரசாங்கம் உள்ளது என்று குறிப்பிடுகிறார்கள், தற்போது மாகாண சபைகள் இல்லை, மக்கள் பிரதிநிதிகளும் இல்லை, உள்ளூராட்சி மன்றத் தேர்தலும் பிற்போடப்பட்டால் வடக்கு மக்கள் சிங்கள அரசாங்கம் என்று குறிப்பிடுவது சரியானதாக அமையும், மக்கள் பிரதிநிதிகள் இல்லாத நிர்வாகக் கட்டமைப்பு தோற்றம் பெற்றால் வடக்கிலும், நாட்டின் ஏனைய பகுதிகளிலும் இல்லாத பிரச்சினைகள் தோற்றம் பெறும்.

தமக்கான அரசாங்கத்தை தெரிவு செய்துகொள்ளும் உரிமை நாட்டு மக்களுக்கு உண்டு, நாட்டு மக்கள் தேர்தல் உரிமையைக் கோரி வீதிக்கு இறங்கி போராட்டத்தில் ஈடுபடும் போது ஜனாதிபதி மிலேட்சத்தனமான தாக்குதலைக் கட்டவிழ்த்து விடுகிறார்,

கொழும்பு பல்கலைக்கழகத்தின் முன்பாக போராட்டத்தில் மீது ஈடுபட்ட இராணுவத்தினர் காடையர்களை போல் செயற்பட்டார்கள், வித்தியாசமான முறையில் ஆடையில் இருந்தவர்கள் படையினரா என்பதை தாம் அறியவில்லை என இராணுவ ஊடக பேச்சாளர் குறிப்பிடுகிறார்,

வன்முறையைக் கட்டவிழ்த்து விடுவதை ஜனாதிபதி தவிர்த்துக் கொள்ள வேண்டும், வன்முறையான முறையில் செயற்பட்டால் பாரிய விளைவுகளை ஜனாதிபதி எதிர்கொள்ள நேரிடும். – என்றார்.

## இருவர் கைது!



யாழ். வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சீலாப்புலம் பகுதியில் வெவ்வேறு குற்றச்சாட்டின் கீழ் இருவர் கைது செய்யப்பட்டனர். இந்த கைது நடவடிக்கை வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

யாழ். சீலாப்புலம் பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய ஆண் ஒருவர் 4 லீற்றர் 500 மில்லி லீற்றர் கசிப்பு மற்றும் வாள் ஒன்றுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை அதே பகுதியைச் சேர்ந்த 48 வயதுடைய ஆண் ஒருவர் 3 லீற்றர் கசிப்புடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் சான்றுப் பொருள்களுடன் பாரப்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் கைது செய்யப்பட்டவர்களை பருத்தித்துறை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தற்போதைய நிலையில் தேர்தலை நடத்துகின்றமை ஜனநாயகமல்ல!

## மனுஷ நாணயக்கார



பொருளாதாரம் ஸ்திரமடைந்ததன் பின்னரே எந்தத் தேர்தலையும் நடத்துவோம், தற்போதைய நிலையில் தேர்தலை நடத்துவது ஜனநாயகம் அல்ல, அரசமைப்பு, சட்டம் ஆகியவற்றை காட்டிலும் நாட்டு மக்களின் உயிர்வாழும் உரிமைக்கு முன்னுரிமை வழங்குவோம் என வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் மனு நாணயக்கார தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சர்வஜன வாக்குரிமை தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் முன்னெடுத்த தவ றான பொருளாதாரக் கொள்கையால் நாடு வங்குரோத்து நிலை அடைந்தது என்பதை அன்றும் குறிப்பிட்டோம், இன்றும் குறிப்பிடுகிறோம் என்றும் குறிப்பிடுகிறோம், பொருளாதாரப் பாதிப்பு தீவிரமடைந்துள்ள போது அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்படுமாறு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அழைப்பு விடுத்த போது எந்த எதிர்க்கட்சிகளும் அரசாங்கத்தைப் பொறுப்பேற்க வில்லை.

நாடு எதிர்கொண்ட மோசமான நெருக்கடியைக் கருத்திற்கொண்டு தனி நபராக இருந்துக் கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தைப் பொறுப்பேற்றார்,

கடந்த ஆறுமாத காலத்தில் அவர் எடுத்த கடுமையான தீர்மானங்களால் நாடு தற்போது இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளது. நாட்டு மக்களும் நிம்மதியாக இருக்கிறார்கள்.

எங்களின் எதிர்கால அரசியல் எவ்வாறு இருக்கும் என்பதைக் கணித்துக் கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தில் ஒன்றிணையவில்லை, நாட்டு மக்களின் நிகழ்காலத்தையும், எதிர்காலத்தையும் கருத்திற்கொண்டு அரசாங்கத்துடன் ஒன்றிணைந்து தற்போது வெற்றிபெற்றுள்ளோம்.

தற்போதைய நெருக்கடியான நிலையில் தேர்தலை நடத்தினால் அரசியல் கட்டமைப்பில் எவ்வித மாற்றமும் ஏற்படாது, பொருளாதாரப் பாதிப்பு மீண்டும் தீவிரமடையும் என்பதை எதிர்த்தரப்பினர் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும், தேர்தலுக்கு நாங்கள் அச்சமில்லை, ஆனால் தற்போது தேர்தலை நடத்துவது ஜனநாயகம் அல்ல.

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டதன் பின்னர் எந்தத் தேர்தலையும் நடத்தத் தயாராக உள்ளோம், அரசமைப்பு, சட்டம் ஆகியவற்றைக் காட்டிலும், நாட்டு மக்கள் உயிர்வாழும் உரிமையைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு, அந்தப் பொறுப்பை அரசாங்கம் செயற்படுத்துகிறது.

குறுகிய அரசியல் நோக்கத்தை முன்னிலைப்படுத்திக் கொண்டு எதிர்தரப்பினர் தற்போது போராட்டங்களைத் தீவிரப்படுத்தியுள்ளார்கள். தொழிற்சங்கப் போராட்டத்தால் அரசியல் ரீதியில் எவ்வித மாற்றமும் ஏற்படாது என்பதைத் தெளிவாகக் குறிப்பிட்டுக் கொள்ள வேண்டும். பொருளாதார முன்னேற்றத்துக்கும் தடையாக மேற்கொள்ளப்படும் போராட்டங்களுக்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது. – என்றார்.

# நீதிபதிகளை நாடாளுமன்ற சிறப்புரிமை குழுவுக்கு அழைத்தால் பாரதூரமான விளைவுகள் ஏற்படும்!

## ஜி.எல்.பீரிஸ் எச்சரிக்கை



உள்ளூராட்சிமன்றத் தேர்தல் நடவடிக்கைகளுக்கான நிதி விடுவிப்பு தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கிய இடைக்காலத் தடையுத்தரவை ஆளும் தரப்பினர் நாடாளுமன்ற சிறப்புரிமை ஊடாக விமர்சிப்பது முற்றிலும் தவறானது.

நீதிபதிகளை நாடாளுமன்ற சிறப்புக்குழுவுக்கு அழைத்து அவர்களை விசாரணை செய்தால் நாட்டில் பாரதூரமான விளைவுகள் ஏற்படும், ஆகவே, நீதித்துறை சவாலுக்குட்படுத்தி அரசமைப்பை மலினப்படுத்துவதை அரசாங்கம் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சர்வஜன வாக்குரிமை தொடர்பிலான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

தேர்தலை நடத்தியதால் உலகில் எந்த நாடும் வங்குரோத்து நிலை அடையவில்லை, தேர்தலை நடத்தாத காரணத்தால் நாடுகள் வங்குரோத்து நிலை அடைந்த சம்பவங்கள் பல உள்ளன. ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் இரண்டு பிரேரணைகளை நாடாளுமன்றத்தில் முன்வைத்துள்ளார்கள்.

உயர்நீதிமன்றம் பிறப்பித்துள்ள இடைக்காலத் தடையுத்தரவால் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமை மீறப்பட்டுள்ளதாக ஆளும் தரப்பின் இரு உறுப்பினர்கள் முன்வைத்துள்ள சிறப்புரிமை பிரேரணையால் பாரதூரமான விளைவுகள் தோற்றம் பெறும்.

இந்த பிரேரணைகள் தொடர்பில் மிக அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க முன்வைத்த சிறப்புரிமை மீறல் தொடர்பான பிரேரணையை செயற்படுத்த வேண்டுமாயின் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பில் உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள ரிட் மனுக்களை இடைநிறுத்த வேண்டும். வழக்குகள் தொடர்பில் கட்டளை பிறப்பிக்கும் அதிகாரம் நாடாளுமன்றத்துக்குக் கிடையாது.


நீதிபதிகளை நாடாளுமன்றத்தின் சிறப்பு குழுவுக்கு அழைத்து அவர்களிடம் கேள்வி கேட்பது நாட்டின் அரசமைப்பை கொலை செய்யும் ஒரு செயற்பாடாகக் கருதப்படும். நாட்டின் முத்துறை அதிகாரம் வேறுப்படுத்தப்பட்டுள்ளது. ஒருதுறை பிறதுறையை மதிக்க வேண்டும், நாட்டின் அரசியல் வரலாற்றில் நீதிபதிகள் நாடாளுமன்றத்துக்கு அழைக் கப்பட்டுள்ளார்கள், அதன் பெறுபேறு பாரதூரமாக முடிந்தது. தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் பாரிய நெருக்கடிளை எதிர்கொள்ள நேரிடும். ஆகவே வரலாற்று ரீதியான பாடங்களை ஆளும் தரப்பினர் கற்றுக்கொள்ள வேண்டும்.

நீதிமன்றத்தின் செயற்பாடுகளை சவா லுக்குட்படுத்தினால் நாட்டில் மாறுபட்ட பல பிரச்சினைகள் தோற்றம் பெறும் என்பதை ஆளும் தரப்பினர் முதலில் விளங்கிக் கொள்ள வேண்டும். நாட்டு மக்கள் நிறைவேற்றுத்துறை மற்றும் சட்டவாக்கத்துறை ஆகியவற்றை கடுமையாக விமர்சிப்பார்கள், ஆனால் நீதித்துறையை ஒருபோதும் விமர்சிக்கமாட்டார்கள். ஆகவே, நாட்டில் தேவையில்லாத பிரச்சினையை ஏற்படுத்துவதை அரசாங்கம் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

நீதித்துறையின் அதிகாரத்தை நாடாளுமன்றம் கேள்விக்குள்ளாக்கினால் பாரதூரமான விளைவுகள் ஏற்படும் என்பதை மீண்டும், மீண்டும் சுட்டிக்காட்டுகிறோம். நீதிமன்றத்தின் தீர்ப்பை ஆளும் தரப்பினர் நாடாளுமன்ற சிறப்புரிமை என்ற பெயரில் விமர்சிக்கிறார்கள், இது முற்றிலும் தவறானது என்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறோம். – என்றார்.

# அரச நிறுவனங்களைத் தனியார் மயப்படுத்த முயற்சித்தால் நாட்டில் இரத்தக்களரி ஏற்படும்

## கிரியெல்ல எச்சரிக்கை



மக்கள் ஆணையின்றி அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்த முயற்சித்தால் நாட்டில் இரத்தக் களரி ஏற்படும் நிலைமையே உருவாகும். அதனால் தேர்தலை நடத்தி மக்கள் ஆணையை பெற்றுக்கொள்ளுங்கள் என எதிர்க்கட்சி பிரதமகொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சர்வ ஜன வாக்குரிமை தொடர்பான இரண்டாம் நாள் சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

தேர்தலுக்கு அஞ்சும் அரசாங்கம், அதனைத் தடுப்பதற்காக பல்வேறு தந்திரங்களை மேற்கொள்கிறது. இந்நிலையில் வரவு –செலவுத் திட்டத்தின் ஊடாக ஒதுக்கப்பட்டுள்ள நிதியை விநியோகிக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இதன்படி ஏப்ரல் 25 ஆம் திகதி தேர்தலை நடத்த தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

தற்போது சர்வதேச நாணய நிதியத்துக்கு தாமதித்தாவது அரசாங்கம் சென்றுள்ளது. இதன்போது 15 விடயங்களுக்கு இணங்கியுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார். அந்த 15 விடயங்களும் என்ன என்று தெரியவில்லை.

தற்போது சௌபாக்கிய நோக்கு செயற்படுத்தப்படுகின்றனவா? அரச நிறுவனங்களை விற்கும் செயற்பாடுகளே நடக் கின்றன. இந்த அரசாங்கத்துக்கு மக்கள் ஆணை கிடையாது. இப்படி இருந்து கொண்டு அதனை செய்ய முடியுமா? தனியார் மயப்படுத்துவதென்றால் மக்களிடம் அனுமதி பெற வேண்டும். இவற்றைப் பாதுகாக்கவே மக்கள் ஆணை கிடைத்தது.

அரச நிறுவனங்களை மறுசீரமைப்பதாக இருந்தால் அதற்கு மக்கள் ஆணை பெற்றுக்கொள்ள வேண்டும் என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்திருக்கிறது. அதனால்தான் தேர்தல் ஒன்று தேவை என்கிறோம்.

உள்ளூராட்சி தேர்தலை நடத்தி உங்கள் வேலைத்திட்டங்களை முன்வையுங்கள். அப்போது மக்கள் எந்த பக்கம் இருக்கிறார்கள் என்பதைப் பார்க்கலாம்.. மக்கள் ஆணை இன்றி இதனை செய்யப் போனால் நாட்டில் இரத்தக் களரி ஏற்படும் நிலைமையே உருவாகும்.

சர்வதேச நாணய நிதியத்தின் இணக்கப்பாட்டை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவது மக்கள் ஆணையாக அமையாது. மக்களிடம் கேட்க வேண்டும். தேர்தலுக்கு அஞ்ச வேண்டாம். மக்களுக்கு சரியான பக்கத்தைத் தெரிவுசெய்ய இட மளிக்க வேண்டும். அத்துடன் நாடு பொருளாதார நெருக்கடி யில் இருக்கும் நிலையில் தேர்தல் ஒன்று தேவையா என ஆங்கில பத்திரியை ஒன்று மேற்கொண்ட கருத்துக்கணிப்பில் 75 வீதமனவர்கள் தேர்தலை நடத்த வேண் டும் எனத் தெரிவித்திருக்கின்றனர். இதுதான் மக்கள் ஆணை. – என்றார்.

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## குண்டுச் சட்டிக்குள் ஓடும் தேர்தல் குதிரை

உள்ளூராட்சி சபைத் தேர்தல் விவகாரம் குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டிய கதையாக ஒரே இடத்திலேயே சுற்றிக்கொண்டிருக்கப் போகின்றதோ என்கிற சந்தேகம் வலுக்கின்றது.

ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் பொதுச் செயலாளரால் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில், தேர்தலுக்கான நிதியை தடுப்பதறுக்கு எதிராக திறைசேரிச் செயலாளருக்கும் ஆட்சியாளர்களை நீதிமன்றில் பிரதிநிதித்துவப்படுத்திய சட்டமா அதிபருக்கும் இதனோடு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்தது மூன்று நீதியரசர்களைக் கொண்ட ஆயம்.

அதன் பின்னர் இந்தப் பிரச்சினை ஒரு முடிவுக்கு வந்து தேர்தல் நடத்தப்படலாம் என்பதுபோன்ற ஒரு தோற்றப்பாடு ஏற்பட்டது. தேர்தல்கள் ஆணைக்குழுவும் நீதிமன்ற உத்தரவின் பின்னர் தேர்தல் நாளை மார்ச் 9 இலிருந்து ஏப்ரல் 25 இற்குப் பின்தள்ளியது. மார்ச் 28ஆம் நாள் முதல் தபால் மூல வாக்களிப்பை நடத்துவதற்கும் தீர்மானித்து.

அதற்கேற்ற வகையில் வாக்குச்சீட்டுக்களை அச்சிட முடியும் என்று அரச அச்சகப் பணிப்பாளரால் உறுதிமொழியும் வழங்கப்பட்டது. ஆனால் திறைசேரியில் இருந்து இன்னும் நிதி விடுவிக்கப்படவில்லை என்பதால் வாக்குச் சீட்டை அச்சிடும் பணியைத் தொடங்க முடியவில்லை என்று மீண்டும் பழைய பல்லவியைப் பாடத் தொடங்கியிருக்கிறார் அரச அச்சகப் பணிப்பாளர்.

முன்னரும் அவர் இதேபோன்றே வாக்குச் சீட்டுக்களை அச்சிடும் பணியைத் தொடங்கிவிட்டு இடைநிறுத்தினார். தமக்கு விடுவிக்கப்பட்ட 40 மில்லியன் ரூபாய்க்கு மட்டும் அச்சிடும் பணியை மேற்கொண்டுவிட்டு மீதிப் பணம் வழங்கப்படாததால் எஞ்சிய வாக்குச்சீட்டுக்களை அச்சிட முடியவில்லை என்று கைவிரித்தார். இப்போது மீண்டும் அந்த 40 மில்லியன் ரூபாய்க்கு மேலதிகமாக ஒரு சதமும் அச்சகத்தை வந்தடையவில்லை என்பதால் வாக்குச் சீட்டை அச்சிடும் பணிகள் தொடங்கவில்லை என்கிறார்.

திறை சேரிச் செயலாளரோ, நிதியை விடுவிப்பதற்கான அனுமதியைக் கேட்டு நிதி அமைச்சர் என்ற வகையில் அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்று கூறுகின்றார். நாடாளுமன்றம் ஏற்கனவே தேர்தல்களுக்கு இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் நிதியை ஒதுக்கிவிட்டது. அந்த நிதியை விடுவிப்பதைத் தடுக்கக்கூடாது என்று நீதிமன்றமும் உத்தரவிட்டுவிட்டது. இந்த நிலையில் நிதியை விடுவிப்பதற்கு திறைசேரிச் செயலருக்கு நிதி அமைச்சரின் அனுமதி ஏன் என்று தெரியவில்லை.

மற்றொரு பக்கத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமை மீறப்பட்டிருப்பதாக நீதிமன்ற உத்தரவு தொடர்பில் ஆளும் கட்சி உறுப்பினர்கள் பிரச்சினை கிளப்பத் தொடங்கியிருக்கிறார்கள்.

இவற்றையெல்லாம் கூட்டிக்கழித்துப் பார்க்கும் போது தேர்தலுக்கான செயற்பாடுகள் ஒரே வட்டத்திலேயே சுழன்று கொண்டிருக்கும் என்றுதான் எண்ணவேண்டியிருக்கின்றது.

நீதித்துறையும் நிறைவேற்றுத் துறையும் இதன் மூலம் ஒரு நேரடி மோதலுக்குத் தயாராகின்ற அறிகுறிகளும் தெரிகின்றன. கிட்லருக்கு ஒரு ”தேசப்பற்று” என்பதைப் போல ரணிலுக்கு ஒரு ”பொருளாதார மீட்சி” கிடைத்திருக்கிறதோ என்கிற சந்தேகம் வலுக்கின்றது.

# மாகாண சபைத் தேர்தலுக்கே முன்னுரிமை வழங்கவேண்டும்

## அரவிந்தகுமார் கோரிக்கை



உள்ளூராட்சி சபைத் தேர்தலை விட மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கே தேர்தல் ஆணைக்குழு முன்னுரிமை வழங்க வேண்டும் என கல்வி இராஜாங்க அமைச்சர் அ.அரவிந்தகுமார் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற சர்வஜன வாக்குரிமை தொடர்பான இரண்டாம் நாள் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் –

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

என்னைப் பொறுத்த வரையில் உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

அதனால் தான் எமது மாவட்டத்தில் 19 உள்ளூராட்சி சபைகளில் எனது தலைமையில் ஐக்கிய மக்கள் முன்னணி வேட்புமனு தாக்கல் செய்தது. உள்ளூராட்சி சபைகளின் ஆயுட்காலம் இன்னும் முடிவடையவில்லை.

ஆனால், மாகாண சபைகள் கலைக்கப்பட்ட நிலையில் மாகாண சபைகளுக்கான தேர்தல் 4 வருடங்களாக நிலுவையில் இருக்கின்றது.

அதனால் உள்ளூராட்சி சபைத் தேர்தலை விட மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கே தேர்தல்கள் ஆணைக்குழு முன்னுரிமை வழங்க வேண்டும்.

மேலும் மிகவும் வீழ்ச்சியடைந்திருந்த நாட்டின் பொருளாதாரம் தற்போது ஓரளவு ஸ்திர நிலைக்கு வர ஆரம்பித்திருக்கின்றது.

நாடு சுமுகமான நிலைக்கு வந்துகொண்டிருக்கின்றது.

சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்து வருகின்றது. அதனால் ஹோட்டல்கள் நிரம்பி வழிய ஆரம்பித்திருக்கின்றன. ஆனால், இதனைப் பொறுத்துக்கொள்ள முடியாத சிலர் ஆர்ப்பாட்டங்களையும் போராட்டங்களையும் முன்னெடுத்து நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வர முயற்சிக்கின்றனர்.

இந்தச் சூழ்ச்சியில் மக்கள் சிக்கிக்கொள்ளக்கூடாது.

பெருந்தோட்ட மக்கள் துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் முகம்கொடுத்து வரும் மக்களாகவே உள்ளனர். அவர்களின் உழைப்புக்கு ஏற்ற ஊதியம் இல்லை. அவர்களின் தொழில் மதிக்கப்படுவதில்லை.

மிகவும் கஷ்டத்துக்கு மத்தியிலேயே அவர்கள் தோட்டங்களில் தொழில் செய்து வருகின்றனர்.

அவர்களின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மேலும் எமது மக்கள் மீது காட்டப்பட்டு வரும் பாரபட்சம் ஒழிக்கப்பட வேண்டும். தேசிய நீராடே;டத்துக்குள் மலையக மக்கள் உள்வாங்கப்பட வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

# அழுத்தம் கொடுத்தால் ஜனாதிபதிக்கு எதிராக சிறப்புரிமை பிரச்சினையை கொண்டுவருவோம்!

## நளின் பண்டார எச்சரிக்கை

உள்ளூராட்சி மன்ற தேர்தல் இடம்பெற்றால் அதன் பெறுபேறு எவ்வாறு அமையும் என்பது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு தெரியும்.

அதனால் அவர் ஒரு போதும் இந்தத் தேர்தலை நடத்த மாட்டார். தேர்தல் இடம்பெறுவதை நிறுத்துவதற்கு அரசமைப்புக்கு விரோதமான எந்த நடவடிக்கைக்கு செல்வதற்கும் அவர் பின்வாங்கப்போபவர் அல்லர்.

அத்துடன் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி தொடர்ந்து அழுத்தம் கொடுத்தால் அவருக்கு எதிராக சிறப்புரிமை பிரச்சினையை கொண்டுவருவோம் என எதிர்க்கட்சி உறுப்பினர் நளின் பண்டார தெரிவித் தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சர்வஜன வாக்குரிமை தொடர்பான இரண்டாம் நாள் சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் –

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு தற்போது 300 கோடி ரூபாவும் செலவாகுவதில்லை.

கடந்த காலங்களிலும் தேர்தலுக்கான செலுத்துகைகள் தாமதித்தே வழங்கப்பட்டன. ஆனால் தங்களுக்கு வாக்கு இல்லை என்பதை அரசு நன்கு தெரிந்து வைத்திருக்கிறது. தேர்தல் இடம்பெற்றால் பெறுபேறு எவ்வாறு அமையும் என்பது இவர்களுக் குத் தெரியும்.

ரணில் விக்ரமசிங்க எப்போதும் தேர்தல் ஒன்றுக்கு முன்னர், அதன் பெறுபேறு தொடர்பில் ஆய்வு செய்வார். அது அவரின் வழமை. 2010 இல் அவருக்கு வெற்றிபெற முடியாது என்பதை ஆய்வு செய்து பார்த்ததாலே தேர்தலில் போட்டியிடாமல் பீல்மார்ல் சரத் பொன்சேகாவை முன்னிலைப்படுத்தினார். 2015 இலும் அவர் தோல்வியடைவார் என்று தெரிந்ததாலே மைத்திரிபால சிறிசேனவை வேட்பாளராக்கினார். இந்தத் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியில் யாரை வேண்டுமானாலும் வேட்பாளராகப் பெயரிடவும் அவர் தயாராக இருந்தார்.

அதனால் தற்போது தேர்தல் இடம்பெற்றால், ஐக்கிய மக் கள் சக்தி பாரியதொரு வெற் றியை பெறும் என்பதை ரணில் விக்ரமசிங்க நன்கு அறிவார். ஐக்கிய மக்கள் சக்தி வெற்றி பெறுவதை அவர் ஒருபோதும் விரும்பமாட்டார். அதேபோன்று அவரின் ஐக்கிய தேசிய கட்சி வீழ்ச்சி யடைவதையும் அவர் விரும்ப மாட்டார். அவரைப் பாதுகாத்து வரும் பொதுஜன பெரமுனவை பாதுகாக்கவும் அவரின் ஜனாதிபதி பதவியைப் பாதுகாக்கவும் அவர் எதனை வேண்டுமானாலும் செய்வார்.

அதனால் உள்ளூராட்சி மன்ற தேர்தலை ரணில் விக்ரமசிங்க நடத்தவே மாட்டார். தேர்தலைத் தடுப்பதற்கு எந்தவொரு சதித்திட்டத்தையும் மேற்கொள்வார். அதற்காக அரசமைப்புக்கு விரோதமாக எந்த நடவடிக்கையையும் முன்னெடுப்பதற்கு அவர் பின்வாங்கப்போவதில்லை. அவரின் இந்த நடவடிக்கைக்கு பொதுஜன பெரமுன பூரண ஒத்துழைப்பை வழங்கும் என்ற நம்பிக்கை அவருக்கு இருக்கிறது.

அத்துடன் ஜனாதிபதி நாடாளுமன்றத்துக்கு வந்து, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கேள்வி எழுப்பும்போது, அவர்களை அச்சுறுத்தும் வகையில் வாய் மூடி உட்காருங்கள் எனத் தெரிவித்து வருகிறார். ஜனாதிபதியின் இந்த நடவடிக்கை, நிறைவேற்று அதிகாரியால் நாடாளுமன்றத்தை கட்டுப்படுத்துவதாகவே இருக்கிறது. அதனால் சபையில் எமது சிறப்புரிமை மீறப்படுவதாகத் தெரிவித்து ஜனாதிபதிக்கு எதிராக சிறப்புரிமை பிரச்சினை முன்வைக்க நேரிடும். – என்றார்.

## சவுக்கம் காட்டில் திடீர் தீப்பரவல்



யாழ்ப்பாணம் – வடமராட்சிப் பகுதியில் உள்ள மணல்காடு சவுக்கம் காட்டில் வெள்ளிக்கிழமை இரவு 9 மணியளவில் திடீரென தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் மேற்படி தீப்பரவல் தொடர்பாக பருத்தித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரயந்த அமரசிங்கவின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து பருத்தித்துறை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பு அதிகாரி சேந்தன் தலைமையிலான குழுவினர் பிரதேச மக்களுடன் இணைந்து அங்கிருந்து பருத்தித்துறை பிரதேச சபை மற்றும் இராணுவத்தின் உதவியுடன் இரவு 11 மணியளவில் தீ கட்டுபாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

தீ பரவிய குறித்த பகுதியில் இராணுவம், பொலிஸார், மக்கள் அனைவரும் இணைந்து மேலும் தீ பரவாமல் மரங்களுக்கு கீழிருந்த குப்பைகளை அகற்றியும் மணல் மண்ணால் தடுப்பு அணை அமைத்தும், பிரதேச சபையின் நீர்த்தாங்கி மூலம் நீரை ஊற்றியும் தீயை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளனர்.

குறித்த மணல்காடு சவுக்கம் காட்டில் விறகு வெட்டுவதற்காக காட்டுக்கு தீ வைக்கும் விசமிகள் பின்னர் விறகை வெட்டும் செயற்பாடு நீண்ட காலமாகத் தொடர்ந்து வருவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

## கலவரபூமியாக்கி விடாதீர்கள் சம்பிக்க அரசிடம் கோரிக்கை!



ஜனநாயக போராட்டங்களை வன்முறைகள் ஊடாக முடக்குவதற்கு அரசாங்கம் முயற்சிக்கக்கூடாது. அது 1971 ஆம் ஆண்டுகள் ஏற்பட்ட நூற்றுக்கணக்கான உயிர்களைக் காவு கொண்ட கல வரம் போன்ற சூழலை ஏற்படுத்தி விடும். அவ்வாறானதொரு நிலைமை நாட்டில் மீண்டும் ஏற்பட இடமளித்து விட வேண்டாம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

காலாவதியான கண்ணீர்ப்புகை பிரயோகம் பிரயோகிக்கப்பட்டிருப்பின் அது தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதே போன்று, பல்கலைக்கழக நிர்வாகத்தின் அனுமதி இன்றி பல்கலைக்கழகத்திற்குள் நுழைத்த பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இராணுவத்தினரைக் கொண்டு முடக்குளவிற்கு அங்கு எவ்வித வன்முறைகளும் இடம்பெறவில்லை.

கடந்த பல வருடங்களுக்கு முன்னர் இவ்வாறான வன்முறைகளால் நூற்றுக்கணக்கான உயிரிழப்புக்கள் ஏற்பட்டதைப் போன்ற நிலைமை மீண்டும் ஏற்பட்டு விட இடமளித்து விட வேண்டாம் என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கின்றேன். மாணவர்கள் வன்முறையை நோக்கிச் செல்வதைத் தடுக்கும் பொறுப்பு பெற்றோருக்கும் , பேராசிரியர்கள் , விரிவுரையாளர்களுக்கும் உண்டு.

சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர் மட்ட இணக்கப்பாடு எட்டப்பட்டாலும், அதன் நிபந்தனைகளை பலவந்தமாக செயற்படுத்த முடியாது. மக்களின் அனுமதியுடனேயே மறுசீரமைப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது என்பதை அரசாங்கம் நினைவில் கொள்ள வேண்டும். அதே போன்று அடிப்படைவாதத்துக்கும் இடமளித்து விடக் கூடாது. அடிப்படைவாதம் மறுசீரமைப்புக்களுக்கு பெரும் தடையை ஏற்படுத்தும். – என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு





# ஈரான் – சவூதி இடையே மீண்டும் தூதரக உறவு

எதிரும் புதிருமாகச் செயல்பட்டு வந்த ஈரானும், சவூதி அரேபியாவும் தங்களிடையே தூதரக உறவை மீண்டும் ஏற்படுத்திக்கொள்ள ஒப்புக்கொண்டுள்ளன.

சீனாவின் முன்முயற்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ள இதற்கான ஒப்பந்தத்தால், இரு நாடுகளுக்கும் இடையே கடந்த 7 ஆண்டுகளாக நிலவி வந்த பதற்றம் முடிவுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன், இரு நாடுகளுக்கும் இடையே நேரடியாகவோ, பிற நாடுகளின் மூலம் மறைமுகமாவோ போா ஏற்படும் அபாயம் குறைந்துள்ளதாகவும் கூறப்படுகிறது. இது குறித்து ஈரானும், சவூதி அரேபியாவும் வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

ஈரானுக்கும், சவூதி அரேபியாவுக்கும் இடையே மீண்டும் தூதரக உறவை ஏற்படுத்திக்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து, இரு நாடுகளும் தங்களது தூதரங்களை இரு நாடுகளிலும் அமைக்கவிருக்கின்றன.

அதிகபட்சம் இரு மாதங்களில் இந்த நடவடிக்கைகள் நிறைவு செய்யப்படும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கு ஆசிய அரசியலில் ஆதிக்கம் செலுத்தி வந்த அமெரிக்கா, தற்போது அந்தப் பகுதியிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக விலகுவதாகக் கருதப்படுகிறது.

இந்தச் சூழலில், சீனாவின் பங்களிப்பில் பன்னாட்டு அரங்கில் மோதல் போக்கைக் கடைப்பிடித்து வந்த ஈரானும், சவூதி அரேபியாவும் தங்களிடையே தூதரக உறவை ஏற்படுத்த ஒப்புக்கொண்டுள்ளது சீனாவுக்குக் கிடைத்த வெற்றியாகக் கூறப்படுகிறது.

ஷியா பிரிவு முஸ்லிம்களை அதிகமாகக் கொண்ட ஈரானுக்கும், சன்னி பிரிவினரை அதிகம் கொண்ட சவூதி அரேபியாவுக்கும் இடையே தொடாந்து பதற்றம் நிலவி வருகிறது.

யேமனில் ஹூதி கிளாச்சியாளாகளுக்கு ஆதரவாக ஈரானும், அரசுப் படைகளுக்கு ஆதரவாக சவூதி அரேபியாவும் செயல்பட்டு வருவதால் அங்கு உள்நாட்டுப் போரில் ஏராளமானோா உயிரிழந்து வருகின்றனா.

தற்போது இரு நாடுகளுக்கும் இடையே தூதரக உறவு ஏற்பட்டுள்ளதால் யேமன் உள்நாட்டுப் போா நிரந்தரமாக முடிவுக்கு வரும் என்று நம்பப்படுகிறது.

# உப்பின் பயன்பாட்டை 30 வீதம் குறையுங்கள்

## உலக சுகாதார நிறுவனம் அறிவிப்பு




வரும் 2025ஆம் ஆண்டுக்குள், உலகமே, தாங்கள் எடுத்துக்கொள்ளும் சோடியம் எனப்படும் உப்பின் அளவை 30 வீதம் குறைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும் என்று உலக சுகாதார நிறுவனம் அறிவுறுத்தியிருக்கிறது.

உலக சுகாதார நிறுவனம் முதல் முறையாக இதுபோன்ற தொரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறது. உடலுக்கு மிகவும் தேவையான அடிப்படை ஊட்டச்சத்தாக விளங்கும் சோடியம் சற்று அதிகரித்தாலும் இதய நோய், பக்கவாதம், ஆயுள்காலம் குறைவது போன்றவை நேரிடுகிறது என உலக சுகாதார நிறுவனம் எச்சரித்துள்ளது.

சோடியம் என்பது பெரும்பாலும் தூள் உப்பு மூலமாகத்தான் உடலுக்குச் செல்கிறது. அதேவேளையில், சோடியம் க்ளூடாமேட் என்பது, இயற்கையாகவே சில உணவுபொருள்களில் நிறைந்திருக்கும். சில உணவுபொருள்களில் ருசிக்காக சேர்க்கப்படுகிறது.

அதாவது, உலகம் முழுவதும் உப்பு உள்கொள்ளும் அளவை கண்டறிந்து, ஒருவரது சராசரி உப்பு உள்கொள்ளும் அளவு கண்டறியப்பட்டிருக்கிறது. அதாவது ஒருவர் ஒரு நாளைக்கு 10.8 கிராம் உப்பை உட்கொள்கிறார்கள். இது உலக சுகாதார நிறுவனம் அறிவுறுத்தும் அளவான 5 கிராமுக்கும் குறைவானது என்ற அளவை விட இரண்டு மடங்குக்கும் சற்று அதிகம். அதாவது ஒரு டீஸ்பூன் உப்பு அதிகமாகச் சாப்பிடுகிறோம்.

உலக சுகாதார நிறுவனத்தின் உறுப்பு நாடுகளில் 5 சதவிகிதம் மட்டுமே கட்டாய மற்றும் விரிவான சோடியம் குறைப்புக் கொள்கைகளால் பாதுகாக்கப்படுவதாகவும், 73 சதவிகித உறுப்பு நாடுகள் அத்தகைய கொள்கைகளை முழுமையாக செயல்படுத்தவில்லை என்றும் அந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

மிகவும் செலவில்லாமல், சோடியத்தைக் குறைக்கும் கொள்கையானது முறையாக செயல்படுத்தப்பட்டால், 2030ஆம் ஆண்டு வாக்கில் 70 லட்சம் மக்களின் உயிர்கள் காப்பாற்றப்படும் என்றும் அந்த அறிக்கை தெரிவிக்கின்றது.

தொற்றுநோய் அல்லாத நோய்களால் மக்கள் இறப்பதைக் குறைக்கும் வகையில் இந்த திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. உணவு பொருள்கள் வாயிலாக ஏற்படும் பல நோய்களில், சோடியம் ஏற்படுத்தும் தாக்கம் மிகக் கடுமையானது என்கிறது சுகாதார நிறுவனம்.

உப்பைக் குறைப்பது தொடர்பாக மிகப் பெரிய அளவில் மக்களிடைய விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டும் என்றும் உலக சுகாதார நிறுவனம் வலியுறுத்தியுள்ளது.

# கடும் குளிர்கால புயலால் அமெரிக்காவில் 13 சாவுகள்



அமெரிக்காவில் அதிக மக்கள்தொகை கொண்ட மாநிலமான தெற்கு கலிபோர்னியாவில் கடுமையான குளிர்கால புயல் வீசுகின்றது. இதுவரை 13 பேர் அங்கு உயிரிழந்தனர்.

கடந்த 2 ஆண்டுகளில் காட்டுத்தீயில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையைவிடக் குளிர்கால புயலுக்குப் உயிரிழப்போர் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

இது குறித்து கலிபோர்னியா அதிகாரப்பூர்வ அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில், பெப்ரவரி 26 முதல் மார்ச் 8 வரை குளிர்கால புயலுக்கு 13 பேர் இறந்துள்ளனர். தொடர்ச்சியாக அப்பகுதிகளில் பனிப்புயல்கள் தாக்கி வருகின்றன. இதனால் அங்குள்ள மக்கள் பெரும் அவதிக்குள்ளாகியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநிலத்தில் இயல்பு வாழ்க்கை பெரியளவில் பாதிக்கப்பட்டுள்ளது. மலைப்பகுதிகளையும், சாலைகளையும் மூன்று மீற்றர் அளவுக்கு ஆழமான பனி சூழ்ந்துள்ளது.

மக்களுக்கு நாளுக்கு நாள் உணவு, மருந்து மற்றும் எரிபொருள் விநியோகம் குறைந்து வருகின்றது. சில இடங்களில் மக்கள் மின்சாரம் இல்லாமலும் தவித்து வருகின்றனர் என்று உள்ளூர் ஊடகங்கள் தெரிவித்தன.

கலிபோர்னியா ஆளுநர் கவின் நியூசோம் மார்ச் 1 முதல் அப்பகுதியில் அவசரக்கால நிலையை அறிவித்திருக்கிறார். எனினும் நிலைமை மோசமாகவே இருக்கின்றது என்று ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

# இளைஞன் வயிற்றில் வோட்கா மது போத்தல்

## பார்த்த மருத்துவர்கள் அதிர்ச்சி



நேபாளத்தில் 26 வயது இளைஞரின் வயிற்றில் இருந்த வோட்கா போத்தலைக் கண்டு மருத்துவர்கள் அதிர்ச்சியடைந்தனர்.

நேபாளத்தில் குஜாரா நகராட்சியைச் சேர்ந்த நுர்சத் மன்சூரி என்பவருக்கு அண்மையில் கடுமையான வயிற்று வலி ஏற்பட்டது. உடனே மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவருக்கு மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டது. அதில் அவருடைய வயிற்றில் வோட்கா பாட்டில் இருப்பதைக் கண்டு மருத்துவர்கள் அதிர்ச்சியடைந்தனர்.

இரண்டரை மணிநேர அறுவை சிகிச்சைக்குப் பிறகு மன்சூரி வயிற்றில் இருந்த வோட்கா போத்தல் வெற்றிகரமாக அகற்றப்பட்டது. போத்தல் அவரது குடலைத் துண்டித்து மலக் கசிவு உள்ளிட்ட பிரச்சினைகளை ஏற்படுத்தியதாகவும், இருப்பினும் அவர் தற்போது அபாயக் கட்டத்தை தாண்டிவிட்டார் என்றும் மருத்துவர் தெரிவித்தார்.

மன்சூரி நண்பர்கள் அவரைக் குடிக்க வைத்துவிட்டு, மலக்குடல் வழியாக பாட்டிலை வயிற்றில் வலுக்கட்டாயமாக திணித்திருக்கலாம் என்று காவல்துறையினர் கூறியுள்ளனர். இந்த சம்பவம் தொடர்பாக சேக் சமீம் என்பரை காவல்துறையினர் கைது செய்ததோடு மன்சூரியின் நண்பர்கள் சிலரிடமும் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஆப்கானிஸ்தானில் ஐ.எஸ். தாக்குதலில் ஆளுநர் சாவு

ஆப்கானிஸ்தானில் இஸ்லாமிய தேச (ஐஎஸ்) அமைப்பினர் நடத்திய தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் மாகாண ஆளுநா உள்பட 3 பேர் உயிரிழந்தனர்.

அந்த நாட்டின் பால்க் மாகாணத்தின மஸார்-ஏ-ஷெரீஃப் நகரில் அமைந்துள்ள மாகாண ஆளுநர் அலுவலகத்துக்கு வியாழக்கிழமை வந்த ஐஎஸ் உறுப்பினர், தனது உடலில் மறைத்து வைத்திருந்த குண்டை வெடிக்கச் செய்தார்.

இதில், ஆளுநா தாவூத் மூஸாமில் உள்பட 3 போ உயிரிழந்தனர்; 4 போ காயமடைந்தனர்.

இந்தத் தாக்குதலுக்கு ஆப்கானிஸ்தானுக்கான ஐஎஸ் பிரிவான ‘கொராசன் பகுதி ஐஎஸ்’ அமைப்பு பொறுப்பேற்றது.

இது குறித்து அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், ஆளுநரைக் குறிவைத்து தங்களது அமைப்பைச் சோந்த அப்துல் ஹக் அல்-கொராசானி என்பவர் இந்தத் தாக்குதலை நடத்தியதாகத் தெரிவித்தது. சன்னி முஸ்லிம் பிரிவைச் சோந்த அமைப்பான ஐஎஸ், அதே பிரிவைச் சோந்த மற்றொரு அமைப்புடன் தொடாந்து மோதல் போக்கைக் கடைப்பிடித்து வருகிறது. 2021ஆம் ஆண்டில் ஆப்கானிஸ்தானை விட்டு அமெரிக்கப் படையினா வெளியேறிய பிறகு அந்த நாட்டு ஆட்சியை தலிபான்கள் கைப்பற்றினா. அதனைத் தொடர்ந்து சன்னி பிரிவு முஸ்லிம்கள் மட்டுமின்றி தலிபான்களையும் குறிவைத்து ஐஎஸ் அமைப்பினர் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.



# நியூஸிலாந்தின் பின்வரிசை காட்டாட்டம்
# 2ஆம் இன்னிங்ஸில் இலங்கை தடுமாற்றம்



நியூஸிலாந்து - இலங்கை அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டியின் 3ஆம் நாளான இன்று நியூஸிலாந்து தன் முதல் இன்னிங்ஸில் 373 ஓட்டங்கள் குவித்து 18 ஓட்டங்கள் முன்னிலை பெற்றுள்ளது.

இன்னிங்ஸின் முதல் நாளான வெள்ளிக்கிழமை பெரிய ஓட்டங்களை .டிக்கத் திணறிய நியூஸிலாந்து வீரர்கள் இரண்டாம் நாளில் அதிலிருந்து மீண்டு அடித்தாடினர். டாரி மிட்செல் சதம் விளாசினார்.

பவுலர் மேட் ஹென்றி 10 பவுண்டரிகள் 3 சிக்சர்களுடன் 75 பந்துகளில் 72 ஓட்டங்கள் விளாச ஆட்டத்தின் போக்கே மாறியது. பின்வரிசை வீரர்கள் கணிசமான ஓட்டங்களைப் பெற்றுக்கொடுக்க நியூஸிலாந்து அணி இலங்கையின் ஓட்டங்களைக் கடந்து முன்னேறியது.

மூன்றாவது நாளில் தனது இரண்டாவது இன்னிங்ஸைத் தொடங் கிய இலங்கை 3 இலக்குகளை இழந்து 83 ஓட்டங்கள் மட்டுமே எடுத்துத் திணறி வருகின்றது.

ஆஞ்சேலோமத்யூஸ்20ஓட்டங்களுடனும் பிரபாத் ஜெய சூரியா 2 ஓட்டங்களுடனும் களத்தில் நிற்கின்றனர். பிளைர் டிக்னர் 3 விக் கெட்டுகளையும் கைப்பற்றினார்.

முன்னதாக, நியூஸிலாந்து அணி இன்று காலை 162/5 என்ற நிலையிலிருந்து தொடங்கியது. டேரில் மிட்செல் 40 ஓட்டங்களுட னும் மைக்கேல் பிரேஸ்வெல் 9 ஓட்டங்களுடனும் தொடங்கினர்.

ஆனால் மைக்கேல் பிரேஸ்வெல் 25 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது ஜெயசூரியா வீசிய பந்தை முன்னால் வந்து ஆடுவதற்குப் பதிலாகப் பின்னால் சென்று ஆட முயல இலக்குக் காப்பாளரிடம் பந்து பிடிபட்டது.

இலங்கைப் பந்துவீச்சாளர்களைக் குழப்பி நிலைகுலைய வைப் பதில் டேரில் மிட்செல் அதிகம் கவனம் செலுத்தினார்.

கிரீசிற்குள் அடிக்கடி நிலையைமாற்றிக்கொண்டே இருந்தார். ஒன்று இறங்கி வந்து ஆடுவார் இல்லையெனில் வழக்கத்திற்கு மாறாக கிரீசிலிருந்து ஒரு அடி முன்னால் ‘காப்பு’ எடுத்தார்.

இது இலங்கை பந்து வீச்சாளர்களைக் குழப்பியது. இதனால் ராஜிதா, அசிதா ஆகியோரால் தங்களது பந்தைப் பதியும் இடத்ததை (லெந்த்) பரமாரிக்க முடியவில்லை. மிட்செல் இதனை வாய்ப் பாக்கிக் கொண்டார். 124 பந்துகளில் 3 பவுண்டரி ஒரு சிக்சருடன் அரைசதம் எடுத்த அவர் 184 பந்துகளில் 6 பவுண்டரிகள் 2 சிக்சர்களுடன் சதம் கண்டார். கடைசி யில் ‘102 ஓட்டங்களில் குமாராவின் அவுட் ஸ்விங்கருக்கு டிக்வெலவிடம் பிடி கொடுத்து வெளியேறினார்.

அவருக்கு முன் டிம் சவுதீ 20 பந்துகளில்ல் 3 பவுண்டரி 1 சிக்சருடன் 25 ஓட்டங்களை விளாசி வெளியேறியிருந்தார். மேட் ஹென்றி முதலில் 45 பந்து களில் 20 ஓட்டங்களையே எடுத்து நிதானம் காட்டினார், ஆனால் திடீரென அவருக்குள் ஒரு வெறி புகுந்தது. அடுத்த 30 பந்துகளில் 52 ஓட்டங்களை, பந்து கிழியக் கிழிய அடித்தார்.

தனஞ்ஜய டி சில்வாவின் ஒரே ஓவரில் 2 சிக்சர்களை லாங் ஆனில் விளாசி ஒரு பேக்ஃபுல் கவர் பவுண்டரியையும் விளாசினார். பிறகு ராஜிதா வகையாகச் சிக்கினார்.

அந்த ஓவரில்தான் ரஜிதாவை விளாசித் தள்ளினார் ஹென்றி. 5 பந்துகள் பவுண்டரிகளுக்குப் பறந்தன அதில் ஒன்று அற்புதமான நேர் சிக்ஸ். ஆனால் அசித பெர்னாண்டோ ஹென்றியின் கால்களுக்குள் சரக்கென இறக்கிய யோர்க்கர் அவரை வெளியேற்றியது.

இடது கை வேகப்பந்து வீச்சாளர் நீல் வாக்னர் தன் பங்குக்கு 3 டவரிங் சிக்சர்கள் ஒரு பவுண்டரியுடன் 27 ஓட்டங்களை 24 பந்துகளில் விளாச இலங்கையின் முதல் இன்னிங்ஸ் ஓட்டங்களான 355 பின்னால் செல்ல நியூஸிலாந்து அதைத் தாண்டி முன்னேறியது. நியூஸி அணியின் கடைசி 4 பேரும் (தொழில்முறைபந்து வீச் சாளர்கள்) 124 பந்துகளில் 126 ஓட்டங்களை அடிக்க விட்டு இலங்கை சொந்தச் செலவில் சூனியம் வைத்துக் கொண்டது. ஒரு கட்டத்தில் 188/6 என்று இருந்த நியூ ஸிலாந்தை 240-50 ஓட்டங்களுக்குள் மடக்கியிருக்க வேண்டும். அப்படிச் செய்திருந்தால் 105 ஓட்டங்கள் முன்னிலை பெற்றிருக்க முடியும். வெற்றி வாய்ப்பும் கூடிவந்திருக்கும்.

நியூஸி பந்துவீச்சாளர்கள் துடுப்புக் களைச்சகட்டுமேனிக்குச் சுழற்ற அவர்களின் வெற்றிடத்தைக் கணிக்கத் தவறிய இலங் கைப் பந்துவீச்சாளர்களால் அவர்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

நியூஸிலாந்து பின்வரிசையின் காட்டடியால் கலங்கிப் போனதன் விளைவோ என்னவோ தனது 2ஆவது இன்னிங்ஸில் இலங்கை தடுமாறுகின்றது. வெறும் 83 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை இழந்துள்ளது. இந்தப் பயம் மற் றும் தடுமாற்றத்திலிருந்து நாளை இலங்கை அணியினர் வெளிவரும் துணிவைப் பெறவில்லை என்றால் ஆட்டத்தை இழக்கும் நிலையை இலங்கை அடையும்.

# வடக்கின் பெரும் போரில் யாழ்.மத்தி அபார வெற்றி













வடக்கின் பெரும் போர் என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரிக்கும் இடையிலான கிரிக்கெட் போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 9 விக்கெட்டுக்களால் வெற்றியீட்டியது.

வடக்கின் பெரும் போர் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் வியாழக்கிழமை தொடங்கியது. இம்முறை மூன்று நாட்களுக்கு ஆட்டம் திட்டமிடப்பட்டிருந்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ் பரியோவான் கல்லூரி களத்தடுப்பை தெரிவுசெய்தது.

துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி தனது முதல் இன்னிங்ஸிலே 66 பந்துப்பரிமாற்றங்கள் வரை துடுப்பெடுத்தாடி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 279 ஓட்டங்களைப் பெற்றது.

அஜே 74 ஓட்டங்களையும், விதுன் 71 ஓட்டங்களையும் சன்சஜன் 42 ஓட்டங்களையும் பெற்றனர்.

அபிகே 3 விக்கெட்டுகளையும், கஜகர்ணன், விதுன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தியிருந்தனர்.

பதிலுக்கு தனது முதலாம் இன்னிங்ஸை ஆடிய யாழ்பாணம் பரியோவான் கல்லூரி 51.2 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 127 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

பென்சர் ஜெசியல் அதிகபட்சமாக 43 ஓட்டங்களையும், சபேசன் 34 ஓட்டங்களையும் பெற்றனர். நியூட்டன் -4, கஜன் -3 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

153 ஓட்டங்கள் முன்னிலை பெற்ற மத்திய கல்லூரி பலோ ஓன் முறையில் இரண்டாம் இன்னிங்சிற்காக முதலில் துடுப்பெடுத்தாடும் சந்தர்ப்பத்தை யாழ் பரியோவான் கல்லூரிக்கு வழங்கியது.

இரண்டாம் இன்னிங்ஸில் பரியோவான் கல்லூரி 54 ஓவரில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 160 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

ஜனந்தன் 26 ஓட்டங்களையும், பென்சர் ஜெசியல் 25 ஓட்டங்களையும் பெற்றனர். பருதி -4, நியூட்டன் -3, விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

9 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு களமிறங்கிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி தொடக்கத்திலேயே ஒரு விக்கட்டை இழந்தது. எனினும் 9 ஓட்டங்களைப் பெற்று 9 விக்கெட்டுக்களால் வெற்றியீட்டியது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.03.2023 இல் வெளியிடப்பெற்றது.